உ

4220.

கடவுள்துணை.

பதினெண்சித்தர்களில்
மகாமகத்துவம்பொருந்திய
தன்வந்திரிபகவான்
யூகிமுனிக்குஉபதேசித்த

# வயித்தியகாவியம் ஆயிரம்.

இஃது,
மதுரை - புதுவை - சென்னை
இச்சங்கங்களில்
தமிழ்த் தலைமைப் புலமை நடாத்திய
களத்தூர்
வேதகிரிமுதலியார்
குமாரர்கள்
ஆறுமுகமுதலியாராலும்
ஆயுள்வேதபாஸ்கரன்
கந்தசாமிமுதலியாராலும்
பற்பல ஏட்டுப்பிரதிகளைக்கொண்டு
ஆராய்ச்சிசெய்து,

இட்டா
குப்புசாமிநாயுடு
அவர்களது
குவலயாரஞ்சனி அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1888.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

# விளம்பரம்.

இதனால் யாவருக்கும் அறிவிப்பது யாதெனில் சென்னை பட்டணம் பெத்துநாயகன்பேட்டை தாண்டவராயபிள்ளை வீதியு வில் வடவண்டைவாடை (உக) வது கிரகத்தில் ஸ்தாபித்திருக்கும் குவலயரஞ்சனி முத்திராட்சரசாலாதி காரியராகிய இட்டா குப்புசாமிநாயுடு. அவர்களிடத்திலும், மதுரையில ஷாப்புவியாபா ரஞ் செய்யும் தி. ராமசாமிபிள்ளை அவர்களிடத்திலும் தெலுங்கு தமிழ் தெலுங்கு கிரந்தம் துலுக்கு முதலான புத்தகங்களும் வைத் தியசாஸ்திரங்களும் ஜோசியங்களும் நூதனஜாவளிகளும் இங்கிலீஷ் புத்தகங்களும் நாவலர் புத்தகங்களும் புஷ்பரதசெட்டியார் புத்தகங்க ளும் இன்னும் தேவையான புத்தகங்களும் சரசமானவிலைக்கு மேல் படியானவர்களிடத்தில் வேண்டியவர்கள் பெற்றுக் கொள்ளலாம்.

இப்படிக்கு.

இட்டா. குப்புசாமிநாயுடு.

BHISHAKRATNAN C. S. RAGHAVAN
Ayurvedic & Siddha Physician



கடவுள் துணை.

# வயித்திய அட்டவணை.


| பொருள். | பக்கம். |
| --- | --- |
| ...பு | ௨ |
| ...ப்பு | ௩ |
| ...ா | ௪ |
| ...ற்குசெந்தூரம் | ௫ |
| ...திற்குகியாழம் | ,, |
| ...மருந்து | ௬ |
| ...குழம்பு | ௭ |
| ...ருந்து | ௮ |
| ... | ,, |
| ...டுக்குமருந்து | ,, |
| ...க்கும்உப்பு | ௩ |
| ...காதரம் நீராம் ...லுக்குமருந்து. | ௯ |
| ...குமருந்து | ,, |
| ...த்திற்கெ | ௰ |
| ...லைநோய்க்கும் நசியாக. | ,, |
| ...வடிவதற்கெண் | ,, |
| ...ஞ்சன்த்திற்கு | ௰௧ |
| ...ணுக்குநீர்வடி தலுக்குமை. | ,, |
| ...ஞ்சனவலிக்கு | ,, |
| ...வியாதிக்குமருந்து | ௰௨ |
| ...வெள்ளைக்குமருந்து | ,, |
| ...பற்பம் | ,, |
| ...பற்பம் | ௰௩ |
| ...பற்பம் | ,, |
| மிருதாற்சிங்கிபற்பம் | ,, |
| சகலமேகங்களுக்கிடிவல்லாதி | ,, |
| காவியப்புகழ்ச்சி | ௰௫ |
| தடிப்புஅரையாப்புக்கு | ,, |
| பிளாஸ்திரி | ௰௬ |
| அரையாப்புக்கெண்ணை | ,, |
| கொறுக்குப் புண்ணுக்குப் பிளாஸ்திரி | ,, |
| சகலரணங்களுக்குமுலாம் | ௰௭ |
| சத்திவிக்கலுக்கு | ,, |
| மதமூர்ச்சைமயக்கந்தீரம | ,, |
| நெற்றிசன்னிக்குத்தயிலம் | ௰௮ |
| மண்டைக் குடைச்சலுக் குத்தயிலம் | ,, |
| பித்தத்திற்குமருந்து | ௰௯ |
| தலைசுழற்றல்வாந்திக்கு | ,, |
| பித்தவெடிப்புக்கு | ௨௰ |
| சிலேத்மம் ௯௬ தயிலம் | ,, |
| மூலநோய்க்குமருந்து | ,, |
| குழந்தைகள்காலிசுவு கையிசுவுக்குமருந்து | ௨௧ |
| தீராவெள்ளைக்கு மஞ்சள் வெள்ளைகக்கும் | ,, |
| அண்டவிரைவாதத்திற்கு | ௨௨ |
| கெந்தகற்பம் | ௨௩ |
| தாம்பரபற்பம் | ,, |

| பொருள். | பக்கம். |
|---|---|
| வெள்ளிபற்பம் | உச |
| தங்கபற்பம் | ,, |
| நாகபற்பம் | உரு |
| வெள்வங்கபற்பம் | ,, |
| கரிவங்கபற்பம் | ,, |
| தூராபற்பம் | உசு |
| அயபற்பம் | ,, |
| வெண்கலபற்பம் | உஎ |
| இரசபற்பம் | ,, |
| பாஷாணக்கட்டு | உஅ |
| கண்பூவுக்குமருந்து | ,, |
| சாயரட்சைசுரத | ,, |
| நீரிழிவுக்கு | உகூ |
| நீர்ச்சுறுக்குக்கு | ,, |
| வில்வாதித்தயிலம் | ,, |
| வயிற்கடுப்புக்கு | ஙய |
| தாம்பரசெந்தூரம் | ,, |
| மகாயேலாதித்தயிலம் | ,, |
| அயமணிகலாபசெ | ஙக |
| குன்மம்-கூ-இரத்தி | ஙஉ |
| சிரோரத்தின்மத | ,, |
| திரும்வியாதி | ஙங |
| மதனகோலாகலரத்நாவளி | ,, |
| சூரணத்தினுசுகள் | ஙச |
| இரசவகை | ஙரு |
| இதற்குசிரோராத்தி | ஙசு |
| கபாலக்கூந்தல் | ஙஎ |
| சடதாரி | ,, |
| மண்டோதரி | ஙஅ |
| சுகுந்தமாது | ,, |
| பிதாம்பரக்குளி | ஙகூ |
| இரத்தவாந்திக்கு | ,, |
| மனோரஞ்சிதரத்ந | சய |
| திரும்வியாதி | ,, |
| பாண்டுகாமாலைக்கியாழம் | சக |
| பாரிசாதசங்கரத் | ,, |
| கெந்தகம் | சஉ |
| களங்கு | ,, |
| நாகவித்தை | ,, |
| இரசபற்பம் | சங |

| பொருள். | பக்கம் |
|---|---|
| பாஷாணக்கட்டு | சச |
| இரும்புசெம்பு | சரு |
| களங்கம் | சசு |
| துருசு | ,, |
| மகாவில்வாதித்தயிலம் | சஎ |
| களங்குமார்க்கம் | ,, |
| இரசமெழுகு | சஅ |
| சங்குபாஷாணக்கட்டு | ,, |
| தாம்பரபற்பம் | சகூ |
| வசியம் | ,, |
| தீராதவாந்திக்கு | ருய |
| சகலமேகங்களுக்கு | ருக |
| கபடமாத்திரை | ருஉ |
| சோகைகாமாலைக்கு | ,, |
| பித்தவெடிப்புக்கு | ,, |
| மூத்திரப்பிரமியம் | ருங |
| நரித்தலைவாத | ,, |
| ஆருரணப்புகை | ,, |
| சகலவாயுவுகுத்த | ,, |
| சகலகிராந்திக்கு | ருச |
| உக மேகந்திரச் | ,, |
| எலிவிஷத்திற்கு | ருரு |
| பதினெண்குட்ட | ,, |
| பெண்கள்மருந்து | ,, |
| கெற்பம்வின்ன | ருசு |
| கெற்பமுண்டாக | ,, |
| சுகபேதி | ,, |
| வாடை | ருஅ |
| துத்தநாகக்கட்டு | ருகூ |
| தீராதவாந்திக்கு | சுஉ |
| நூற்றெருகுப்பு | சுங |
| தங்கபற்பம் | ,, |
| நெல்லிக்காய்கெ | ,, |
| மண்டூரபற்பம் | சுச |
| நீலாஞ்சனக்கல் | ,, |
| அரிதாரபற்மம | ,, |
| மகாசாதிலிங்க | சுரு |
| கொச்சிவீரபற்பம் | ,, |
| அன்னபேதிபற்பம் | சுசு |
| இரத்தினபற்பம் | ,, |

| பொருள் | பக்கம் | பொருள் | பக்கம் |
|---|---|---|---|
| பாஷாணபற்பம் | ,, | முப்புசுண்ணம் | ௮௬ |
| உப்புபற்பம் | ,, | மூன்றுவகைசுன | ,, |
| பரிசைவேதை | ௬௭ | முப்புசெயநீர் | ௮௭ |
| பேய்த்துமட்டிககா | ,, | வேதைக்குஆறு | ,, |
| சகலவாய்வுகளுக்கு | ௬௮ | அம்மாவாசி | ௮௮ |
| கிலேட்டுமரோகத் | ,, | ஓங்காரசத்தி | ,, |
| அஷ்டகுன்மத்தி | ,, | சகலத்துக்குமந்திரவாள் | ௯௰ |
| மேகரசாயனம் | ,, | பீடைபோகம் | ,, |
| நிருவிகற்பம் | ௭௰ | பாக்கியமுண்டாம் | ௯௧ |
| திருவுளச்சிவன் | ௭௧ | கபாலபீனிசத்தி | ,, |
| மனமரிய | ,, | விஷமுஷ்டித்தயிலம் | ,, |
| காயாதிகற்பசமா | ,, | குஷ்டத்திற்கு | ௯௨ |
| பூரணமெழுகு | ௭௨ | சிழிரத்தம்வயிற் | ,, |
| அமூர்தரசபாத | ,, | தாளவங்கசு | ௯௩ |
| கலைக்ஞானம் | ௭௩ | கரிவங்கசுண் | ,, |
| சர்வஞானமுக | ௭௪ | கர்ப்பூராதிசுண் | ,, |
| நாரணைப்பிரம் | ௭௫ | சவர்க்காரதுருசு | ,, |
| அமரபட்சபூர் | ,, | சாரசுத்தி | ௯௪ |
| பிரமாதியான | ,, | தாரநீர் | ,, |
| ருத்திரதியானம் | ,, | சீனைச்சுண் | ,, |
| மயேஸ்வரிதியானம் | ௭௬ | நிமிளைச்சுண் | ௯௫ |
| சதாசிவதியானம் | ,, | பரிசுண்ணம் | ,, |
| அத்தோயதியானம் | ,, | வெண்காரக்கட்டு | ௯௬ |
| நன்னையறியசத்தி | ௭௭ | அண்டத்தயிலம் | ,, |
| நேத்திரதியானம் | ௭௯ | நாகக்கட்டு | ,, |
| சத்திபூசை | ௮௰ | நாகசெந்தூரம் | ௯௭ |
| மயேஸ்வரிபூசை | ௮௧ | நாகசுண்ண | ௯௮ |
| ஆறுவகைதியானம் | ௮௩ | சவ்வீரவைப்பு | ௯௯ |
| சோழிசுபானமுத | ,, | வெடியுப்புக்கிரா | ௱ |
| அபானமுத்திரை | ,, | சிவப்புசவ்வீரவை | ௱௧ |
| மகாதிருவினிமுத | ௮௪ | பறங்கிப்பட்டை | ௱௨ |
| தமாஷ்டிசோபி | ,, | பறங்கிப்பாஷா | ௱௩ |
| மோகினிமுத்தி | ,, | நூல்முறை | ,, |
| சிவாயகுருமுத | ,, | சோறைவீரவை | ௱௪ |
| முத்திரைக்குவிப | ,, | துருசுகுரு | ௱௫ |
| திருவினிமுத்தி | ௮௫ | குளிகைவிபா | ௱௬ |
| யோனிமுத்தி | ,, | லிங்கமெழுகு | ,, |
| ஐந்துவிரலுக்கும்பெயர் | ,, | வெள்ளைமெழுகு | ,, |
| ஓங்காரப்பொருள் | ,, | இரசிதவைப் | [illegible] |

| பொருள். | பக்கம். | பொருள். | பக்கம். |
|---|---|---|---|
| சீவற்கெவுரி | ௱௮ | தாம்பூலமகிமை | ௱௨௭ |
| சிவப்புநவச் | ௱௯ | சரக்குசுத்திசூதசித்திகுளி | ,, |
| குருபத்தி | ௱௰ | தந்திவிரைசுத்திவாள | ௱௨௮ |
| சூதக்களங் | ௱௰௧ | காரம் | ௱௩௰ |
| சூதக்கட்டு | ,, | தீரும்வியாதிகள்பேர்அனு | ௱௩௨ |
| துருசுவைப்பு | ௱௰௨ | சூடன்ரவிபீசம் | ௱௩௪ |
| பச்சைத்துரு | ,, | வெங்காரம்சுக்குவெங் | ,, |
| துருசுகள | ௱௰௪ | சாரம்வடுகன்நாதம்துரிசி | ௱௩௫ |
| துருசுசெங் | ௱௰௫ | வியாதிக்குறிப்புலட்சண | ௱௩௯ |
| நால்சார்புவிபரம்ஜங்கோ | ௱௨௪ | வாதகுணம்நாலுக்கும் சமுதாயகுணம்-௨. | ௱௫௧ |
| கோரக்கர்மூலாடுடுலகிரி | ௱௨௫ | | |
| பத்துக்குரெண்டுபணம் | ௱௨௯ | | |


வயித்திய அட்டவணை

முற்றிற்று.

Proprietor.
Ayurvedic & Siddha Physician.

உ

கடவுள்துணை.

பதினெண்சித்தர்களில்மகாமகுத்துவம்பொருந்திய

தன்வந்திரிபகவான்

திருவாய்மலர்ந்தருளிய

# வயித்தியகாவியம் ஆயிரம்.

ஆதிமுதற்பூரணமாங்குருவேபோற்றி
அப்பாலுக்கப்பாலுமடியேபோற்றி
சோதியெனும்சுடரொளியேசூடாசாசூட்சம்
சூட்டுகின்றம்பரொளியைச்சுடரேபோற்றி
சாதியெனும்நாதாக்கள்குருவின்பாதம்
சகலபுவனகங்களெல்லாமடிதாள்போற்றி
வாதியெனும்சற்குணநிதியேபோற்றி
வாகானஅண்டரத்தின்பொருளேபோற்றி. (க)

போற்றினேன்தன்வந்திரிபகவான்தானும்
புனிதமுடன்நந்தீசர்பாதம்போற்றி
சாற்றினேன்வயித்தியகாவியந்தானிந்தநூல்
சகலகலைக்கியான்முதல்சரக்குவைப்பு
தூற்றினேன்லேகியங்கள்கிருதமெண்ணெய்
துணையானபற்பங்கள்செந்தூரங்கள்
ஆற்றினேன்கிஷாயங்கள்ஆக்கிசாணம்
அன்பானநேத்திரமையனந்தமாமே, (உ)

அனந்தமாம்பிளாஸ்திரிகள் தயிலப்போக்கும்
அன்பானசற்பத்துதிராவகங்கள்
சனந்தனமாமகற்கவகைசெயநீர்போக்கு
சாற்றினேம்தொந்தங்கள்கோடாகோடி
வனந்தனமாம்சிலையெண்ணெய்கபாடமாத்திரை
வளமானசாந்துக்கள்மைகள்கோடி
கனந்தனமாங்கருவுக்களனந்தம்வித்தைக்
காட்டினேன்தன்வந்திரிபகவான்தானே. (௩)

தானானவயித்தியகாவியந்தானிந்தநூல்
சாற்றினேன்ஆயிரமாமிந்தநூலு
கோனானவிந்நூலுக்கொருநூலில்லை
குறிப்பாகமாந்தர்கட்குபிழைக்கவென்று
பானனக்காவியத்தைப்பாடிஎந்தன்
பாங்கானகைதனிலேவைத்தேனப்பா
தேனனயிந்தநூல்சித்தர்கூடி
தேடியேவணங்கியென்னைநூல்கேட்டாரே. (௪)

கேட்டபோதுநூல்கொடுத்தேன்சித்தர்க்கென்று
கிருபைபெறமனமகிழ்ந்துமாந்தற்கீய்ந்தார்
நீட்டமுள்ளபெரியோர்கள்தபோதனர்கள்
நேரானதத்துவத்தோர்நிலைத்தபேர்கள்
வட்டமாயிந்நூலைவெளிவிட்டாக்கால்
மகாகோடிபாவம்வந்துநேரும்நேரும்
பூட்டகமாமிக்காவியமாயிரந்தான்
பூட்டினேன்நாடிமுதல்பூட்டினேனே. (௫)

நாடிக்குறிப்பு.

காரணமாமாந்தருக்குநாடிசொல்வேன்கருவான எழுவத்தீராயிரந்தான், பூரணமாமதைக்குறிக்கித்தசநாடியாகப்பூட்டினேன் குருநாடிசூதநாடிதோரணமாம் வாதமென்றநாடிதானும்தொகுப்பானகா

ணகத்து மயில்போலாகும், வாரணமாம்பித்தமது அட்டைபோலாம் வளமான சிலேத்துமமது தவளையாமே. (௬)

ஆமேதான்நாடிமூன்றோடிற்றூனல் அப்பனேசன்னியதுவந்து கூடும் போமேதான்வாதமதுதிமிர்த்துநின்றால் பொல்லாதஎமனுக்குஅறுதியாகும், சமேதான்பித்தமதுஅழுந்திற்றூனல்சார்வாக அசாத்தியமுமுடனேநேரும், காமேதான்சிலேத்துமமதுகோபித்தாக்கால் சடுதியில்எமன்பதி சேருவாரோ. (௭)

சேருவார்வாதத்தில்பித்தமாகில் செழிப்பானவார்த்தைமுதல் குழறிப்பேசும், கூறுவாபித்தத்தில்வாதமாகில் குணமானதிரேகமது வெளுப்புமாகும், தீருவார்சேத்துமத்தில்பித்தமாகில்திரேகமது மஞ்சனிக்கும்மலம்வெளுக்கும், ஊருவார் தொந்தரத்திரமாகிநின்றால் வுடல்வலிக்கும் நீர்வசிக்குமுண்மைபாரே. (அ)

பாரப்பாவாதமதுதித்திப்பாகும் பாங்கானபித்தமது கசப்புமாமே, சிரப்பாசேத்துமமதுபுளிப்புமாகும் சினப்பான தொந்தமது வியாதிமெத்த, கூறப்பாசப்த்தங்கள்மாறிப்போகும் குடிலமாங்காந்தலதுஅதிகமுண்டாம் தீரப்பாமேனியது கிருகிப்போகும்திறமான நாடியின்விபரங்காணே. (௯)

காணவேசேத்துமத்தில்வாதமாகில் கடினமாம் பிடரியது வலிப்புமுண்டாம், தோணவேசுரம்பெலாம்வலித்துநிற்கும் துடியானகண்டம்துவலித்துக்காணும், ஊணவேபித்தத்தில்நாடிதானும்வுற்பனமாய்வாதத்திலுறையுமாகில், ஆணவேபித்தமும்வாதங்கூடில் அரணைவால்துடிபோலத்துடிக்கும்பாரே. (௰)

(மரணக்குறிப்பு.)

பாரோதான்நோயாளியெழுந்துநிற்கில் படைவுடனேமூச்சுமதுவதிகங்கொண்டால், சீரோதான்நேத்திரமதுவட்டமிட்டால் சிகப்பானமுழியதுவும்திரும்பிவழிபார்த்தால், துரோதான்சேத்துமமது தொண்டைக்கட்டும்தொலையாதசெஞ்செரிப்புமேற்சுவாசம, வீரோதான்மேனியதுகருகல்காணும்மேதினியில்வியாதியதுசெனிக்கும்வாறே. ( )

வாஞனபித்தமதுவறையுமானல்வளமானசேத்துமமது தொண்டைடைக்கட்டும், கூஞனவாதமதுகுறிகிற்றுனல்குறிப்பானமூத்திரமதுமஞ்சள்போலாம். நீருனபழுவெலுமபுரத்தஞ்சுண்டி நிலையானயாக்கைக்குஅறுதிநேரும், தாஞனசெடலமதுசுருக்கிற்போகும் சுந்தரனேநாடிகுறிதெளிநதுபாரே. (யஉ)

# இனிமேல் நூல் ஆரம்பம்

(சுரமாத்திரை)

பாரப்பாமாந்தருக்குசுரமேவந்தால்பாடுகிறேன் மருந்தொன்று சொல்லக்கேளும், சீரப்பாசுக்குடனே அரத்தபோமம்சிறப்பபான வாய்விளங்கமதுரங்கோஷ்டம், நேரப்பாகுங்குமப்பூ கோரோசனந்தான் நிலையானபச்சையென்றபூரஞ்சேரு, ஊரப்பாபத்திரியும்கிராம்புப்பாட்டை வுத்தனே பேய்ப்புடலைபாடஞ்சேரே. (யங)

சேர்த்துமேசிறுதேக்குசிறுகாஞ்சோறி சீந்தலொடு நன்னரிமுத்தக்காசு, போர்த்துமேதேவதாரம்பொருத்தச்சுக்கு பேரானவகைக்கு விராகன்ரெண்டு, கார்த்துமேசரக்கெல்லாம் மொன்றுய்க்கூட்டிகனமானசூரணமாய்ச்செய்துகொண்டு, தூர்த்துமேதேன்விட்டுவறைத்துமேதான்சிறுன்றிமணிபோலத்திரட்டிடாயே. (யச)

திரட்டியேநாளொன்றுக் கிருபோதுந்தான்றிடமான யிஞ்சிச்சாற்கியாழந்தன்னில், உருட்டியேசீனியில்பனவெல்லந்தான் வுத்தனே கைப்பரிட்சைகண்டியீய்ந்தால், வெருட்டிவரும்அறுபத்துநான்குசுரந்தான்வீடுவிட்டு காடுறையுமாதேகேளாய், மருட்டிவிடும்அசாத்தியங்கள் சாத்தியங்கள்மருணீங்கிஎப்போதும்வாழலாமே. (யரு)

வாழலாம் பத்தியமோ புளிப்புமாகா வளமானவாசனையுங் கந்தமாகா, காழலாம் சிவப்புவஸ்திரம் கறுப்புமாகா கனமான செய்முதலும் மிறைச்சியாகா, நீழலாம் தித்திப்புத் தயிருமாகா நேரான சீத

ளப்பண்டங்களாகா, வீழலாம்பத்தியமேழுநாள்தான் விபப்புடனே கார்த்திருந்துவியாதிப்போக்கே. (௰சு)

போக்கானமறுபத்தியமூன்றுநாள்தான் புனிதமுடன் கார்த்திருந்து நீராவாரு, நீக்கானசையோகமூன்றுதிங்கள் நிலையானபத்திமோடிருந்தாயானல், வாக்கானதிரோகமதுகாந்தியுண்டாம் வாகனசட்டையது தள்ளும்பாரு, தூக்கானயிக்குளிகையாருஞ்சொல்லார் துடியான மாத்திரையாம்குளிகையாமே. (௰எ)

(வாதசுரத்திற்குசெந்தூரம்.)

ஆமேதான்வாதத்திலெடுத்தகாய்ச்சல் அடவாகப்போவதற்கு செந்தூரங்கேள், மோமேதான்லிங்கமொடுபலமும்வாங்கு புகழானமுலைப்பாலில்சுத்திசெய்து, சாமேதான்வெடியுப்புட்படிகாரந்தான் சமர்த்தான கருவோடு வீரங்கூட, நாமேதான்மூன்றையுந்தான்சுன்னஞ்செய்து நலமானவெண்கருவால்அரைத்திடாயே. (௰அ)

அரைத்துமேலிங்கத்திற்கங்கிப்பூட்டி அழகானமணல்மறைவிற்புடந்தான்போடு, நிறைத்துமேபத்துமுறையிப்படியே போடுநேரான லிங்கமதுவுருகிக்கட்டும், விறைத்துமேலிங்கத்தையெடுத்துக்கொண்டு வெண்சாரைக்குகைனிலேபொதிந்மிமூடி, பறைத்துமே குக்குடமே போட்டாயானல் பளிங்கற்றசெந்தூரமாகுந்தானே. (௰கூ)

தானனசெந்தூரம்தேனிலேதான்தாக்குவாய் அரிசியிடைதாக்கினுக்கால், கோனனவாதசுரமெங்கேபோச்சு குறிப்பான தலைசுழட்டல்யெங்கேபோச்சு, வேனனதலையிடியும்வாய்வுமேதான் வீடுவிட்டுக்காடுரையுங்கண்டீர்பாராய், மானனயிம்மருந்து யார்க்குக்கிட்டு மண்டலத்தில் சிவயோகிக்கிட்டுந்தானே. (௨௰)

(பித்தசுரத்திற்குக்கியாழம்)

கிட்டுமேபித்தசுரம் வந்தபேர்க்கு கெடியானகியாழமொன்று சொல்லக்கேளும், அட்டுமேகொடிவேலின்கோஷ்டம்பீர்க்கு அட்வானபேப்புடலை சித்தாமுட்டி, இட்டுமேகூவிளம்வில்வவோடும்

யியலானயேலமொடு நெல்லிமுள்ளி, துட்டுமேநீலிவேர் வில்வவே வேரும்சிறப்பானநெற்பொரியும் கூடச்சேரே. (உக)

சேர்த்துமேசிவபயறுசுக்குக்கிராம்பு சிறப்பானவாய்விளங்கம் கடுக்காய்த்தோலும், கூர்த்துமைஎட்டிவிரை தேத்தான்கொட்டை குணமானபிரம்பின்மூலங்கண்டங்காரி,நீர்த்துமேபடிசலம்விட்டுக்கா ய்ச்சி, நேராரவெட்டொன்ருயிறக்கிக்கொண்டு, போர்த்தும்மமூன்று வேலைப் புனிதமுடன்தானருந்த சுரமும்போமே. (உஉ)

போமேதான்பித்தசுரம்சுழற்றல்வாய்வு பொருமலொடுமந்தார சுரமும்போகும், ஆமேதான்தலைமயக்கம் அலரல்சன்னிஅடவான மதமூர்ச்சையனைத்தும்போகும், காமேதான்காலைமாலையனைத்துந்தீ ரும் கடினமாம்பித்தவெட்டையனலும்தீரும் நோமேதான் சுரங்க ளெல்லாமகன்று போகும்நோயற்றப்பாண்டமெனச்செப்பலாமே.

(சன்னிக்குமருந்து)

செப்பலாம்சன்னிக்கு மருந்துசொல்வேன் தெளிவான வேப் பெண்ணெய்ப்படிதானென்று, ஒப்பலாங்கார்த்திகைக்கிழங்கின்னி றும்வுயர்வானவசம்பதுவும்குழவிந்தங்கூட, அப்பலாம்வெள்ளுள்ளி விராகனைந்துஅழகானமரமஞ்சள்சமயனுய்க்கூட்டி, தொப்பலாம்கா யமதுவிராகனைந்து தெளிவானஓமமதுவிராகனைந்தே. (உ௩)

அஞ்ஞானசதகுப்பைவிராகனைந்து அன்பானமுசுறுமுட்டை சாதிக்காயும், பிஞ்சானவெங்தோன்றிவிராகன்ஐந்து பேரானயிவை யெல்லாமொன்ருயாட்டி, கஞ்சானயெண்ணெயிலேவென்ருய்ச்சேர் த்து கருவாககடுகுகுபந்தன்னில்வாங்கி, நஞ்சானசீஷாவில்விட்டுநீ யும்நலமாகத்தயிலமதைப்பதனம்பண்ணே. (உ௫)

பண்ணப்பாமேனியெங்கும் பூசிஞக்கால் பாங்கானசன்னியது வுடல்விட்டோடும், நண்ணப்பாவாதமுதல்குடைச்சல்போகும் நல மானகால் குடைச்சல்கரணைதீரும், திண்ணப்பாவுள்ளுக்குகொடுக்க லாகா திரேகமதுசாணமிட்டுக்கழுவிப்போடு, அண்ணப்பாஏங்கியே திரியவேண்டாம் அரனெனக்குத்தாமுறைத்த முறையிதாமே ()

ஆமேதான்மாதவிடா வலிகொண்டோர்க்கு அழகான வுப்பொன்று இயம்பக்கேளும், போமேதான்நாழியுப்பு சேர்த்தானப்பாபுனிதமுள்ளன்கரந்தைச்சாற்றன்னலாட்டி, நோமேதான்காயவிட்டுப் புடத்தைப்போடு நுணுக்கமுள்ளகோழிப்புடம் அடவாப்போடு, சாமேதான்வுப்பதுவும் வெந்துநீறிசார் வானமாசற்றப்பற்பமாமே. (உஎ)

பற்பத்தின்தனமகிமையென்னசொல்வேன் பளிங்குபெற சூதத்தின் வாயுவுதன்னை, நிற்பமாய்யிருவேளைமூன்றுவேளை நேராகக்கொடுத்துவிட வலிதான்போகும், அற்பமென்றுநினையாதே வுப்பின்மாற்கம் அதிகவேகமடாயாருஞ்சொல்லார், சொற்பமாய் செய்வேனென்பார் செய்யமாட்டார் செகத்திலேயிந்தவித்தையதீதங்காணே. ()

(அகஸ்தியர்குழம்பு.)

காணவே குழம்பொன்று வுரைப்பேன்கேளீர் கருவானவாளம்துபலமோபத்துதோணவே லிங்கமது பலமோ வொன்று துணிவான பூரமது பலமோவொன்று, யீணவேவங்காரம்பலமோ வென்று யியாலானகடுக்காய்த்தோல் பலமுமொன்று, மாணவேவெடியுப்புப் பலமோவொன்று மறைப்பானமுப்பூவும்பலமுமொன்றுமே. (உகூ)

ஒன்றுனபத்திரியுங்காலதாக வுயர்வானசுக்கதுவும்அறையதாக, நன்றுனவாய்விளங்கம்காலதாக நயமாவாகையதுசமனதாக,குன்றுனரோகணியுங்காலதாக குறிப்பானதிப்பிலியும் அறையதாக,பன்றுகப்பொடித்துமேசூரணித்துப் பாங்காகமுக்கண்ணின்பாலாலாட்டே.

ஆட்டியேஅறுபதுசாமமாட்டு அழகானசிமிழ்தனிலே பதனம்சண்ணு, பூட்டியேரோசகபூரகமுஞ்செய்து பொலிவான வாலேக்குத்தாபதிபம் மாட்டியேகும்பித்துவணங்கிநின்று மகிட்சிபெறநாதாக்கள்பாதம், போற்றி தீட்டியேமூன்றுநாள்கொண்டாயானல் தெளிவான வாதபித்தங் கழன்றுபோமே. (௩௧)

போமேதான்பேதியதுஅதிகங்கண்டால் பொல்லாத வசம்பதனைத்தட்டிக்காய்ச்சு, நாமேதான்சொன்னபடிகொடுத்தாயானல் நவிலவொண்ணுபேதியதுயடங்கிக்கட்டும், ஆமேதான்யிக்குழம்பு யாருஞ்சொல்லார் அடவாகமாந்தருக்கு யெளிதாய்ச்சொன்னேம், போ

மேதான்யின்னமொருபேதிசொல்வேன் புகழ்ச்சியாய் எடுத்துரைப் பேன்கேளுகேளே. (௩௨)

(பேதிக்குமருந்து.)

கேளப்பாமாந்தருக்குவிரோசனந்தான்கெடியான வாளமது பல மோவைந்து, நீளப்பாகடுக்காய்த்தோல்பலமேரண்டுநேரானபன்னீர் ப்பூபலமோரண்டு, வாளப்பாயிந்துப்புப் பலமோரண்டுவெள்மானரோ கணியும்பலமோரண்டு, சூளப்பாசுக்கதுவும்பலமோரண்டு சுகமான வெடியுப்புப் பலமுங்கூட்டே. (௩௩)

கூட்டியேகஞ்சாவின்கஷாயத்தாலேகுடிலமாய் நாற்சாமம்ஆட் டுஆட்டு, தீட்டியேமறுபடியும்கடுக்காய்க்கியாழம் திறமாகநாற்சாம மாட்டுஆட்டு, பூட்டகமாமிம்மருந்தைப்பதனம்பண்ணு பெரியோர் கள்சிறியோர்கள் பாலருக்கும், வாட்டமுடன்கொடுத்திடவேபேதியா கும்வளமான யிம்மருந்தைவெளிவிடாதே. (௩௪)

(சுகபேதி)

வெளிவிட்டால் வெகுபாவமர்ந்தர்கெய்து விஷையமாமின்ன மொருசுகபேதிகள், அளிவிட்டஅழிஞ்சிலிடதயிலம்வாங்கிஅப்பனே அண்வீக்காடியிலேயிய, களிவிட்டவாதபித்தநீரும்போகும்கசடற்று திரேகமது சுத்தியாச்சு, புளியிட்டகாடைபுராவுள்ளான்கூட்டுப்புரா தனமாமிம்மருந்து புகழ்ச்சிபாரே. (௩௫)

(பெரும்பாட்டுக்குமருந்து)

பாரப்பா பெரும்பாடு வந்தபேற்கு பாங்காக நாவலுடப் பட் டைவாங்கி, நேரப்பா எருமைமோர் தன்னைவிட்டு நிலையாகயிடித் துமேபிழிந்துகொண்டு, கூரப்பாகழனீரில்கொடுத்தாயானல் கூண் டோடேபாண்டுபெருபாண்டுதீரும், சீரப்பாபத்தியந்தா னிதற்கோ யில்லை சிறப்பாகத்தன்வந்திரியி யற்றினேனே. (௩௬)

(குன்மம்ஆறுக்கும்உப்பு.)

இயற்றினேன் குன்மமென்றவாறுக்குந்தா னியல்பாகவுப்பொன் சொல்லக்கேளும், கயற்றினேன்வுப்புசேர்படிதானென்று கருவான

தும்மட்டுச்சாற்றினாலே; பயற்றினேன் அறுபத்துநாலுசாமம் பாங்காக அறைத்துபுடமிட்டாக்கால் கழற்றினேன்பற்பமது சொல்வேன் நாதாக்களிதுபோலேசொல்லாரன்றே. (௩௭)

சொல்லாறேயிந்தவுப்பு அனுபானந்தான் சூட்சாதிசூட்சங்கள் மெத்தவுண்டு, வேல்லாரேவல்லவனைதன்னிலிய விரும்பிநின்றகுன்மமது யெங்கேபோச்சு; கொல்லாரேவாயுவெங்கே சூதமெங்கேகுறிப்பானநீராம்பல்கட்டியெங்கே. புல்லாரோயிந்தவுப்பு பெரியமாற்கம் புவனியிலேயாருந்தான் புகன்றிடாரே. (௩௮)

(கவுசைமகோதரம் நீராம்பலுக்குமருந்து.)

புகன்றிடவேமருந்தொன்று கூறக்கேளாய் புனிதமுள்ளசாரமது கட்டிவாங்கி, நகன்றிடவோ வெடியுப்பு பலமோநான்கு நாதாக்கள்பூனிரு பலமோமூன்று, துகன்றிட்டபச்சையது பலமோரொண்டு துடியான சீனமது பலமோநான்கு, அகன்றிட்டகாரமது பலமோ ஆறு அரியதொரு வீரமது பலமோரெண்டே. (௩௯)

இரண்டான அண்டோடு பலமோஎழு இணையான பேரண்டம் பலமோஎட்டு, முரண்டான யிதுகளெல்லா மொன்றாய்க்கூட்டி முளையானகல்வத்தில் பொடியாய்ச்செய்து, வரண்டானசாரத்துக் கங்கிப்பூட்டி வாகாககுழிப்புளந்தானிட்டாயானல், திரண்டுமே சாரமறுக் கட்டிப்போகும் திரளானவேதையிது வேதையாமே. (௪0)

வேதையாம்மாந்தற்கு கொடுத்தாயானல் மீளாத கவுசைமுதல் கட்டிப்போகும், காதையாம் நீராம்பல்கட்டிபோகும் கனமானமகோதரம் மாந்தைபோகும், வாதையாம்மேலிசுவு பொருமல்போகும் வாகனசர்வாங்கம் வாதம்போகும் மேனதயாம்வாதமெண்பதுவும்போகும் மெதுவானமருந்தினிட வேகம்பாரே. (௪௧)

நீர்கட்டுக்கு மருந்து.

பாரப்பாநீரடைப்பு வந்தபோக்கும் பாங்கான வெடியுப்புப் பலமோவொன்று, நேரப்பாஅண்டோடில்வைத்துமூடி நிலையான குக்குடமே போட்டாயானல், ஊரப்பாவெடியதுதான் பற்பமாகசு

வுத்தமரோயிவ்வுலகில்செய்வாருண்டோ, தூரப்பாபற்பமதை கிழங்கிந்நீரில் துணையாககொடுத்துவிடநீர்கள்போமே. (சஉ)

மோமேதான்மலக்கட்டுக் கிரிச்சினங்கள் பொல்லாதநீர்ச்செரிப்பு செரியாமாந்தம், ஆமேதான்கல்லடைப்பு சதையடைப்பு அப்பனேகோடாரியாமிதுவேயாகும், வாமேதான்யிந்தவுப்பை அன்னநீரில்வாகாகவுண்டிடவே வியாதிபோகும், தாமேதான்தன்வந்திரி பகவான்தானும் சாற்றினர் மானிடர்கள் பிழைக்கவென்றே. (சங)

(விரைவாதத்திற்கு எண்ணெய்.)

பிழைக்கவேமாந்தருக்கு அண்டவாதம் பிரலாபவேதனையால் செனிக்கும்வாறு, இழைக்கவேஎண்ணெய்யொன்று யியம்பக்கேளும் இயலானவிளக்கெண்ணெய்ப்படிதானென்று தழைக்கமுள்ளதக்காளிச்சாறுநாழி தழுதாழைச்சாறுபடியறையதாகும், குழைக்கவேசீரகந்தான் பலமோவைந்து குணமானவெந்தயமும் பலமுமைந்தே. ()

ஐந்தானசரக்குகளை வறுத்துமேதான் அன்பாக யெண்ணெயிலேமுதிரக்காய்ச்சி, சந்தானமில்லாதகங்கையற்கும் சார்வானவிரைதாகமானிடற்கும். பந்தாயயெண்ணெய்தனைக்கரண்டிவீதம்பங்காக மண்டலந்தான் கொள்வாரானல், வெந்தானவிரைவாதம் யெங்கேபோச்சு வீடுவிட்டுக்காடுறையுமென்னலாமே. (சரு)

(சகலவித தலைநோய்க்கும் நசியாக்கிராணம்.)

என்னலாமதலைவலியின் வியாதிரோகம் இடம்விட்டுப் போவதற்குகிராணம்சொல்வேன், பன்னலாம்பெருங்காயம் ஓமம் சுக்குப்பாங்கானமுலைப்பாலால்தன்னலாட்டி, வன்னலாம்சிறியதொரு சீலையூட்டி வாகாகப்பிடித்திடவே வலியும்போகும், புன்னலாம்நாசியிவேபாய்ந்தபோதுபொல்லாதலையிடியும்போகும்வாறே. (சசு)

(காதில் சீழ்வடிகிறதற்கு யெண்ணெய்.)

வாருனமாந்தருக்கும் பாலருக்கும் வாகாகயெண்ணெயொன்றுவுரைக்கக்கேளும், கூறுனபடிகாரச்சுன்னத்தோடு குடிலமாம்கெந்தகமும்சமனுய்க்கூட்டி, தேறுனயெண்ணெய்தனில் காய்ச்சியேதான்

திறமாகவிருகாதில்விட்டாயானல், நீருனைசிழநீவும்நின்றுபோகும் நிட்சயமாய்தன்வந்திரியுனாத்தார்தாமே. (சஎ)

(நேத்திராஞ்சனத்திற்கு.)

தாமேதான்மையொன்றுசொல்லக்கேளும் தயவானதிப்பிலியுங் கரியமாலும், ஆமேதான் துத்தமுடன் துருசுதானும்அழகானரோக ணியுமதனுசிலையும், சாமேதான் அதிமதுரம்யாவையோடும்சார்வான வெள்ளியொடு பொன்னுங்கூட்டு, நாமேதான்தாம்பரமாம் அயத்தி னேடு நற்றேனில்விட்டுமேயறைத்திடாயே. (சஅ)

அறைத்துமே அறுபத்துநாலுசாமம் அன்பாகக்குன்றிபோலு ருட்டிக்கொண்டு, முறைத்துமே முலைப்பாலில் வுரைத்துமேதான் முசியாமல்மண்டலந்தானிட்டாயானல், கறைத்துவிடும் பில்லங்கள் படலம்யாவும் கனமானதசைவளரல் காணுதோடும். திறைத்துமே திறைமறைவுயாவும் நீங்கிதிடமாகலோகபதி வாழலாமே. (சகூ)

(மாலைக்கண்ணுக்கு நீர்வடிதனுக்குமை.)

வாழலாம்வெகுகோடி காலமப்பா வறையுறே னின்னமொரு பாகம்கேளு, ஆழவேநீருகல்மாலைக்கண்ணு அரியதொருபுழுவெட் டுதடிப்புத்திர, நாழவேமருந்தொன்றுசெப்பக்கேளும் நயமானரோக ணியும்துத்தமிந்து, காழவேதேன்வளையல் முத்துரத்தினம் கணக்கா கவகைக்குச் சமன்சரியாய்க்கூட்டே. (ருய)

கூட்டியேமுலைப்பாலிலரைத்துமைந்தா குணமாகஅறுபது சா மமட்டு, நீட்டியேமண்டலந்தானிட்டாயானல் நீக்காதகண்மழுங்கு புழுவுந்தீரும், ஓட்டியேகாலைமாலைவிடாதுமைந்தா வுத்தமனேகண் ணினி விடுவீரானல், தேட்டமென்றகண்ணொளிவுதெரியும்பாரு திற மானமையிது மையதாமே. (ருக)

(நேத்திராஞ்சன வலிக்கு.)

மையானமையொன்று விளம்பக்கேளாய் மானிடற்குகூட்சமொ ன்றுமறைப்பில்லாமல், கையானமூலிகையில் புண்ணுக்கோடு க்வு தும்பை பழம்புளியுங்கூடச்சேர்த்து, தையானபடிகாரம் பொரித

துப்போடு நகரமாமிலைக்கொழுந்துசரியாய்ச்சேரு, மெய்யானகண்ணுக்கு யிடுவீராகில்மேதினியில்கண்வலிக ளகன்றுபேச்சே. (௫௨)

(தந்தவியாதிக்கு மருந்து.)

பேரச்சப்பாதந்தமென்ற வியாதிக்கப்பா பொல்லாத அரம்பொடியுமக்கிராகாரம், நீச்சென்றபடிகாரம் மிருந்தாற்சிங்கு நேரானலவங்கையிடப்பட்டையப்பா, ஆச்சென்றகாசுகட்டிதுருசுகூட்டி அப்பனேகணக்காககல்வம்போடு,பாச்சென்றஎலுமிச்சம்பழச்சாற்றாலே பாங்குபெறநாற்சாமமாட்டுஆட்டே. (௫௩)

ஆட்டியேநொறுங்கவேமடிந்தபின்பு அப்பனேசிசாவிற்பதனம்பண்ணு, கூட்டியேநாட்குநாள்தேய்த்துவந்தால் குடிலமாம்தந்தசைவுதந்தசன்னி, நீட்டியேசிழருகல் ரத்தங்காணல் நிலையாது வுடலைவிட்டு நீங்கும்பாரு தாட்டிகமாயிந்தநூல் முறைபொய்யாது தப்பாது தப்பாதுதிண்ணந்தானே. (௫௪)

(மேகவெள்ளைக்கு மருந்து.)

திண்ணமாமேகவெள்ளைமாந்தருக்குத்திடங்குறையாதத்தைக் கெடுக்கவென்றால், வண்ணமாம்சிங்கியுட பற்பந்தானும் வளமானபளமுடன்கலநாற்தானும், அண்ணமாம்சிங்கியுட பற்பச்கூட்டி அப்பனே யாவினுட்வெண்ணெய்தன்னில், கண்ணமாய்மண்டலங்கால் கொண்டதானால் கடம்விட்டுமேகமது பறக்கும்பாரே. (௫௫)

பறக்குதுவயிந்தமுறை கைவிடாதேபாராளு மன்னவற்கும்சிவயோகிக்கும், திறக்கமுள்ளயிம்மருந்து வைக்கும்பாகம் செய்முறையாம்கைமுறையாய்தேர்ந்துபாரு, உறக்கமாயிருந்துவிட்டால் முறைபொய்யாகும் வுத்தமற்குயிம்மருந்துசெப்புவாய்நீ, சிறக்கமாய் மருந்தினிட பாகம் சொல்வேன் றிறமாகச்செய்துநீ பிழைத்திடாயே, ()

(கல்நாருபற்பம்)

பிழைப்பதற்குகல்நாரு பற்பஞ்சொல்வேன்பொல்லாதகல்நாரை நீற்றுவாரார், உழைப்பதற்குகல்நாரைசேர்தான்வாங்கு வுத்தமனே

பசுவினிடகோமியத்தில், கழைக்கசடுதானகல பத்துநாள்தான் பாங் காகவூறவைத்து யெடுத்துக்கொண்டு, பழைப்பகற்றி ஆடுதிண்ணுப் பாளைதன்னில் பாங்காககசப்புடந்தான் போடுபோடே. (ருஎ)

(சிங்கிபற்பம்.)

போட்டபின்பு ஆறவிட்டுஎடுத்துப்பாரு பொல்லாதகல்நாறுத வளம்போலாம், நீட்டமாய்சீஷாவில் தபனம்பண்ணுநேரான சிங்கி யிட பற்பம்கேளு, கூட்டமாம்வெள்ளாடுசாணந்தன்னில் குணமாக வூறவைத்துப்பத்துநாள்தான், தேட்டமாய்தெளிவிறுத்துயெடுத்துக் கொண்டுதிறமாக மூன்றுநாள் ரவியில்வையே. (ருஅ)

வையப்பாசிங்கிதனையெடுத்துக்கொண்டு வளமாக கருநொச்சிச் சாற்றாலாட்டி, கையப்பாபில்லைசெய்து ரவியுலர்த்திக்கனமாக கெச புடமேபோட்டாயானால், மெய்யப்பாசிங்கிபற்ப மென்னசொல்வேன் மேதினியில்எம்போலேயாருஞ்சொல்லார், பொய்யப்பாயென்றுசொ ல்லிதள்ளவேண்டாம். புகழ்ச்சியாய் இம்மருந்தைசெய்துபாரே. ()

(பவளபற்பம்.)

பாரப்பாவளபற்பம் சொல்லக்கேளு பாங்கான முசலினுடரத் தம்வாங்கி, சீரப்பா அறுசாமமாட்டுமாட்டு சிறப்பான பில்லைசெய்து ரவியிற்போடு, காரப்பாகெசபுடந்தான்போட்டாயானால் கசடற்றபற் பமதுதவளம்போலாம், மாரப்பாபற்பமதைப் பதனம்பண்ணு மகா கோடி வித்தையிது வித்தையாமே. (சூம)

(மிருதார்சிங்கிபற்பம்.)

வித்தையாம்மிருதாருபற்பங்கேளு விரும்பியதோர் மிருதாரு கட்டிவாங்கி, சுத்தையாம்கோவையின்கிழங்குசாற்றால் சுகமாகவேய ரைத்துக்கவசம்பூண்டு, கத்தையாம்கசபுடமிட்டாயானால் களங்கமற் றதவளம்போல்பற்பமாகும். நத்தையாம்சிமிழ்தனிலே பதனம்பண் ணுநாதாக்களதீதவித்தைகாணுங்காணே. (சூக)

(சகலமேகங்களுக்கு இடிவல்லாதி)

காணப்பாரசங்கெந்தி மூசிக்காந்தம் கருவானசிங்சியுடபூரம்தா னும் ஊணப்பாதுத்தமுடன் துருசுதானும் வுத்தமனேகெந்தகமுங்

கல்லுக்காந்தம்-வாணப்பாரசமுடனே கோஷ்டமேலம் வகையான தேசாவாம்கடுக்காய்த்தோலும், நீணப்பாமிளகுசுக்கு காட்டுச்சீரம் நேரான வாய்விளங்கம்சமனுய்க்கூட்டே, (கூஉ)

கூட்டியேவசம்புடனே கருவாய்ப்பட்டை குணமானசெங்கொட்டைச்சித்திரமூலம், நீட்டியேதாளிசமாம்பத்திரிகூட்டநேரானகொள்ளுடனே எள்ளுங்கூட்டு-தாட்டிகமாய்தேத்தானின் கொட்டைசேருதயவாக அமுக்கரா கொல்லன்கோவை பூட்டகமாமிம்மருந்தோடண்டம்நான்கு புனிதமாய்ச்சேர்த்துக்கல்லுரலில்தாக்கே. (கூ௩)

தாக்கப்பா மூன்றுநாளாளாறுவேளை தயவாக யிருப்புலக்கைச் சாடுசாடு, நோக்கப்பாமசிந்தபின்னெடுத்துக்கொண்டு நொறுங்கவே பரணிதனிலடைத்துமேதான் - தூக்கப்பாமண்டலந்தான் யிரண்டுவேளை சுகமாக வுண்டுவாப்பத்தியங்கேள் -நீக்கப்பாவாயுவென்றபதார்ந்தங்கள்ளு நேரானமற்றதெல்லாஞ்சேருசேரே. (கூ௪)

சேரப்பாபத்தியந்தானிதற்கேயில்லை சிறப்பாகத்தீருகிறவியாதிகேளு கூரப்பாவாதமென்றதெண்பதும்போம் குடிலமாம்சூலைபதினெட்டும்போகும், தீரப்பாபித்த்வெடி யறுபதும்போம் தீராதவுபத்திரமாங்கண்டமாலை பேரப்பாகால்குடைச்சல் கரணை தீரும் பேரானமூலமுதலகன்றுபோமே. (கூ௪)

பேரமேதான்பிறவலியும் ராசக்கட்டி பொல்லாதஅகுவையொடுமகோதரம்போம். சாமேதான் அண்டத்தின் புந்தும்போகுப் சாங்கமாம்புண்புளாகள் சடுதியிற்போம், நோமேதான்வாயூறல்பொருமல் பேர்கும்நோக்கமுள்ளபுழுவெட்டு தடிப்புப்போகும், நாமேதான் செங்கிரந்தி கருங்கிரந்தி நலமானயிடிகிரந்தி புளாகள்தானே. (கூரு)

தானுனமூக்கறுத்தன்யோனிப்புற்று சங்கடமாம்யிடிப்புற்றுக்கன்னப்புற்று, கோனுனவண்டுகடி தடிப்பன்புண்கள் குணமாகுமிந்தஹோர் யிடிவல்லாதி, சேனுனயிம்மருந்துயாருஞ்சொல்லார் தெளிவாக தன்வந்திரிபகவான்தானும், பானுகமானிடர்கள் பிழைக்கவென்று பாடிவைத்தேன்நந்திசர்பாதங்காணே. (கூஎ)

# இந்நூலின்தொகுப்பு.

(காவியப்புகழ்ச்சி.)

கரணவேயுகந்தோறும் சாஸ்திரங்கோடி கணக்கில்லேசித்தருக் குமிரிஷிகட்குந்தான், தோணவேவயித்தியமா மிரண்டுலட்சம் துணை யானவாதமதுவொருலட்சந்தான், ஈணவேசித்தர்கள் சாஸ்திரக்கோர் வை ஏகமாய்மாராட்டஞ்செய்துவைத்தார், பூணவேயெந்தனிட தொ குப்புசொல்வேன் புராதனமாமிந்தநூல்தெளிந்துபாரே. (௬௮)

பாராப்பாகாவியந்தானேந்துசொன்னேன்பாங்காகயேமகாவியந் தானென்று, சீரப்பாதத்துவகாவியந்தனென்று தெளிவானபூரண காவியந்தானென்று, வேரப்பாசிறுகாவியமாயிரந்தான்விளம்பினேம் வயித்தியகாவியமிதாகும், காரப்பாகாவியத்தின்புகழ்ச்சிமெத்தச்கரு வாளிகண்டறிந்துசெய்வார்தாமே. (௬௯)

தாமேதான்யிந்தநூல்கோர்வையன்றிசாற்றினேன்சிந்தாமணியா யிரந்தான் மோமேதான்நிகண்டுமூந் நூறுஞ்சொன்னேன் புகழாக சுருக்கமிருநூறுஞ்சொன்னேன், வேமேதானஅந்நூறுகலக்கியானம் விளம்பினேனிந்நூலுக்கொருநூற்சோர்வை, வாமேதான்ஆயிரங்கும் மிசொன்னேன் வகுப்பாகயிந்தநூல்போல் சொலவாரன்றே. (௭௰)

சொல்லார்கள்நாதாக்கள்சித்தர்தாமும் தொகுப்புடனேகாவியந் தா னிதுபோல்மார்க்கம், வெல்லார்களிம்மருந்து யாருஞ்சொல்லார் வேணவிதரசாயனங்கள்கற்கந்தோன்றும் கொல்லார்கள் வயித்தியர்க ளிம்மருந்தால்கொல்லரிதுகொல்லரிது யிதுபோல்காணார், புல்லர் கள் கைபாகம்பிசகிடாமல் போற்றினேன்நந்திபதம்போற்றினேனே.

(தடிப்புஅனையாப்புக்கு.)

போற்றினேன்ஆயுறுவேதமாகும் பொல்லாத அனையாப்புக்க றைவேன்கேளும், சாற்றினேன்செங்கோட்டை சித்திரமூலம்சார்வா கப்பனவெல்லம்காசுக்கட்டி, தூற்றினேன்காடியென்ற காரஞ்சேர்க்

துத் துடிப்பாககச்சைகொண்டிறுக்கிக்கட்டி, ஆற்றுவாய்மூன்றுநாள் பொறுத்தவிழ்க்கஅப்பனேகட்டியதுவுடையும்பாரே. (௭௨)

(பிளாஸ்திரி.)

உடையுமோரத்தமுடன் சீழும்போகும் வுள்வீச்சுப்பிறவீச்சு யாவும்போகும். இடையுமேநரம்புவலியிசுவிம்போகும் இணக்கமாம் பிளாஸ்திரியொன் றியம்பக்கேளு. கடையுமே குங்கிலியம் பலந்தா னென்று பசுவெண்ணெய்தனிலூட்டிக்கடைந்தாயானல், அடையு மே வெண்ணெயது திறளும்பாரு அப்பனே அரனுனாத்தாரெமக் குந்தானே. (௭௩)

(அரையாப்பு எண்ணெய்.)

தாமேதான்எண்ணெதனை மூலாமிட்டாக்கால் தயவாகரணமது தான் தீரும்பாரு, காணேதான்யெண்ணெயொன்று சொல்வேன்பா ரும் கருவானபூரமது பலமோவொன்று, பானேதான் விளக்கெண் ணெய்படிதானென்று பாங்காகசரசுபற்பம்பலங்கால்சேரு, தேனே தான்நெய்ச்சிட்டி மூலிதானும் திறமாகச் சமனிடைதான் தாக்கு தாக்கே, (௭௪)

தாக்கியே மெழுகுபதம் தன்னில்காய்ச்சி தயவாக ஏழுநாள் கொள்வாயானல், போக்கியே நோய்களெல்லாம் அகன்று போகும் பொல்லாத வாயுவென்றது தெண் நீக்கியே கிரந்திமும்பமோ, பதல் யாவும்போகும் நிலையானமேகவட்டை திரும்பாரும் தேக்கியே நில் லாதேயிந்தபாகம் திறமாகச்செய்துநீ கண்டுபாரே. (௭௫)

(கொறுக்குப்புண்ணுக்குப் பிளாஸ்திரி.)

பாரப்பாமாந்தற்கு கொறுக்கேவந்தால் பாடுகின்றேன் மூலா மொன்னுசெப்பக்கேளு, சீரப்பாகெந்தகமும் பூரமொன்றுசிறப்பான மிருதாறு சிங்கிதுத்தம், கூரப்பாகுங்கிலியம் சமனதாகக்குறிப்பாக தேங்காநெய்தன்னுலாட்டி, நேரப்பாநல்லசலம் விட்டுமேதான் நல மாக ஏழுமுறை கழுவுளாயே. (௭௬)

கழுவியேமூலாமதனை யெடுத்துக்கொண்டு கடியரணப் புண்ண தனி லிடுவீராகில். நழுவிவிடும்நாற்றங்கள் ஆராப்புண்கள்நளினமா மிந்தமூலாம் சுருக்குமெத்த, பழுவியேயாவருக்குஞ்சொல்லொணாது பாங்காகக்குணமதனிலே பதனம்பண்ணு, தழுவியதோர்மூன்றுநாளரா றுவேளை தப்பாதுதப்பாது திண்ணந்தானே. (௭௭)

(சலரணங்களுக்குமூலாம்.)

திண்ணமாமிம்மருந்து தனையகற்றித்திறமாகக் களிம்பொன்று தேர்ந்துகேளு, நண்ணமாமிலிங்கமொடு துத்தந்தானும் நலமான சிங்கியுடன்கெந்தந்தானும், வண்ணமாங்குங்கிலியம்ரசக்கற்பூரம் வளமானகடுக்காயுமாசிக்காயும், நிண்ணயமாமிதுகளொன்றுந் தப்பிடா மல் நேரெடையாய் சமனிறுத்துப்போட்டிடாயே. (௭அ)

போட்டிடாய்ப்பசுவினிட வெண்ணெய்தன்னில் பொலிவாக மூன்றுநாளரைத்துமேதான், காட்டிடாய்நல்லபன்னீர் கொண்டுதாக்கிக் கருவான மூலாமதனையறைத்துமேதான், நீட்டிடாய் பரணிதனிலடக்கஞ்செய்து நீணிலத்தில் மாந்தருக்குரணங்கட்கீய்ந்தால், மூட்டிடாய்புண்புரைகளகன்றுபோகுமுத்தமனேதன்லந்திரிவலுமைபாரே

(சத்திவிக்கலுக்கு.)

பாரப்பாசத்திவிக்கல் கொண்டபேர்க்கு பர்ங்கானசந்தனமுமகிலுமேலம். தீரப்பாசாம்பிராணிப் பதங்கக்கூடத் திறமானசீரகமுமொக்கதாக கூரப்பாசுங்கானில் புகைபிடிக்க குடிலமாம்விக்கலது சத்திபோகும், தேரப்பாயிம்மருந்தை வெளிவிடாதே தெளிவாக ரிஷிகட்கு முரைத்ததாமே. (அ௯)

(மதமூர்ச்சை மயக்கம்தீரமருந்து.)

தாமேதான்மதமூர்ச்சை கொண்டபேர்க்குத் தயவாகமருந்தொன்றுகூறக்கேளும், நாமேதான்மிளகுடனே சுக்குத்தானும் நலமான கிராம்புடனேலவங்கப்பட்டை, போமேதான்வுளுத்துடனேகருப்பங்கட்டி பொன்னுவரையுடனேமுத்தக்காசு, காமேதான்எலுமிச்சஞ் சாற்றாலாட்டிக்கருவாகக்கண்ணிலேதீட்டுவாயே. (அக)

தீட்டுவாய்காலைமாலையிரண்டுவேளைத் திடமாகமையினுட வேகம்பாரு. கூட்டுவாய்தலைதேய்கதைலமொன்று கூறுவேன்நச்சுப்சுப்பாலை வெள்வேலன்தான், நீட்டுவாயகூரெள்ளு வெண்ணெய்தன்னில்நேராகப்பசும்பாலுமிட்டுக்காய்ச்சி, பூட்டுவாய்தயிலமது காய்ச்சியேதான்புகழாகக் கடுகுபதம் தன்னில்வாங்கே. (அ௨)

வாங்குவாய்தயிலமதை சிரசிற்றேய்க்க வாகானத் தலைமயக்கம் மூர்ச்சைபோகும், தாங்குவாய்பித்தநீர்வாதநீரும் தாழ்வானபிறவலி யும் சன்னிபோகும். தேங்குவாய்முழுகுநாள்தன்னிலேதான் தேட வேவேண்டாமேபுகைபுளிப்பு, பாங்குடனேபத்தியமோ கார்குகாரு பகவான்தன்வந்திரியும்புகன்றவாறே. (௮௩)

(நெற்றிசன்னிக்குத் தயிலம்)

புகன்றிட்டசன்னிக்கு மருந்துகேளும் புகழாகஎருக்கன்வேர் நாணல்வேரும், துகன்றிட்டவேப்பெண்ணெய்க் காலாழாக்குத்திற மானநல்லெண்ணெய் அரையாழாக்கு, வகன்றிட்டநெய்தானு மீரா க்கு வாகானபசும்பாலுமூவாழாக்கு, அகன்றிட்டபாண்டமதில் விட் டுக்காய்ச்சி அழகுபெறசாடிதனிலிறங்கிடாயே. (௮௪)

இறக்கியேநந்தீசர்பாதம்போற்றி யியலானதயிலமதை சிரசிற் றேய்க்க, உறக்கமுள்ளசன்னியது யெங்கேபோச்சு வுத்தமனேபிற வீச்சு எங்கேபோச்சு, திறக்கமுள்ளகாலிசுவுஎங்கேபோச்சுத் திடமா கையிசுவு யெங்கேபோச்சு, பறக்கமுள்ளகாக்கைவலி எங்கேபோச்சு பதிவாகத்தயிலத்தின்முறைமைகாணே. (௮௫)

காணப்பாதயிலத்தின் வேகமெத்தக்கருவாளியானுக்கால் கண் டுகொள்வான். பூணப்பாபத்தியமேசுருவுமாகும் பொலிவானசீத ளப் பண்டங்களாகா, ஊணப்பாபுளிபுகையும் தவிர்த்துப்போடு வுத் தமனே வாயுவென்ற பதார்த்தந்தள்ளு, வேணப்பாசையோகமாகா விரும்பியே தன்வந்திரியுரைத்தவாறே. (௮௬)

(மண்டைக்குடைச்சலுக்குத் தயிலம்.)

வாருனமண்டையிடிவந்தபேற்கு வாகாகத் தயிலமொன்று செ ப்பக்கேளும், நீருனகஸ்தூரிமஞ்சள்தானும் நேரானகொம்பரக்கு தேவதாரம் காருனலவங்கமுடன் லவங்கப்பத்திரிக் கருவானபுரு வெச்சம், கூருனகண்டங்கத்திரியுங்கூட்டிக் குணமாக வெள்ளெண் ணெய் தன்னிற்சேரே. (௮௭)

சேரப்பாபசும்பாலும் துளசிச்சாறும் சிறப்பானநெய்யுடனே சரக்குங்கூட்டி, வாரப்பாபாண்டத்தில் விட்டுக்காய்ச்சி வாகாகமெ ழுகுபதம் வடித்துமேதான், நேரப்பாதயிலமதைமண்டலந்தான்நினை வாகமுழுகிவரநோய்கள்போகும், தீரப்பாசூலைமுதல் யிடியும்போ கும் திறமானசன்னிமுதலிசுவும்போமே. (௮௮)

போமேதான்குத்துமுதல் பிடரிநோய்போம் பொல்லாத கண்ணெரிவுதுலைந்துபோகும். சாமேதான்யின்னமொரு மருந்துசொல்வேன் சார்வாகக்கேளுமப்பாதயிலமொன்று, ஆமேதான்நல்லெண்ணெய்ப்படிதானென்று அழகாகப்பசும்பாலும் படிதான்ரெண்டு, தாமேதான்சரக்குவகை சொல்லக்கேளும் தயவில்லாசிந்தலொடு நாரியாமே. (௮௯)

நாரியாம்பற்பாடம் சிறுகாஞ்சோரிநலமான அமுக்கராகொல்லன்கோவை, வாரியாம்சந்தனமும்தேவதாரம் வாகானகொல்லனுடகிழங்குங்கூட்டி, சாரியாங்கோஷ்டமுடன் லவுங்கப்பத்திரி சார்வானகைச்சோல மவிலாமிச்சோடு, பூரியாம்கிச்சிலிக்கிழங்குகூட்டிக்குணமானசிறுதேக்கு சமனாய்க்கேளே. (௯௰)

கேளப்பாயிதுவெல்லா.மொன்றாய்க்கூட்டிக்கிருபைபெறதூளிடித்து யெண்ணெய்தன்னில் - ஆளப்பாமுதிராமல் பதமாய்க்காச்சி அன்பாகமண்டலந்தான்முழுகிவந்தால், நீளப்பாமண்டையிடிகுத்தும்போகும்நிலையான தலைவலியும் பீனிசம்போம், வேளப்பாஇத்தயிலம்வெளிவிடாதேவிரும்பியேமனமுவந்துகேளுகேளே. (௯௧)

(பித்தத்திற்குமருந்து.)

கேளப்பாமாந்தருக்குப் பித்தம்வந்தால் கெடியான நெற்பொரியும்வில்வவோடும், வாளப்பாஅதிமதுரம்கோஷ்டம்பீர்க்கு வளமான சித்தாமுட்டி பேராமுட்டி, நீளப்பாசந்தனமும் வில்வவேரும்நேராணபச்சையுடப்பயறும்சேரு, மாளப்பாசீனியென்றசர்க்கரையுஞ்சேர்த்து வளமர்கக்கியாழமது செய்திடாயே. (௯௨)

செய்யப்பாநாழிசலம்விட்டுச்காய்ச்சி சிறப்பாகயிருவேளை கொடுத்தாயானால், பைபப்பாபித்தமதுபறக்குமபாரு பாலகனேபத்தியமோயிதற்கோயில்லை, நையப்பாவாந்தியது அதிகங்கண்டால் நலமான சுக்கதுவும்சீரஞ்சேர்த்து, வையப்பாசீனியிலேகொடுத்துப்பாருவாந்தியதுநின்றுவிடும். திண்ணமாமே. (௯௩)

(தலைச்சுழற்றல் வாந்திக்கு)

திண்ணமாந்தலைசுழற்றல்:யக்கந்திர திறமானசூரணமொன்றியம்பக்கேளு, நண்ணமாம்விலாமிச்சு பரங்கிச்சக்கைநயமானநெற்பொரியின் சிறுபூலாவும், கண்ணமாமிதுகளைத்தான்றூளாய்ச்செய்து கசடறவேசீனியிலேகலந்துகொண்டு, வண்ணமாய்ப்பத்துநாள் கொண்டபோது வாகாகத்தலைசுழற்றல்சாந்தியாமே, (௯௪)

(பித்தவெடிப்புக்கு.)

சாந்தியாம்பித்தவெடி கண்டபேற்குத் தயவாக மருந்தொன்று செப்பக்கேளும்; வாந்தியாம்வாயூறல்மயக்கம்நீங்க வாகாகத்தயில மொன்றுசாற்றக்கேளும், காந்தியாம்வெட்டிவேர்யேலந்தானும் கனமானமஞ்சிட்டிதேவதாரம்; வேந்தியாம்நெல்லிமாஞ்சில் கிராம்புசந்தம் மேலானதாளிசமாம் சீரமாமே (௯௫)

சீரகமாநாகப்பூபருத்திநெல்லி திறமானமுசுமுசுக்கைபொன்னாங்கண்ணி,காரமாமதுரமோடேலஞ்சுக்கு கனமானசிட்டமுடன்மாஞ்சில்முத்தம் தீராமாம்குடோரியதுவொன்றுய்க்கூட்டித்திறமாகஎண்ணெய்தனில் காய்த்துமேதான்; வீரமாம்யெண்ணெயிடதயிலம்வேகம் வேதாந்தகுருபிட ரீதுவுமாமே. (௯௬)

இதுவுமாம்கண்புகைச்சல்கண்ணெறிவுயிதமானகபாலவலிமண்டைக்குத்து; சதுவுமாம்நீர்ப்பாயச்சல்நீரெறிவு சதுரானபித்தவெடி பித்தக்காந்தல், கதுவுமாம்பித்தநாற்பதுவும்போகும் கடினமாம்பித்தயிலம்நவுலொஞது, வெதுவுமாம்மண்டலந்தான்முழுகிவாநீ மேருவாந்தயிலமதுவிளம்பக்கேளே. (௯௭)

(சிலேத்துமந் தொண்ணூற்றுறுக்குந் தயிலம்)

கேளப்பா நல்லெண்ணெய்ப் பசுவின்பாலும் கெடியானயிருவேலிவிலாமிச்சோடு,மீளப்பாயிந்துடனேகண்டங்கத்திரி மேலானசண்பகப்பூகிராம்புகோஷ்டம், காளப்பா அரத்தையொடு தேவதாரம் கருவானதண்ணிர்மிட்டான் கொம்பரக்கு, தீளப்பாநல்லெண்ணெய் நெய்யுஞ்சேர்த்து திறமாக மெழுகுபதம் காய்ச்சிடாயே. ()

(மூலநோய்க்குமருந்து.)

காய்ச்சிபேமண்டலக்கால் முழுகிவந்தால் கருவானசிலேத்துமமது மகன்றுபோகும், தோய்ச்சியேமூலநோய்தீரக்கேளு திறமாக மருந்தொன்று அறையக்கேளும், வீச்சியேசுருகுடனே முத்தக்காசும் வினையான அருகருணைவாழக்கட்டை,மூச்சியேபிரண்டையொடு கடுக்காய்த்தோலும் மீள தசிந்தலும்சேர்த்திடாயே. (௯௯)

சேர்த்துமேசுக்குடனே பரங்கிச்சக்கை சிறப்பாகச்சூரணமாய் செய்துகொண்டு, கார்த்துமேபசும்பாலில் கடிகைபோட்டுக் கணக்காகக் காலையில் அருந்துவாநீ, நீர்த்துவரும்ரத்தமுடன் சிழும்போகும் நிலையாதகடுப்புமுத்தல்திரும்பாரு, பார்த்துநீகைபாகம் பிசகிடாமல் பார்த்திபனே செய்துநீதெளிந்திடாயே. (௱)

(இதுவுமது)

தெளிந்துபார் இன்னமொரு பாகஞ்சொல்வேன் திறமான முள்ளங்கி இருபதுதான், தளிந்திடாகாய்பதத்தில் கொண்டுவந்து நட்டாய்இருநான்குபிளவுசெய்து, அளிந்திடாய்பசுவினின்பாலிலேதான் அழகுபெறச்சுண்டதனைகாய்ச்சிக்கொண்டு, வளிந்திடாப்பத்தல்தனை கீழ்மேலிட்டு மறுபடியும்பால்படி ரெண்டுவாரே. (௱க)

வர்த்துமேசுண்டியபின் னெடுத்துக்கொண்டு வளமாகக்காலை மாலைதானருந்த, கூர்த்துகின்றமூலநோயாறுந்தீரும் கோபாலாரிஷிகட்கு முரைத்தோமுண்மை, வேர்த்துவரும்நீர்க்கட்டு நீரடைப்பு விதமானசந்திடுப்பு அறையில்ரோகம், தீர்த்துவிடும்யிம்மருந்து முறைபொய்யாது தேசிகனேயிதையறிந்துசெய்திடாயே. (௱உ)

(குழந்தைகள் காலிசுவுகையிசுவுக்கு மருந்து.)

செய்துமேகுழந்தை வலிபோவதற்குச் சிறப்பானமருந்தினிடபாகஞ்சொல்வேன், நைதுமேசித்தாமணக்கெண்ணெய்நாழி நலமான வேப்பெண்ணெய்நாழிசேரு, கொய்துமேசித்திரமாமூலிச்சேருக்குணமான ஆத்தலறிக்கூடச்சேரு, பெய்துமேபெருங்காயம்பூரம்சேரு பேரான ரசபற்பம்தூக்கிடாயே. (௱௩)

தூக்கியேயெண்ணெய்தனில் போட்டுக்காய்ச்சித் துக்கமற வடிகட்டியெடுத்துக்கொண்டு, தாக்கியேகரண்டிவீதம் கொடுத்தாயானால் தப்பாதுவலியகன்றுசாவேராகும், நோக்கியேகுமரகண்டன் நமரகண்டன்நோயானபலவித வலிகள்போகும், தேக்கியேயிம்மருந்து சுறுக்குமெத்த தெளிவாகதன்வந்திரி யுரைத்ததாமே. (௱௪)

உரைத்தாரேதன்வந்திரி பகவான்தானும் ஓகோகோ மானிடர்கள் பிழைக்கவென்று, கரைத்தாலேநந்தீசர் எந்தமக்குகருவானகருக்களெல்லாந்திறந்துசொன்னார், மறைத்ததொரு கருக்களெல்லாந் தன்வந்திரியான்வாகாகவுரைத்தேனப்பா இந்நூல்மெத்த, துரைத்தனமாமின்னமொருமருந்துகூர்வேன் துரையாகக்கேட்டிருங்கள் மாணக்காளே. (௱௫)

(நீர்தவெள்ளைக்குமஞ்சள்வெள்ளைக்குமருந்து.)

மாணக்கள்மாந்தர்களே வறையக்கேளும் மங்கையர்கள்போகத்தால்சூடேமிஞ்சி, வீணுகக்காயமதுகெட்டுநொந்துவிருதாவாய்கெட்டவர்கள்கோடாகோடி, பூணகப்போகாமல் யிருப்பதற்கு பூட்டுகிறேன் நெய்யொன்று சொல்வேன்மைந்தா, நோணுத கருவேலன்பட்டை தானும் நோத்தமாமுருங்கை யுடப்பட்டைதானே. (௱௬)

பட்டையாங்கருவேலன் பட்டைதானும், கரியதொ நநாவலுட பட்டைதானும், நெட்டையாமிலவத்தின் பட்டைதானும் நேரான வூஞ்சலுடப் பட்டைதானும், குட்டையாம் ஒதியத்தின் பட்டைதானுங்குணமான அத்தின்பட்டைதானுந்திட்டமாய்கரும்புரசம்துவைத்துக்கொண்டுதிறமாகவுலக்கையினல் சாடுசாடே. (௱எ)

சாடியேவகைக்குரசம்படிகாலாக சார்வாகஅளந்துமே பாண்டமிட்டு கூடியேநெல்லிரசம்அறையதாகக் குணமாகக்கையான்காற்காலதாக நிலையான எள்ளெண்ணெய்நாழியாக, தேடியேபசுவெண்ணெய்சமனதாகத் திறமாகவூத்தியேகலந்திடாயே. (௱அ)

கலந்திடாய்கற்கவகை சொல்லக்கேளும் கனமானசித்தரத்தைதேத்தாங்கொட்டை, உலர்ந்திடாய்தாளிசமாம்பத்திரிதானும் வுயர்வான நிலப்பனையின்முத்தக்காசு, நலர்ந்திடாய் கோஷ்டமுடன்தேவதாரம், நலமானஅமுக்கார் வெந்தயந்தான் புலர்ந்திடாய்சாதிகாய் லவங்கம்பத்திரிபுகழானசாரத்தின்பருப்புங்கூட்டே (௱கூ)

கூட்டியேயெலுமிச்சம்பழச்சார்தானும் குணமானதேங்காய்ப்பால்தன்னலாட்டி, நீட்டியே நெய்தனிலேகலந்துசேர்த்துநேரர்கவாலுகையின் அடுப்பிலேற்றி, கூட்டியேமெழுகு பதம்தனில்வடித்துக்குணமாக மண்டலங்கால்கொண்டாயானல், வாட்டிவிடும்மேகமிருபதும்போகும் வாங்காத சிழரத்தம்வாங்கிப்போமே. (௱ய)

வாங்குமேமேகவெட்டைமேகப்புண்கள் வளமானபெரும்பாடுயெங்கேபோச்சு, நீங்குமேஎலும்புருக்கிப்பாண்டுபோகும் நிலையான சொறிமேகம் கிரந்திமேகம், ஏங்குமேமேகமெல்லாம் பறக்கும்பாரு எழிலானசதையடைப்பு யெழுச்சிதீரும், ஓங்குமேதிரேகமது காந்தியுண்டாம்ஒருபோது பத்தியந்தானில்லைதானே. (௱யக)

இல்லையாம் அரனருஞ்சொன்னரப்பா அப்பனேநானுமக்குச்சொன்னேம்பாரு, தொல்லையாமிம்மருந்தெண்ணிடா த துறையாகுமிந்தநெய்வேகமெத்த, கல்லைப்போல்திரேகமது யிறுகும்பாகு காசினியில் எவருந்தான்செய்யமாட்டார், புல்லறிவால்நந்தீசர் சுவாமிதானும் பூட்டினர் சூட்சமதைக்காட்டினரே. (௱யஉ)

(அண்டவிரைவாதத்திற்குமெழுகு)

காட்டினர்அண்டமென்றவாயுபோகக் கருத்தாகப்பூட்டுகிறேன் மெழுகோவென்று, சூட்டுகிறேன்லிங்கமொடு பூரந்தானும்துடியானமிளகதுவும்சுக்குங்கூட்டி, நீட்டுகிறேன்கெந்தகமுஞ்சமனய்க்கூட்டி

நேரானரசபற்பம்நாவிலொன்று, தீட்டுகிறேன்தேன்விட்டு அரைத்துமைந்தா திறமாகக்கழற்சிக்கா யுண்டைசெய்யே. (௱௰௩)

செய்துமே அந்திசந்திகொண்டாயானல் தீராதஅண்டமென்ற வாதம்போகும், நைதுமேகுடல்வாதம் பிரட்டுவாதம் நலமான கழல்வாதம் ஓடுவாதம், பெய்துமேமுடக்குவாதம்சந்துவாதம் பேரானசச்சுவாதம் விச்சுவாதம், வைதுமேயிம்மெழுகால் யெல்லாந்தீரும் வளமாகப்பாடினே பாடினேனே, (௱௰௪)

பாடினேன்பத்தியமோசொல்லக்கேளு பாங்கானவெள்ளாட்டுவுப்புக்கண்டம், நாடினேன்சொருவுடனே காடைசேரு நல்மானவுள்ளானும்புறாவுமாகும், கூடினேன்கடுகெண்ணெய் தானுமாகக் குணமான வாயுவென்றபதார்த்தங்தள்ளு, சூடினேன்யிம்மருந்து கைபாகம்பார்சுருக்கானஇன்னமொருபற்பங்கேளே. (௱௰௫)

(கெந்தகபற்பம்)

பற்பமாம் கெந்தகத்தின் பற்பம் சொல்வேன் பாங்காகமானிடர்கள்பிழைக்கவென்று, அற்பமென்று நினையாதே கெந்திபற்பம் ஆரறிவார் பேரறிவார் அறியமாட்டார், சொற்பமாய் எலியாலம் பாலாட்டிச் சுகமாகப்பில்லைசெய்து ரவியுலர்த்தி, விற்பனமாய் குக்கிடத்திற் போட்டாயானல் விளக்கமுள்ளமாசற்ற பற்பமாமே. ௱௰௬

ஆமேதான்பற்பமதைநெய்யிற்கொள்ள அமையுகிறேன் மேகமென்ற திருபதும்போம், மோமோதான்பூச்சிக்கடி தேள்விஷங்கள் பொல்லாதமேகப்புண்புரைகள்நீங்கும், காமேதான்காமாலை கண்டமாலை கழறவொண்ணபல்விஷமுந்தீரும்பாரு - நோமேதான்ரணங்களெல்லா மாறும்பாரு நேர்த்தியாமின்னமொருபற்பங்கேளே. ௱௰௭

(தாம்பரபற்பம்)

கேளப்பாதாம்பரத்தின் பற்பம்சொல்வேன் கெடியானதாம்பரத்தைத்தகடாய்த்தட்டி, கோளப்பாவாராமல் பழச்சாற்றிலே சுணமாகச்சுத்தித்துரேக்குதனை. நீளப்பாஆடுதின்னுப்பாலைதன்னில்நிலையாகப்பத்துபுடமிட்டாயானல்,பாளப்பாபோகாமல் பற்பமாகும்பாங்குபெறப்பற்பமதைப் பதனம்பண்ணே, ௱௰௮

பண்ணியேபற்பமதையெடுத்துக்கொண்டு பாங்குபெற நெய்தேனிற் கொண்டாயானல், வண்ணமுள்ளநாலாயிரத்திற்சொச்சம் வாகானநோய்களெல்லா மகன்றுபோகும், திண்ணமாம்பத்தியந்தான் புளியிமாகா திறமானகாடைபுறாயிறைச்சிசேரு, நிண்ணயமாய்மண்டலந்தானுண்டுவாய்நீநிலையானநோய்களெல்லா மகலும்பாரே. ௱௰௯

(வெள்ளிபற்பம்)

அகலும்பாரவெள்ளியுடப் பற்பஞ்சொல்வேன் அரியதொரு
மூலாம்வெள்ளி சரிகைவெள்ளி, நிகலுமாம்காய்ச்சியேதகடாய்த்தட்
டிநேரானசெம்முள்ளி வெள்ளைமுள்ளி, புகலுகிறேன் சமூலமதை
யரைத்துமேதான்போற்றியேபகல்தனிலே கீழ்மேலிட்டு, பகலுடனே
ரவுதனிலே காயவைத்து பாங்காககெசப்புடந்தான் போடுபோடே.

போட்டபின்புபற்பமதையெடுத்துப்பாற்க பொல்லாதவெள்ளி
யதுதவளம்போலாம், நீட்டமாய்பற்பமதை யெடுத்துக்கொண்டு நிட்
சமாய் நந்திக்குப்பூசைசெய்து, வாட்டமாய்லேகியத்தில்நெய்யிற்கொ
ள்ள வாகாகமேகவகையாவுந்தீரும்,தேட்டமாய்மண்டலந்தான் வுண்
டுபத்தியம் தெளிவாகவடுத்துபார் தர்மவானே. ௱௨௧

தர்மவானுனுக்கால் அப்பாகேளு சாற்றுகிறேனீங்குகிற வியாதி
தன்னை, மர்மமாங்கைகறுப்புமேகவெள்ளை ம்தியாதகுட்டமொடு கு
றைநோய்தீரும், கர்மவானுனுக்காலெதுவுந்தீரா கருவாளிவயித்திய
னுங் கண்டுகொள்வான், நிர்ணயமாய்நந்தீசர்பாதமபோற்றி நிகழ்த்
தினேனிம்மருந்து வதிதங்காணே. ௱௨௨

(தங்கபற்பம்.)

காணப்பாமானிடற்குத்தங்கபற்பம் கழறுவேன் சூட்சமதாய்
கண்டுதேறு, பூணப்பாதங்கமாம்குந்தளமாம் புனிதமுள்ளரேக்கது
வாய் செய்துகொண்டு, தோணப்பாபிர்மதண்டு பாலாலூட்டித்திற
மாகவம்மூலிககவசம்செய்து, காணப்பாகசப்புடத்திற் போட்டாயா
னால் கண்டுகொள்ளப் பற்பமதுகண்டுதேரே. ௱௨௩

தேறவேதங்கபற்பம்வேகமெத்த தெளிவான நெய்தேனிற்கொ
ண்டாயானால், கூறவேவியாதியதுமகலும்பாரு குணமானநீரிழிவுநீங்
கும்பாரு, ஆறவேபவுத்திறமும்மூலம்போகும் ஆறாதபுண்புரைகள
கன்றுபோகும், தூறவேநோயனைத்தும் தீரும்பாரு தீராதபிணியக
லும்பாருபாரே. ௱௨௪

பாப்பாபத்தியமோ சையோகமாகா பாங்காகப் புளிபுகையும்
தவிர்த்துப்போடு, சேரப்பாலேகியத்தில் அனுபானந்தான் சிறப்பா
கக் கொண்டுவாநோய்கள்போகும், தேரப்பாயிம்மருந்து வேகமெத்
தத்தெளிவாக எந்தமக்குநந்திசொன்னார், ஆரப்பாசொல்வார்கள் எம்
மைப்போலஅப்பனேநாமுமக்குச் சொன்னேனுங்கேளே. ௱௨௫

நாகபற்பம்.

கேளப்பாநாகபற்பம் நாமுறைத்தோம் கெடியான நாகமதை யிலுப்பைநெய்யில், வாளப்பாஏழுதரஞ்சுத்திசெய்து வாகாகத்தா னுருக்கி யெடுத்துக்கொண்டு, மூளப்பாசிறிபானின் நங்கைதானுமுத் தமனே தேங்காய்போல்ரைத்துமைந்தா, பாளப்பாசெய்யாமல் கெச புடமேயிட்டால் பாங்கானபற்பமதுகண்டுதேறே, (௱௨௬)

தேறப்பாஅரிசியிடை பனவெல்லத்தில் திறமாகமண்டலந்தான் கொண்டாயானால், நீறப்பாமூலநோயாவுந்தீரும் நிலையாத பவுத்திர முமாறிப்போகும், சாறப்பாயிருமலதுதீரும்பாருசார்வாக மேகநோய் பறக்கும்பாரு கூறப்பாபத்தியமோயிச்சாபத்தியம் குறிப்பாகயிம்ம ருந்தை கைவிடாதே. (௱௨௭)

விடவேண்டாமிம்மருந்தைகைபாகந்தான் விரும்பியே முறை யோடே செய்தாயானால், படவேண்டும்கைமுறையாய்ச்செய்துபார்த் தால் பலிக்குமதுஎன்பாகம்பலிக்குமப்பா, தொடவேண்டாமின்ன மெ ருகைபாகந்தான் தோற்றமில்லைசித்தியப்பா சித்தியாச்சு, கட வான வங்கபற்பம் செப்பக்கேளும் காசினியிலாருந்தான் சொல்லார் பாரே. (௱௨௮)

வெள்வங்கபற்பம்.

பாரப்பாமாந்தர்களே வங்கபற்பம் பதிவானவங்கத்தைச்சுத்தி செய்து, நேரப்பாகருவேப்பிலைகட்டைக்குள்ளே நேராகப்பொதிந்து மேகவசம்செய்து, சீரப்பாகசபுடத்தில் போட்டாயானால் சிறப்பாக வங்கமது நீரும்பாரு, மாரப்பா அரிசியிடைவெண்ணெய்தன்னில் வாகாக வுண்டிடவே வியாதிபோமே, (௱௨௯)

போமேதான்கவுசையொடுகறுப்புமேகம் பொல்லாதகைக்கறு ப்பு அரைக்கடியன், தாமேதான்மேகவெள்ளை தடிப்புக்குஷ்டம்தனி யான மேகத்தின்வூறல்போகும, சாமேதான்அரிகிரந்திபொரிகிரந்தி சார்வானமுளைமூலமகலும்பாரு, நாமேதான்நந்தீசர் பாதம்போற்றி நாதாக்கட்குரைத்ததுவுமுண்மையாமே. (௱௩௰)

கரிவங்கபற்பம்.

உண்மையாம்கரிவங்கபற்பம்சொல்வேன் உத்தமனேகரிவங்கஞ் சுத்திசெய்து, கண்மையாமஎட்டியிட்டபுளியம்பட்டைக் கருவானதா ளக மூன் சபண்ணி, நண்ணயமாப்மேற்கவசம்பட்டைபூண்டு நலமாக சீலைசெய்துகஜபுடமேயிட்டால், வெண்மையாம்பற்பமது தவளம் போலாம் வேதாந்த தாயெனக்கருளினளே. (௱௩௧)

அருளினுள்ஆயுறுவேதந்தன்னை அடவாகச்செய்துகைமுறை பார்த்தோர்கள், மருளவேயிம்மையிலு மறுமையிலுந்தான்மகத்தான பெரியோர்கள்வாசம்பெற்று, தெருளவேஎந்நாளும் பதவிகார்த்துச் சிறப்பாக ரிஷிகளுடன்வாதுகூறி, வெருளவேஅரனுற்குத்தொண்டு செய்து விமலர்பதமடவியிலேவாழ்குவாரே., (௱௩௨)

துராபற்பம்.

வாழ்குவார்மானிடற்கு பற்பமொன்று வகுப்புடனேமாட்டுகி றேன்துராபற்பந்தான், ஆழ்குவார்இப்பற்பம்வேதைகோடி அறைய வொண்ணக்குறுக்குவழிப்பாதைமெத்த, தாழ்குவார்இத்தொழிலோ லேசோமென்பார் தாரணியில்செய்குவது பாடுமெத்த, மூழ்குவார் வாதமென்ற கடலிலேதான் முழுகுவார் முழுகுவார் முழுகுவாரே.()

வாறுனதுராத்தையே யுருக்கிக்கொண்டு வாகானமிளகனைக்கி ராசமிட்டால், நாறுனதுராவதுவும்மடிந்துபோச்சு நாதமாம்பூநீரை க்கவசமிட்டு, சேரானகெசபுடமே யிட்டாயானுல் திறமாகமாசற்ற பற்பமாகும், நீறுனபற்பமதை லேகியத்தில் நேரானவெண்ணெய்த னில் கொள்ளுவாயே, (௱௩௪)

கொள்ளுவாய்மண்டலந்தான் கொண்டாயானுல்கொண்டவற்கு எழானைப்பலனுண்டாகும, விள்ளுவாய்ப்பத்தியமோ யிச்சாபத்தி யம் விரும்பியதோர்காடைபுறுகொக்குமாகும், தெள்ளியதோரிறைச் சிவகை யாகுங்கண்டீர் திழ்ப்பானமச்சவகையாகாதப்பா, புள்ளின மாம்வூர்க்குருவி வுள்ளானுகும் புளிவிகையும்தவிர்ப்பதுவும் நன்று நன்றே. (௱௩௫)

நன்றுனசையோகமாதாவாகா நாயகனேபெண்மாய்கை யாறுதி ங்கள், குன்றுனமாய்தைதனைநீக்கினுக்கால்குணமாகும்திரேகமதுவச் சிரகாயம், தன்றுனஅயபற்மம்சாற்றக்கேளும் சார்வான அயத்தகடு லேசாய்த்தட்டி, பன்றுனமிளகரணைமூலிதன்னில் பாங்காகப் பத்து புடம் போட்டிடாயே. (௱௩௬)

அயபற்பம்.

போட்டிடவே சட்டையது யுதிரும்பாரு பொல்லாத அயமது வும் வெட்டையாகும், நாட்டிடவே காரனத்தின் கடலைமூலி நலமான மூலிதன்னைக்குகைபோல்செய்து, நீட்டிடவே அயப்பொடியையபொ தித்துமூடி, நிர்ண்ணயமாய்நந்தினயத்தான் போற்றிசெய்து, மாட்டி டவேகெசபுடமேயிட்டாயானுல் மாசற்றபற்பமது ஆச்சுஆக்சே. ()

ஆச்சப்பா அயபற்பம் செப்பக்கேளு அரிசியிடைவெண்ணெய தனில்கொள்வாயானால், பேச்சப்பாயில்லை யப்பாவியாதிநீங்கப் பேரானமருந்தொன்றுவேண்டாம்பாரு, நோச்சப்பாதிரேகமது நரம்பு தாது நோயற்றவலுவுண்டா மிகுந்தபற்பம், வீச்சப்பாகாந்திழது அழகுண்டாம் வித்தகனேநந்திசொல்லவுணாத்தோம்நாமே. ()

## வெண்கலப்பற்பம்.

நாமானவெண்கலத்தின்பற்பம்சொல்வேன் நாட்டிலேவிளைகின்றயிம்பூராவும், கோனைமூலிதன்னைக் குறிப்பாகத்தான் சுணமாகத் தாளகத்தைக்கீழ்மேலிட்டு, தேனைக்கவசமது எழுஞ்செய்து தெளிவாக்க் கசபுடமேயிட்டாயானல், மானைபற்பமதுதவளம்போலாம் மண்டளத்தில்சொல்லரிதுநாவேதுண்டோ. (௱௩௯)

உண்டானபற்பமதை பரங்கிச்சக்கை யுத்தமனேசூரணித்து கடிகைதன்னில், ரண்டானமண்டலந்தான் கொண்டாயானல் நலமானவியாதியெல்லாமகலும்பாரு, திண்டானபத்தியமேயிச்சாபத்தியம் திறமாகத்தானருந்தும் பானந்தன்னில், பண்டானசையோகமாகாதப்பா பாடினேன்தன்வந்திரிபாடினேனே. (௱௪௰)

## இரசபற்பம்.

பாடுகிறேன்மானிடற்குரசபற்பந்தான் பாங்காக ரசமதனைச்சுத்திசெய்து, நீட்டினென்கெந்தகததின் பற்பந்தானும் நேரான அலரிச்சாற்றதன்னலாட்டி, மூடினேன் பில்லைசெய்து ரவியுலர்த்திமுத்தமனேகுக்குடமேபோட்டாயானல், வாடியேதவளம்போல் பற்பமாகும் வாகாகத்தன்வந்திரிபயின்றவாறே. ௱௪௧)

பயின்றதொருபற்பத்தை யெடுத்துமேதான் பாங்காகத் தேன்நெய்யில்அருந்திரானல், நயின்றதொருகைப்பிடிப்புக் கால்பிடிப்பு நலமான மூக்கறைநோய்தீரும்பாரு,வெயின்றதோர்சர்வாங்கம்வாதம் போகும் வெளியான கிரந்திமுதல்வாயும்போகும், அயின்றதொரு சூலைமுதலனைத்தும்நீங்கும் அப்பனேயுண்மையிதுவுண்மைபாரோ.()

பாரப்பாபத்தியமோமெத்தவுண்டு பாரினிலேயாருந்தான் கூற மாட்டார், சீரப்பாபுளிபுகையும் தவிர்க்கவேண்டும் செழிப்பானபேயகமதைநீக்கவேண்டும், நேரப்பா தலைமுழுகும் நாளிலேதான் நீக்கிவிடு மருந்துண்ணலாகாதப்பா, பாரப்பாயிப்பற்பம்பலுவுமெத்தப் பாரார ளும்ராசர்களும்செய்வாரன்றே. (௱௪௩)

பாஷாணக்கட்டு.

அன்றானபாஷாணக்கட்டிவாங்க அவனியிலேமாந்தர்களோ அறியப்போரார், நன்றானசாரவுப்பை காலாய்க்கொண்டு நயமானஅண்டோடும் வொன்றாய்ச்செய்து, குன்றானக்குகைபிடித்து மூசைசெய்து குணமான திருகுகள்ளிப்பாலாலூட்டி, வன்றானக்குக்குடமே போட்டாயானால் வளமாகமாசற்றபற்பமாமே. (ராசச)

பற்பமாய்நவலோகம் தன்னிற்பாய்ச்ச பளிங்கானசெம்பதுவும் ஊறலற்று, துற்பமாம்வெள்ளையதுயாகும்பாரு துணையானரவியிடைதான் சேர்த்தாயானால், நிற்பமாம்சரிகைவெள்ளிமேலதாச்சு நேரான பற்பமதைச்சங்கிக்கீய்ந்தால், சொற்பமாம்குளிர்வாத சன்னிபோகும் சோர்வில்லாவாதமெண்பதுவும்போமே. (ராசரு)

கண்பூவுக்குமருந்து.

போமேதான் அரப்பொடியும் லிங்கிதானும் புகழானசெம்பதுவும்பீதரோணி, தாமேதான்யிந்துப்புக்கூட்ச்சேர்த்துத் தனியான் நந்தியின்பூச்சாற்றாலே, சாமேதான்நாற்சாம மாட்டியேதான் சமர்த்தாகசிமிழ்தனிலே பதனம்பண்ணு, ஆமேதான்மைதனையேயெடுத்துத்தீற்ற ஆணிமுதல்கண்படலமகலுந்தானே. (ராசசா)

சாயரட்சைசுரத்திற்குமருந்துகியாழம்.

தானனமாந்தருக்குச்சுரமேவந்தால் சார்வாகக்கியாழமொன்று தொகுக்கக்கேளாய், கோனனநிலவேம்பு மருட்கிழங்கு கொடிதான ரோகணியும்புடலும்பட்டை, தேனனசீந்தலுடன் வேம்புதானும் சிறப்பான கடுக்காயின்முத்தக்காசு, பானனசேங்கோட்டை மரத்தின்பட்டை பாங்காகச் சரியெடையாய்தூக்கிடாயே. (ராசஎ)

தூக்கியேகோரையின்கிழங்குங்கூட்டித் திறமாகநாழிசலம்விட்டுக்காய்ச்சி, தாக்கியேயிரவேளைகொள்வீராகில் தங்காதுமாலைசுரம தரியாதோடும், நோக்கியேபத்தியமோபுளிகாலாகும் நொறுங்கவே மற்றதெல்லாம்கொடுக்கநன்று, போக்கியே யேழுநாள்மருந்தையுண்டுபுகழாகமற்றாநாள்நீராவூத்தே. (ராசஅ)

ஊத்தியேகூந்தலுக்குஞ் சிசுக்குந்தா னுத்தமனே சாம்பிராணிப்புகையைக்காட்ட, சாத்தியேபரிமளப்புகையும்வேண்டும் சார்வாகதூக்கமது வாகாதப்பா, நேத்தியாய்மறுநாளில் புளியைக்கூட்டு நெறியுடனே பத்தியமோதப்பாதப்பா, பூர்த்தியாயிக்கியாழ முறை பொய்யாது புண்ணியனேநந்திபதம்போற்றினேனே. (ராசகூ)

நீரிழிவுக்கு

போற்றினேன்தன்வந்திரிபகவான்தானும் புகலுகிறேன் மானிடற்கு மருந்துவொன்று, சாறறுகிறேன்நீரிழிவுகண்டபேற்கு தப்பாதுவெடியுப்புப்பழங்கல்லுப்பு, ஆற்றுகிறேன்யெள்ளெண்ணெ யிந்தமூன்றும்அன்பாகவே காய்த்துக்கொடுத்தாயானல, தூற்றுகின்றநீரிழிவுநீர்க்கட்டும்போம் துலையாதசலதையடைப்புமநீங்குந்தானே. ()

நீர்ச்சுறுக்குக்கு.

தானகநீர்சுறுக்குவந்தபேற்குத் தயவான கசகசா பலமே வொன்று தேனனவால்மிளகுபலமோகால்தான் தெளிவான சீனியதுபலமோரண்டு, வேனனபசுவின்பால்பலமோயெட்டு விதமானதேத்தானின் கொட்டைகாலு, நானனயிதுவெலா சூரணித்து நலமாகநெய்தனிலேக்கிளறிக்கொள்ளே. (௫௧)

கொள்ளவேமண்டலங்கால்கொண்டாயானல் குடிலமாம் நீர்ச்சுறுக்கு நீர்ச்செரிப்பு, அள்ளவேநீரெரிச்சல்வெள்ளைபோகும் அப்பனைநாமுமக்குச்சொன்னேம்பாரு, விள்ளவேயாருக்குஞ் சொல்லவேண்டாம் வேதாந்ததாயெனக்குஅருளினள்காண், தெள்ளவேவில்வாதித்தயிலஞ் சொல்வேன் தெளிவாகத்தாமுணாத்தவேதந்தானே.

வில்வாதித்தயிலம்.

வேதந்த..ன்மாந்தர்கள்பிழைக்கவென்று விரும்பியதோர் வில்வாதித்தயிலஞ்சொல்வேன்,போதந்தான்நன்னரி நத்தைச்சூரிபொலிவான அசுவகெந்திசித்தாமுட்டி, நாதந்தான்பொன்முசுட்டை சிந்தில்தானும் நலமானவிலமிச்சுப்பலமோவொன்று, சீதந்தான்முருங்கைவேர்பேராமுட்டி சீரானயிலவங்கம் செவியமாமே. (௫௩)

செவ்வியமாம்கார்க்கோலும் பத்திரிமஞ்சள் சிறப்பானத் திப்பிலியின் மூலத்தோடு, அவ்விப்பழாம்சிற்றரத்தைசிறுகாஞ்சோறி அழகானதிரிகடுகுசமனதாக, கவ்வியமாமிதுகளெல்லாஞ் சூரணித்துக் கணக்காகப்பாண்டமதில் போட்டுமேதான், பவ்வியமாம்எள்ளெண்ணெய்ப்படிதானொண்டு பாங்காகவிளநீரும்படிதானென்றே. ()

ஒன்றானப்பசுவின்பால்படியோரெண்டு வுத்தமனேஎலுமிச்சம்பழச்சாரொன்று நன்றானயிதுகளெல்லாம்மொன்றாய்க்கூட்டி நலம்பெறவேமெழுகுபதம்தன்னிற்காய்ச்சு; குன்றாமல்கணபதியைப்போற்றிசெய்துகுவலயத்தில் மண்டலந்தான்முழுகிவந்தால், அன்றான பித்தமது அகன்றுபோகும் அப்பனேநந்தியெனக்குறைத்தவாறே.()

வயிற்கடுப்புக்கு.

வாருனகொத்தமல்லிசாதிக்காயும் வளமானகருஞ்சீரம் காட்டுச்சீரம் கூருனமாசக்காய்செண்பகப்பூ குணமானகிளியூறல் பட்டைதானும், நீரானகிராம்புடனேசெண்பகப்பூ நிலையானபத்திரியும் கருவாய்ப்பட்டை, நேரானகோரையின்கிழங்குங்கூட்டி நிறையாகச்சமனிடையாய்தூக்கிடாயே. (௱௫௬)

தூக்கியேசூரணித்துசீனிபாதி சிறப்புடனே அந்திசந்தி கொண்டாயானால், தாக்குகின்ற வயிற்றுவலி வுளைச்சல்வாதம் தப்பாதுபித்தசமுதல் சீழோடும், தேக்குகின்ற கிரிமிமுதல் மலருந்தங்கள் தெளிவாகு மிம்மருந்து சுருக்குமெத்த, பாக்குகின்ற பண்டிதர்சூட்சாசூட்சம் பரிட்சைமுதல்கண்டறிவர் யோகியாமே. (௱௫௭)

தாம்பரசெந்தூரம்.

சொல்லுகிறேனுலகத்தில் மாந்தர்க்கென்று சுருக்காகத் தாம்பரத்தின்செந்தூரங்கேள், வெல்லுகிறேன்முருங்கைவேர்கல்லுப்போடு விதமான அன்னமுடன்பேதிதானும், கொல்லுகின்றகாக்கணத்தின் மூலிதன்னில் குணமாக அரைத்துகுகை வலுவாய்ச்செய்து, பல்லுகின்ற தாம்பரத்தைக் குள்ளேவைத்துப் பாங்காகப்பொதிந்துமே சீலசெய்யே. (௱௫௮)

செய்துமேகெசபுடத்திற் போட்டாயானல் சீரானசெந்தூரமருணன்போலாம், நைதுமேபனவெல்ல மனுபானந்தான் நயமாகவரிசியிடை கொண்டாயானல், கொய்துமேகுஷ்டமெங்கே தடிப்புயெங்கே குரைநோய்கள் கிரந்திவகை யெங்கேபோச்சு, எய்துமே நாலாயிரத்துச் சிலுவாணந்தான் யென்மகனேகாடுறையு மென்பர்தாமே.

தாமேதான்பத்தியமோயிச்சாபத்தியம் தயவானயிறைச்சிவகையாவுந்தீரும், சாமேதான்புளிபுகையும் நீக்கவேண்டும் சார்வானமோர்தயிரும் சேர்க்கலாகும், காமேதான்சீதளப்பண்டமாகா கனமான மற்றதெல்லாம் சேருசேரு, ஆமேதானிம்மருந்து யாருஞ்சொல்லார் அப்பனேநந்தியெமக்கறைந்தவாறே. (௱௬௰)

மகாயேலாதித்தயிலம்.

வாருனயேலாதித்தயிலஞ்சொல்வேன் வாகானஆலரசுஅத்திப்பிஞ்சு கூருனநாவலுடப்பட்டைதானும் குணமான ஆவாரைகடலிருஞ்சி, தேருனகருவேலன்முள்வேலந்தான் திடமானசதாவேரிதசமூலந்தான், நீருனபாலையுடப்பட்டைதானும் நேரானநெல்லியுடச்சாறும்பாரே. (௱௬௧)

சேரப்பாகெந்தகமும் கொன்றைவெட்டிச் சிறப்பானமுதியாரு கூந்தல்தானும், நேரப்பாசெங்கழுநீர்வெட்பூலாவும் நிலையானகருங் காலை முத்தக்காசும், சீரப்பாநன்னரிதண்ணீர்மிட்டான் சிறப்பான நிலவாகைத்தண்டுஞ்சேரு, சாரப்பாகாட்டுமல்லிதானழவில்வங் கடி தாகயிடித்துமேகியாழஞ்செய்யே. (௩௬௨)

செய்யப்பாசலம்நாழிஆறதாகும் சிறப்பான இளநீரு யெட்டதா கும் மெய்யப்பாஆவின்பாலஞ்சதாகும், மேலானயெள்ளெண்ணெய் நாழியஞ்சு, பெய்யப்பாசாற்சுண்டக்காய்ச்சியேதான் பிசகாமல்கடுகு பதம்தன்னிற்காய்ச்சி பையப்பாமண்டலந்தான் முழுகினுக்கால் பற க்குமடா வியாதியெல்லாமகலுந்தானே. (௩௬௩)

அகலுவாம்பித்தம்நாற்பதுவும்போகும் அப்பனேவாத மெண் பதுவும்போகும், நிகலுவாம்சூலைபதினெட்டும்போகும் நேரானகிரந் திபதி னெட்டும்போகும், புகலுவாம்கயரோகம் சயரோகம்போம்புக ழான பீனிசம்மண்டைக்குத்து, நகலுவாம்கபாலத்தின் சூடேபோ கும் நாட்டிலேவித்தையிது அதீதங்காணே. (௩௬௪)

அதீதமாம்வுளமாந்தைசீறல்போகும் அப்பனேகுளிர்சீதவாதம் போகும், துதிதமாம்பித்தவெட்டை யழலைபோகும் துலையாத பாண் டுவென்றமூர்ச்சைபோகும், கதிதமாம்கழல்வாதம் சச்சுவாதம் காணு மல் வீடுவிட்டுப்போகும்பாரு, பதிதமாம்துடைவாதம் துலைந்து போகும் பாடுகிறேன்தன்வந்திரிவலுமைதானே. (௩௬௫)

அயமணிக்கலாபசெந்தூரம்.

தானான அயமணிக்கலாபஞ்சொல்வேன் சாற்றுகிறேன்மானிடர் கள்பிழைக்கவென்று, கோனானசெந்தூரம் அயப்பொடியுங்காந்தம் குணமான அரிதாரம் ரசமுமாகும், தேனானமேனிச்சாற் குமரிச்சாற் றால் தெளிவாகவாறுநாள் அரைத்துமேதான், பானாகப்பில்லைசெய்து ரவியுலர்த்திப் பாங்காகவமூசிலைசெய்திடாயே. (௩௬௬)

செய்துமேகெசப்புடத்தில் போட்டாயானல் சிரானசெந்தூர மென்னசொல்வேன், நைதுமேஅருணசெந்தூரமாகும் நலமானசெந் தூரம் பதனம்பண்ணு, கொய்துமேலேகியத்தில் தேனிற்கொள்ள குடிவிட்டுப்போகுமடாவியாதியாவும், பைதுமேயிம்மருந்து சுருக்கு மெத்தப் பாடுகிறேன்நந்தீசர்பாதங்காப்பே. (௩௬௭)

காப்பானபாண்டுவுடன்சோகைபோகும்கருவானமகோதரமும் பிலிபோகும், தோப்பானகவுசையொடுரெத்தககட்டி தோர்வானநீராம் பற்கட்டிபோகும், வேப்பானசூதகத்தின்வாயுபோகும் விதமானசந்

திடுப்புகுன்மம்போகும், தீப்பானதிரோகமதுசட்டைதள்ளும் திறமா னசெந்தூரம் பெருமைபாரே. (௱௬௮)

குன்மம்ஆறுக்கும்ரத்நக்கெண்டியுப்பு.

பாரப்பாரத்நகெண்டி மாந்தருக்குப் பாடுகிறேன் கறியுப்புச் சேரோவென்று, சேரப்பாயெருக்கனிடபாலினாலே சிறப்பாக மூன் றுநாளாட்டியேதான், தேரப்பாபில்லைதட்டிக்காயவைத்துத் தெளி வாகக் குக்குடமேபோட்டாயானால், ஆரப்பா என்னசொல்வேன் வுப்பின்மார்க்கம் அளகாபுரிக்கொப்பானதவளமாமே. (௱௬௯)

தவளமாம்பற்பமதை புளியம்பூச்சாற்றால் தனிவாகவேயரைத் துப்பில்லைசெய்து, கவளமாம்பத்துமுறையரைத்துமேதான் கனமா கப் பத்துபுடம்போட்டாயானால், பவளமாம்நிறம்போலேசெந்தூரிக் கும் பாங்கான செந்தூரம்வேகமெத்த, நிவளமாம்தேனதிலேகொண் டாயானால் நிலையாதுகுன்மமென்றதானும்போமே. (௱௭௰)

போமேதான்வாயுவென்ற தெண்பதும்போம் பொல்லாத பக்க சூலைவாதசூலை, சாமேதான்பொருமலதுஊஷ்ணவாய்வு சார்வானகிர ணவலிகுடல்வாதங்கள், நோமேதான்அக்கினியின்மாந்தம்தீரும் நு ணுக்கமுள்ள புளித்தேப்பமகலும்பாரு, ஆமேதானிம்மருந்து நந்தி தானு மருளினர்ஆயுறுவேதந்தானே. (௱௭௧)

தானனபத்தியமோவறிந்துகூட்டு தவறாது திரோதாயின் மாய் கைதள்ளு, கோனனஅட்சதையும் பூசைமார்க்கம் குறையாமல்செய் துமே பணிந்துபோற்றி, தேனனசாஸ்திரங்கள் நன்றாய்ப்பார்த்துத் திறமாக கைபாகம்பிசகிடாமல், வேனனசித்தர்களைமனதிலெண்ணி விருப்பமாஎவ்வகையுஞ் செய்திடாயே. (௱௭௨)

சிரோரத்தினமதனசிந்தாதிலேகியம்.

செய்யவேமாந்தருக்கு சிரோத்தினமொன்று சூட்டுகிறேன் சிந் தாதிலெகியந்தானாகும், பையவேகருணையொடு விருகுங்கொன்றை பாங்கானசீந்திலொடு வச்சிரவல்லி, தையவேமுள்ளங்கிநடலையாகும் தயவான அசுவமுத்தங்தேவதாரம், முய்யவேசிறுகிழங்கு வுள்ளிதா னு முயர்வான நெய்தலொடு அல்லிசேரே. (௱௭௩)

சேர்த்துமேமர்தளையின்வி[illegible]ங்கூட்டிச் சிறப்பானபுனலத்தண் டுசடமாஞ்சாகும்,பார்த்துமேசூரிவேர்நச்சைச்சூரி பாங்கானமூதண் டவேருஞ்சேரு, நீர்த்துமேதாளிசமாமாடாதோடை நேர்ப்பான ஆ ணிலைப்பனையின்மூலம், கூர்த்துமே வேலியுடப் பருத்திதானும் குணமான முள்ளிவேர் நெல்லிக்கூட்டே. (௱௭௪)

கூட்டியேகடலாஞ்சி பட்டைதானும் குணமான அசுவகெந்தி சிவனார்வேம்பு, நீட்டியேபுள்ளடியின்வேறுங்கூட்டி நேர்ப்பாகசூரணமாய்ச்செய்துகொண்டு, தீட்டியேவெல்லமதைப்பாகுசெய்து திடமான நெய்விட்டுக்கிளறியேதான், பூட்டியேதேவியைத்தான் போற்றிசெய்து புகழாகமண்டலந்தானுண்டிடாயே. (௱௭௫)

திரும்வியாதி.

உண்டவற்குஎழானைப் பலனுண்டாகும் உத்தமனே யிப்பாகமுறைபொய்யாது, அண்டவொண்ணு நோயனைத்துமகலும்பாரு அப்பனே குத்துவாதம்தாதுநஷ்டம், கண்டதொருவெள்ளைமுதல் கயரோகங்கள் கடிவானநீர்க்கடுப்பு நீர்த்தோஷங்கள், தெண்டமுடன் கூடுவிட்டுப் போகும்பாரு தெளிவாகயிம்முறைதான் முறைபொய்யாதே. (௱௭௬)

மதனகோலாகலரத்நாவளிலேகியம்.

பொய்யாதஆயுறுவேதந்தானும் பூட்டுகிறேன் மாணுக்கர்பிழைக்கவென்று, தொய்யாதுமதனகோலாடமொன்று சூட்டுகிறேன்சூட்சாதிசூட்சமொன்று, நையாதுவில்வவேர் நிலையாவாரை நவிலுமே சூரத்து நிலையாவாரை, செய்யாதுசூரத்து சிவதைவேரும் திறமான கொட்டாசுனுங்கிவேறே. (௱௭௭)

வேறானமஞ்சிட்டித் துமட்டிவேரும் வெள்ளைச் சாட்டரணையாம் அகிலின்கட்டை, தாறானநறுநாளி தேவதாரம துளையானசந்தனமாமுத்தக்காசு, நீறானவெட்டிவேர்முக்காவேளை நோனநன்னாரி சார்சுவேரும், வாறானமுளகருணை முக்கத்தாரிவாகானசங்கம்வேர் பிரம்பின்மூலம். (௱௭௮)

மூலமாந்தாமரைக்கிழங்குங்கூட்டி முதன்மையாம்குமரிக்குவாசன்பட்டை, தாலமாம்நுணைப்பட்டை அரசின்பட்டை தயவானசரக்கொன்றை ஆலுமூலம், கோலமாம்பூரிபட்டை காட்டிலவன்பட்டை குணமான முருங்கைவேர்கொஞ்சிப்பட்டை, பாலமாம்பெருமருந்து பட்டைதானும் பாங்காககருநெல்லி செவியமாமே. (௱௭௯)

செவியாம்கொடிவேலிசித்தாமுட்டி சீரானபேராமுட்டி அழிஞ்சிற்பட்டை, தவ்வியமாம்களாவேர் சிந்திற்றண்டு தயவான பஞ்சாங்கம் துத்திவேராம், ஒவ்வியமாம்வேப்பனுட பட்டைதானும் உயர்வான பூனைக்காஞ்சொரியின்வேராம், பவ்வியமாம் தழுவாழைக்காட்டுவாழை தயவான மரமஞ்சள் பரங்கியாமே. (௱௮௰)

ஆமேதான்யெலுமிச்சங் கண்டங்கத்திரி அரிதானதுதுவளை கடம்பன்பட்டை, போமேதான்புனல்த்தண்டு மூதண்டம்வேர் புகழான ஆணிலைப்பனைக்கிழங்கு, வேமேதான்சடமாஞ்சிதாளிசமூலம் விதமான குருவிவேர் ஆடாதோடை, நாமேதான்மைசாலக்கடிதண்ணீர்மிட்டா னலமான வேலியுடப்பருத்திதானே. (௱௮௧)

தானனகரிசலாங்கண்ணிமுள்ளி தயவானபிரமியிலை துளசிமூலம், பானனபொடுதலையும் அசுவகெந்தி பாங்கான கடலாஞ்சிப்பட்டைதானும், கோனனசிவனாரின்வேம்புதானும் குணமானசிறுபுள்ளடியின்மூலம், தேனன வகைக்குப்பலமஞ்சதாகத் தேர்ந்ததோர்பாண்டத்திற் கியாழஞ்செய்யே. (௱௮௨)

சூரணத்தினுசுகள்.

செய்துமேசூரணத்தின்தொகுப்புச்சொல்வேன் சிறப்பான புங்கம்பூ ஆவாரம்பூ, கொய்துமேதென்னம்பூ பன்னீருபூ குணமானமதனகாமேஸ்வரன்பூ, பெய்துமேதிரிகடுகுதிரிபலாதிபில்மான அசுவகெந்தியெலுமிச்சம்வோ, நைதுமேநிலப்பனையின்கிழங்குதானும் நலமானசிறுதேக்குசோம்புமல்லி. (௱௮௩)

மல்லியாம்சீரகங்கருஞ்சீரந்தான் மறைவானகானகத்தின் சீரந்தானும், கொல்லியாம்குருசாணியோமந்தானும்குறிப்பானவெந்தயம் நல்லவோமம், முல்லியாம்காசிராசாதிக்காயும் உத்தமனேலவங்கமாம் லவங்கப்பத்திரி மெல்லியாம்சாதிப்பத்திரிலவுங்கைப்பட்டை மேலானசிறுலவுங்கப்பட்டைசேரே. (௱௮௪)

சேர்த்துமேவால்மிளகுஅன்னுசிப்பூ சிறப்பானபூனையென்றக்காலின்வித்து, கோர்த்துமேவிலாம்பிசின்செண்பகப்பூ குணமான யிஸ்கோலின்விரையுஞ்சேர்த்து, பார்த்துமேகேக்குவிரைபேதானுவும்பாங்கானநீர்முள்ளி ரூமஸ்தாகும், ஆர்த்துமேதுத்திவிரை ஆவாரம்வித்துஅழகான வெள்ளரியின்முருங்கைவித்தே. (௱௮௫)

வித்தானகாட்டின்முருங்கைவித்துவிரைவான அத்திவிரைஅரசன்வித்து, சத்தானஆலம்விரை துத்திவித்துச் சார்வானதுளசிவிரைகெஞ்சாவித்து, கொ ர தானபத்திராசிருத்திரவித்துக் குணமானசமுத்திரா சோஷிவித்து பத்தானநத்தைபென்றசூரிவித்துப் பதமானபருத்திவிரை பூவரசன்கூட்டே. (௱௮௬)

கட்டியேசெம்பருத்திநெருஞ்சிப்பழமும் குணமான விளாம்பிசினும் வேலம்பிசினும், மீட்டியேயிலவம்பிசின் முருங்கைப்பிசினும்

இழலானபீசுபந்துஅக்கரோட்டி, தீட்டியேபேரீச்சங்கசகசாவும் திற மான திராட்சிப்பழம்சிறுநாகப்பூ, பூட்டியேபூமிசர்க்கரைக்கிழங்கு புகழானவாகாசக்கருடன்தானே. (௱அஎ)

தானனஅதிமதுரம் அக்கிராகாரம் தாக்கானவேலரிசி தாளிசப் பத்திரி, கோனனலவுங்கப்பத்திரியிலையுங்கூட்டு குறிப்பானசதகுப் பை கூகைநீரும், மானனகல்நாருகுங்குமப்பூ மகத்தானகல்மதமகற கடகசிங்கி, பானனசலாசத்துவாய்விளங்கம் பதிவானகார்போகவரி சியாமே. (௱அஅ)

அரிசியாம்விழலரிசிரேவல்சின்னி அரியவோரிதழின்தாமரையு ங்கூட்டு, வரிசையாய்சிந்திற் சர்க்கரையுங்கூட்டு வாகாகவகைக்கு வொரு பலமாய்த்தூக்கு, கரிசையாம்சரக்குமுதல்வித்துயாவும் கரு காமல்சூரணித்து வைத்துக்கொள்ளு, பரிசையுடன்ரசவகைகள் எடு ப்பதற்குப் பதிவாகப்பாடுகிறேன்பாடுறேனே. (௱அசு)

இரசவகை.

பாடுகிறேன்முருங்கைப்பூ ரசமொன்றுகும் பதிவானசெவ்விள நீர் படியொன்றுகும், தேடுகின்றநெல்லிக்காய்ப் படியொன்றுகும், திறமான கதலிச்சார்படியொன்றுகும், நீடுகின்ற தேங்காய்ப்பால்படி யொன்றுகும் நேரானசெங்கரும்புபடியொன்றுகும், பாடுகின்ற நெல் லிரசம் படியொன்றுகும் பதிவானதண்ணீர்மிட்டான் படியொன் றுமே. (௱கூ)

ஒன்றுனபசும்பாலு படியொன்றுகு முத்தமனே ரசவகைகள் கூட்டுவாய்நீ, நன்றுனகியாழத்தைச்சுண்டக்காய்ச்சி நலம்பெறவே ரசவகையாவும்விட்டு, பன்றுனசினிசர்க்கரையுஞ்சேர்த்து பாங்கான ஆவினுடநெய்யும்விட்டு, குன்றுதமலைத்தேனுங்கூடவிட்டுக் குறிப் பாகலேகியத்தைப் பதமாய்க்கிண்டே. (௱கூக)

கிண்டியேமெழுகுபதம்தன்னில்வாங்கிகிருபைபெறவாசனையும் பச்சைப்பூரம், தண்டியேகஸ்தூரிசாம்பிராணிப்பூ சார்வாகப்பன்னீ ரும்வாசம்சேர்த்து, அண்டர்பிரான்றனைவணங்கிப் போற்றிசெய்து அடவாகநந்தியதம்வணங்கிநின்று, பண்டிதத்தின்பிரகாரம்பிசகாமற் றுன் பாடிவைத்தேன் தன்வந்திரிவலுமையாமே. (௱கூஉ)

வலுமையாம்தன்வந்திரி பகவான்தானும் வசனித்தேன்கனக சபை நாதருக்கு, வலுமையாம்யிப்பாகமயாருஞ்சொல்லார் கடின மாமராசர்கள் செய்துபார்ப்பார், சுலுமையா மெளியோர்கள்செய்ய

மாட்டார் செய்வதற்குக்காயசுத்திவுடனேயாச்சு, பலுமையாமிம்ம ருந்துவுண்டபேர்க்குப்பாங்காகவேழானைப் பலனுண்டாமே. (௱௬௩)

உண்டவற்குப்பத்தியமோகாடையாகு முத்தமனேஊர்வனங்க ளூடும்புமாகும், கண்டமாமிறைச்சியுடன் பாலுமாகும் கனமானவ றுப்புக்கறிஎருவுமாகும், அண்டமுடன்கோழிமுட்டைவவ்வாலாகும் அன்பானகோழியுடன் மயிலுமாகும், பண்டிதரே யிதுமுறைதான் பொய்யாதையா பாங்காகப்பத்தியமாய் வுண்டிடாயே. (௱௬௪)

உண்டவற்கும்விந்தூறுங்கேணியாகுமுத்தமனேசித்தினியு மத் தினியுந்தானும், திண்டானபத்மினியுஞ் சங்கினிதானும் திடமான யிச்சாதிநாலுவேரும், வண்டாடுங்குழல்மாதுமன்னர்முன்னேவணங் குவார்லீலையிலேமுகஞ்சேர்வார்கள், பண்டான மன்மதன்போலீலை செய்து பட்சமாய் ரதியுடனேவாழ்குவாயே. (௱௬௫)

இதற்குச்சிரோரத்தினஸ்தானத்தயிலம்.

வாழ்குவார்தரணியில்மாந்தருக்கு வகையாகத்தயிலமொன்று சூட்டக்கேளும், ஆழ்குவார்நல்லெண்ணெய்ப் படிதானென்று அப் பனேபாலதுவும்படிதானென்று, மூழ்குவார்மூலிவகைகரசைதானும் முனையவில்வத்தின்மூலிதானும், தீழ்குவார்நொச்சிலியின் கொழு ந்துதானும் திடமானநெல்லியின்கொழுந்துதானே. (௱௬௬)

தானனஅல்லியின்கொழுந்துதானும் தயவானஅமுக்கரா தண் ணீர்மிட்டான், கோனனகடைசாக்குச்சித்தாமுட்டிக் குணமான சந் தனத்தின் தேவதாரம், பானனஅகிற்கட்டைமுத்தக்காசு பாங்கான முதியாருங்கூந்தல் கூட்டிவேனனைகைச்சோலம்சிரந்தானும் விதமா னநன்னாரிபாடமாமே. (௱௬௭)

பாடமாம்கோஷ்டமுடன்திரிபலாதிப் பாங்கான சுக்குடனே ஓமம் கூட்டு, நீடமாம்சோமபுடனே வில்வவோடும் நேரான்சாம்பிராணிக் கஸதூரிமஞ்சள், தேடமாம்வெட்டிவேர் சிவனார்வேம்பு திறமான அமுக்கராகொல்லன்கோவை, வேடமாம்தூளிடித்து யெண்ணெய் தன்னில் விரும்பியே கடுகுபதந்தன்னிற்காய்ச்சுக. (௱௬௮)

காய்ச்சியே கணபதிமாயன்போற்றிக் கருவாகத் தேவியைத்தி யானஞ்செய்து, ஆய்ச்சியே தாள்பணிந்து திரிபுரையைப்போற்றி அன்பாகத் தயிலமதைச் சீசாவிலூற்றி, தேய்த்துமே மண்டலந்தான் முழுகிவந்தால் தீராதபிணியகலும்தீரும்தீரும், மூய்ச்சியேவிடாமலே முழுகினக்கால் முயன்றேடும்சகலநோய் தீரும்பாரே. (௱௬௯)

பாரேசீசயரோகம்சயரோகந்தான் பரிவான அரைகடியும் சிரங்கும் தீரும், சீரேதான்கிரந்திமுதல்யாவுந்தீரும் சிறப்பான அஸ்தியில் வெட்டைதீரும், நீரேதான்கபாலத்தின்சூடுபோகும் நிலையானபீனிசமும்அகலும்பாரு, சேரோதான்நீர்ப்பாய்ச்சல்கண்ணருகல்தெளிவாகும் புழுவெட்டுத்தடிப்பும்போமே, (உ௱)

போமேதான்நாலாரெத்து நானூறுசொச்சம் பொதிவாரவியாதியெல்லாமகலும்பாரு, நாமேதான்நந்திசொன்னர் எந்தமக்குநமனுற்கிங் கேதுவகைதரவோயில்லை; வேமேதான்ரிஷிகட்கு யிந்தமுறைபாகம்வெகுசுருக்கு அதிதவித்தை சொல்லப்போமோ, தாமேதான் தன்வந்திரிபகவான்தானும் சாற்றினர்மானிடற்குச்சாற்றினரே. ()

கபாலக்கூந்தல்.

சாற்றினர்மாந்தர்கட்கு கபாலக்கூந்தல் தயவாகச் சொல்லுகிறேன் தயிலமொன்று, போற்றுகிறேன்புருஷரத்தினமாமூலிப் பொலிவான முதியாருகூந்தல்தானும், தூற்றினர்மரமஞ்சள் மாஞ்சிதானும் துடியானஅதிமதுரம் கோஷ்டமேலம், ஆற்றினர் செங்கழுநீர் செண்பகப்பூ அப்பனேகார்போகஅரிசியாமே. (௨௱௨)

ஆமேதான்நெல்லியின்சாறுதானும் அப்பனேயெள்ளெண்ணெய்படிதான்ரெண்டு, சாமேதான்பசும்பாலு படிதானென்று தயவாக மருந்தெல்லாம்வொன்றாய்ச்சேர்த்து; காமேதான்தயிலமதைக்காய்ச்சியேதான் தங்காமல்மண்டலங்கால் முழுகிவந்தால், போமேதான் பித்தநாற்பதுவும்போகும் பொல்லாதபித்தவெட்டை நீங்குந்தானே.

நீங்குமேகண்புகைச்சல் கண்மழுங்குநீங்காதபுழுவெட்டுத் தடிப்பும்போகும், ஏங்குமேமயிற்கூந்தல்வளரும்பாரு யெழிலானசாந்தலதுதீரும்பாரு, பாங்குபெறதிரேகமதுமின்னும்பாரு பரிவானசட்டையது தள்ளும்பாரு, ஓங்குமேதங்கம்போல்காந்தியுண்டா முத்தமனேயிப்முறையதீதங்காணே, (௨௱௪)

சடதாரி.

காணவேமானிடற்குசடதாரியொன்றுகடிமரம் சுக்கொன்றுயேலமொன்று, தோணவேமிளகொன்றுதிப்பிலியொன்று துடியானபூரமொன்று காரமொன்று, ஏணவேலிங்கமொன்று தாரமொன்று யெழிலானநாபியொன்றுயிரசமுமொன்று, ஊணவேகெந்தகமும் வீரங்கால்தான்வுத்தமனே யிதுகளெல்லாம்ஒன்ருய்க்கூட்டே. (௨௱௫)

கூட்டியேமலைத்தேனின் துளசிச்சாற்றாய் கொற்றவனேநாற்சாமமாட்டிஞக்கால், ஈட்டியேபாணமதுமாத்திரையாக்கி இணையான

குன்றிபோல் திரட்டிக்கொண்டு, கூட்டியேமுலைப்பாலில் துளசிச் சாற்றில் குறிப்பானக்கியாழமதில் கொடுத்தாயானால், தீட்டிவரும் பித்தசுரம்வாதசுரம்யாவும் பிரண்டோடிப்போகுமெனப்பேசினரே.

பேசினர்வெகுகோடி மருந்துதாமும் பிரயோகம்செய்வார்கள் ரிஷிகள்தாமும், காசினியிலிதுபோலயாருஞ்சொல்லார் கழறவொண்ணுசடதாரியிதுவேயாகும், தேசிச்சாற்றன்னிலுங் கொடுக்கலாகும் திறமானவிம்மருந்துசுருக்குமெத்த,ஊசிநீர்தன்னிலேதாக்கினக்கால் வுத்தமனேதிரேகமதுகாயமாச்சே. (உ௱எ)

மண்டோதரி.

ஆச்சப்பாமண்டோதரி மாத்திரைசொல்வேன் அப்பனே மானிடர்கள்பிழைக்கவென்று, தேய்ச்சப்பாகாரமுடன் விங்காந்தானும் தெளிவானபூரமொடுவீரந்தானும், மூய்ச்சப்பாழமமுடன் லவங்கந்தானும் வுத்தமனே சாதிக்காய்மாசக்காயும், ஏய்ச்சப்பாகசகசா லவங்கப்பட்டை யெழிலானவால்மிளகுரோணிசேரே. (உ௱அ)

சேர்த்துமேகடுக்காயும் சிங்கிதானும் தெளிவான சித்தரத்னத பேரரத்தை, கோர்த்துமேசூரணமாய்ச்செய்துகொண்டு கொற்றவனே எலுமிச்சம்பழச்சாற்றாலே, ஆத்துமேஅறுபதுசாமமாட்டு அப்பனே நற்றேனிலாறுசாமம், நீர்த்துமேகுன்றிபோல் திரட்டியேதான் நெடிதான ரவிதனிலேயுலர்த்திடாயே. (உ௱கூ)

உலர்த்தியே முலைப்பாலில்தேனிற்கொள்ள வுத்தமனே திரிதோஷசுரமும்போசம், நலர்த்திவிடும்சன்னிசுரம் அகன்றுபோகும் நளினமாம்பதிமூன்று சன்னிபோகும், கலர்த்துகின்ற நளிர்சுரமுந்தாபசுரம்போகும் கருவான அறுபத்துநால்சுரமும்போகும், பலர்த்துகின்றபத்தியமோ புளிப்புமாகா பாங்கானமாய்கையுந் தள்ளுதள்ளே. (உ௱ய)

தள்ளப்பாமண்டலந்தானிச்சாபத்தியம் தாழ்வாகயாதொன்றும் சேர்க்கவேண்டாம், விள்ளாதபொருள்களெல்லாம் இதிலேவிள்ளும் வீணர்களேயிந்நூலைப்பழிப்புச்சொல்வார்,கள்ளாருங்குடியர்கள்காமியோதான் கருதார்களிந்நூலின்கருத்தின்மார்க்கம, வள்ளாருமங்கையரேவழியின்மார்க்கம் வகுத்துரைத்தேன்தன்வந்திரியுரைத்தவாறே.

சுகுந்தமாது.

வாருனமானிடர்கள் பிழைக்கவென்று வசனித்தேன்சுகுந்தமாதுமாத்திரைதன்னை, கூறுனதாளகமும்சிங்கிதானும் குணமானலிங்க

முடன் பூரந்தானும், வேருன்கெந்தகமும் ரசமுந்தானும் வெழிலான வால்மிளகுலவங்கந்தானும், சாருனகாபோகவரிசிதானும் சார்வாகத் தேனதில் அரைத்திடாயே. (உ௱௰௨)

அரைமதுமேநாற்சாமம் பிரப்பின்சாற்றால் அப்பனேயிருசாமம கையான்சாற்றால், திரைத்துமேமேனியிடச்சாற்றினாலேதிறமாகவாறு சாமமாட்டியேதான், பறைத்துமேகுன்றிபோலுருட்டியேதான் பாங் காகப் பரணிதனில் பதனம்பண்ணு, நிறைத்துமேமுலைப்பாலில் தே னிற்கொள்ள நிற்காதுமூன்றுவிதச்சுரம்போந்தானே. (உ௱௰௩)

தானானசன்னிசுரம் பலன்மூன்றும்போம் சார்வான வாதமென் பதுவும்போகும், கோனானபித்தம்நாற்பதுவும்போகும் குறிப்பான சிலேத்துமமதுதொண்ணூற்றாரும், தேனனயிந்தவகை சுரமும்போ கும் தெளிவாகுமிம்மருந்து சுறுக்குமெத்த, பானனபத்தியமோபுளி யுமாகாப்பரிவாகசையோகமாகாதென்னே. (உ௱௰௪)

பீதாம்பரக்குளிகை.

என்னவேபீதாம்பரக்குளிகையொன்று யெழிலாகமானிடற்குப் பூட்டுகின்றேன், பன்னவேசாதிக்காயபின்கஞ்சாவும் பரிவானரூமஸ் துபேதானவும், சொன்னதொருபூனைக்கால் அமுக்கராவும் துடியான பற்பாடம் சிறுகாஞ்சோரி, நன்னயமாமுருங்கைப்பூச் சாற்றினாலே நளினமுடன் அறுசாமம்ஆட்டுஆட்டே. (உ௱௰௫)

ஆட்டியேகுன்றிபோலுருட்டியேதான் அழகாக பசும்பாலில் ரேகித்தேதான், கூட்டியேகதலியுட்ரசமுந்தானும் குணமானயிரு வேளைகொண்டாயானல், மூட்டிவிடுங்கோபாக்கினியதிகமாகி முக்கி முள்ள மன்மததாபமெத்த, குட்டினேன்ராஜாக்கள்செய்துபார்ப்பார் சுருக்காகும் நந்தீசர்பாதங்காணே. (உ௱௰௬)

காணவேபத்தியமே யிறைச்சியாகும் பதிவான காடைப்புறா வுடு ம்புமாகும், தோணவேகவுச்சிவுகைபாகாதப்பா துடியானவாயுவென் றபதார்த்தங்தள்ளு, சாணமாமற்றதெல்லாமாகுமாகும் சார்வானசீத ளப்பண்டங்களாகா, ஏணவேபத்தியமோ சரியாய்க்காரு என்மகனே நந்திசொல்லவுரைத்தோம்நாமே (உ௱௰௭)

இரத்தவாந்திக்கு.

நாமானமாந்தருக்குவாந்திகண்டால் நலமானதேசாவரம்சுக்குத் தானும், தாமானயேலமுடன்லவங்கந்தானும் தயவானசோம்புடனே சீரந்தானும், போமானதாளிசமாம்பத்திரிகூடம் பொலிவானதேவ

காரம் அகிலின்கட்டை, காமானசரக்குகளெல்லாந்தானும கருவாகச் சூரணித்துசீனிசேரே. (உ௱௰அ)

சேர்த்துமேசரியெடைசீனிதானும் சிறப்பாகவெண்ணெய்தனில்கொள்வாயானல், கோர்த்துவரும் இரத்தபித்தம் பித்தம்தாங்கி குறுகாம லகன்றுவிடும்கோதேகேளாய், தூர்த்துமேவாம்சசப்புபுளியேப்பந்தான் பொல்லாத யிரிசுவு பெருந்தவேடும், தீர்த்துவிடும் அசாத்தியங்கள் சாத்தியங்கள் தீருமென்றேதாமுரைத்தார் முனிவர்தாமே. (உ௱௰௯)

## மனோரஞ்சிதரத்நக்கெண்டித் தயிலம்.

முனிவான மனோரஞ்சிதரத்நக்கெண்டி மொழிகிறேன் மானுக்கள் பிழைக்கவென்று, கனிவான கட்டப்பன்பட்டை கடுகுரோகணி கருதுகின்றபுளியாலா அமுக்கராவும், தனியானசிவதைவேர் கைச்சோலந்தான் தயவானகஸ்தூரிமஞ்சள்தானும், பனியானபீனசப்புல்லாடாதோடைப் பாங்காகப்பாங்குபெறவசம்புகூட்டே. (உ௨௰)

கூட்டவேயெருக்கனுடன்கொல்லன்கோவை குணமான சாதிக்காய்அதிமதுரம், நீட்டவேயிருசங்கம்தேவதாரம நிலையானசீரகம் காட்டுச்சீரம் கூட்டவேநாகமல்லிச்சித்தாமுட்டிக் குணமானகொடிவேலி நொச்சிமுள்ளி. தேட்டவேஅணிநுணுபூசனிதானும் தெளிவானபெருமருந்து அத்திசேரே. (உ௨௧)

சேர்த்துமேதூளிடித்துச்சூரணித்து தெளிவாகபெண்ணெய்தனில் போட்டுக்காய்ச்சி, கார்த்துமேபசும்பாலுங்கூடச்சேர்த்துக்கனிவாகமெழுகுபதம்தனிலிறக்கி, தூர்த்துமே மாயனைப்போற்றிசெய்து துணிவாகவாத்தாட்குப்பூசைசெய்து, ஆர்த்துமே மண்டலந்தான் முழுகிவந்தால் அப்பனேவியாதிபெல்லாந் தீருந்தானே, (உ௨௨)

## திரும்வியாதி.

திருகினறவியாதியெல்லாம் செப்பக்கேளும் திடமானகாக்கைவலிகுமரகண்டன், மாறுகின்றநமரகண்டன் சர்வாங்கநோயும் வளமான கால்குடைச்சல்கரணை தீரும், தூறுகின்றபிறவலியும்பிறவீச்சுந்தான் துணையானகபாலவலி மண்டைக்குத்து, நாறுகின்றகண்டமாலைகளினப்புண்கள் நாடாது யெப்போதும்நாடாதாமே. (உ௨௩)

நாடாதுபித்தவெட்டை பித்தப்பாண்டு நவிலுகின்றஅரைகடியன்புரைமேற்புண்கள், கூடாதுமண்டையிடிக்கபாலவாய்வு பொல்லாதசயரோகம்சயரோசங்கள், தேடாதுயிருவலுடன் பொருமல்தீ

ரும் தீராதகண்ணெரிச்சல்தீரும்பாரு, ஆடாதகூத்தெல்லாமாடுமெபா கமப்பனேதன்வந்திரியுரைத்ததாமே. (௨௨௪)

பாண்டுகாமாலைக்குக்கியாழம்.

உரைத்தாரேமாணிடற்குப்பாண்டேவந்தால் வுறுதியுடன் நில ப்பீர்க்குக்காட்டுமெல்லி, கரைத்தாரேகொடிவேலிகையாந்தானும் கன மான குருக்கத்திஅழிஞ்சிசேரு, திரைத்தாரேமாவிலங்குயிலந்தை தானும் திறமானசிட்டமுடன் அயமுஞ்சேரு, வரைத்தாரேமாவி லிங்கு அத்திச்சத்திரம் வாகானகொன்றையுடச்சங்கத்தானே. ()

தானனக்குன்றிவேர் அதிமுத்தந்தானும் தயவானஅதிவிடை யம்கருஞ்சீரந்தானும், கோனனஆமணக்குகுக்கிலாதிகுணமானஆவா ரைபொன்னும்பூவும், தேனனகரிசலாங்கண்ணிதானும திறமான நீர் முள்ளியானைத்திப்பிலி, வேனனஅவுரியாலரசுவித்து விதமானஅரத் தையுடன் கருஞ்சீரமாமே. (௨௨௬)

சீரந்தான்மரமஞ்சளாமணக்கு திறமானநீர்முள்ளிசித்தாமுட்டி, காரமாமிருகொன்றை அக்கராகாரம் கருவானசிற்றரத்தை சுரைக் கொடிதானும், பாரமாமிருவாட்சிமை சாலக்கடிபரிவானகாட்டெரு மைப்பாலுங்கூட்டி, வாரமாமிதுகளெல்லாமூறவைத்து வாகாகப்படி யெட்டுச் சலமும்வாரே. (௨௨௭)

வார்த்துமேயெட்டொன்றாய்க் காய்ச்சியேதான் வளமைபெறக் கியாழமதைகொடு பீரானால், கார்த்துவரும் காமாலைபாண்டுரோகம் கருவானநீராம்பற்கட்டிபோகும், தூர்த்துகின்றவயிறூவு பொரு மல்தானும் துலைபாதரத்தக்கட்டி கவுசைபோகும், சேர்த்துவரும் விஷரோகம நீரருகல் விலகிடுமேதன்வந்திரியுரைத்தவாறே. ()

பாரிசாதசங்கரத்தஉப்புக்கட்டு.

கேளடாமணிமணியாய்வுப்பைவாங்கி கெடியான குருசெயநீர் விட்டுஆட்டி, நாளடாகாய்ந்துதென்றால் ஓட்டில்வைத்து நன்றாகக் குடந்தான்போடும்பாடு, தேளடாகொட்டுதல்போல் வுப்புச்சுன்னம் செயமாச்சரக்கெல்லாம் கொல்லும்கொல்லும், வாளடாசெயநீருவை த்தாயானல் மகத்தான கோடிவித்தைஆடிபாரே. (௨௨௯)

பாரப்பாகரியுப்புச்சுன்னம்நாலு பரிவானவீரமொன்று லிங்க மொன்று, சேரப்பாகெந்தியொன்றுசூதமேழு திறமானகுருசெயநீர் விட்டுஆட்டி வாரப்பாரவிமுகத்தில்காய்ந்தபின்புவறுக்கிடுவாய்மூன்

றுநாழிகைதான்மட்டும், கூரப்பாயென்னாலே சொல்லப்போமோர் கோடிவித்தைநாழிகைக்குள்கூட்டுந்தானே. (உ௱௧)

கெந்தகம்.

தானென்றகெந்தகத்தின்களங்குயேழு தாய்சொன்னாள் கெந்தகத்தைவாங்கிக்கொண்டு,வானென்றஅயக்கரண்டி தனிலுருக்கி மைந்தனேமிளகு தக்காளிச்சாற்றில், மானென்றசோடசந்தான் சாய்த்தாயானால் மகத்தானகளங்கமப்பாகோடிவித்தை, கோனென்றகளங்கமொன்று ரெட்டிசூதம் கூடடுவதுவீரமொன்று சாரமொன்றே. ()

ஒன்றாகக்குருசெயநீர் விட்டுஆட்டி வுலர்ந்தபின்பு வறுத்திடுவாய்நாழிகைதானென்று, நன்றானகெந்தகந்தானாலுமரற்று நாவுண்டோபாவுண்டோ யென்னாற்கூடா, குன்றானசெம்புசுத்திதன்னைக் கேளும் கூறறிதுஅவுரியிலேகுட்டிதக்காளி, நன்றாகப்பொரிக்காரம் வீரத்தோடுமடையனும்தான்சேர்த்து அரைத்துப்பூசுபூசே.(உ௱உ)

பூசியேஓட்டில்வைத்துக்குக்குடந்தான் பொன்னாகும் செம்பூரலறுந்துபோச்சு, வாசியேசெம்புபத்து வெள்ளியொன்று வளமாத்கதகட்டித்துச்சொல்லக்கேளும், ஆசியேகாரமொடுவீரம்துத்தம் அழகானநாயுருவிநெரிஞ்சில்கூட்டி, பூசியேகுக்கிடத்தில் செம்பினூறல் போச்சுதடா வேதைமுகம்புகன்றதாமே. (உ௱௩)

ஆமப்பாலிங்கமேதை சொல்லக்கேளும் ஆச்சரியமடையனும் காரீயஞ்சூதம், தாமப்பாவெண்காரம் வொன்றாய்க்கூட்டி சாதகம்போல் குருசெயநீர்விட்டுஆட்டி, ஓமப்பாகவுசித்துமண்ணுஞ்செய்து வுப்பில்வைத்துச் சாமமொன்றுயெரித்தாயானால்,வாமப்பாலிங்கமது கட்டிப்போச்சு வாங்கப்பாநாலுலிங்கம் சூதம்கேளே. (உ௱௪)

களங்கு.

கேளப்பாபாதிரசம்கெந்தியொன்று கெடியானவீரமொன்று காரமொன்று, வேளப்பாகுருசெயநீர்விட்டுஆட்டி வெயில்முகத்திற்காயவைத்து லிங்கத்தாட்டு, நாளப்பாசந்தசாகரம்போல்வேணதநிமைக்குமுன்னேசெய்துவிக்கும்வேதைமார்க்கம், நாளப்பாசொல்லாதுசற்குருவின்சூட்சம் நன்றானமருந்தெல்லாம் வாய்க்குந்தானே. (உ௱௫)

நாகவித்தை.

தானானநாகவித்தை சொல்லக்கேளும் தனிநாகம்வொன்றுடனே சூதம்ரெட்டி, மானானஅரிதாரம்துரிசுவெள்ளை மைந்தனேவெண்காரம் வீரங்கூட்டி, கோனானசெயநீருவிட்டுஆட்டிக் கொடியா

வில்காயவைத் துருகும்போது, பாணனைநாகவித்தையாடுமோடும் பண் பாகத்தன்வந்திரியுமாக்கக்கண்டே. (௨௩௬)

கண்டுசொல்லஆடலாம்சித்தராலே காசினியிலுள்ளவர்கள் காணுவாரோ, விண்டுசொல்லக் காரியம்தகட்டைடக்கேளும் வெடியுப்பு அரிதாரம்சூதமென்று, பண்டுசொல்லப்பொரிக்காரம் சேரக்கூட்டிப் பாங்கானகுருசெயநீர்விட்டுஆட்டி, துண்டுசொல்லாவிமுகத்தில்வறுத்துப்போடு துறைகோடிசூட்சமெல்லாம்வெளிவிட்டேனே.

விட்டகுறையுண்டானல் நூல்வந்தெய்தும் வெளியாகக்கருவெல்லாந்தோன்றும்தோன்றும், தொட்டகுறையிதுதானேமதிவிதியுங் காணும் சூஸ்திரமாமாயிரந்தானிந்தநூலு, மட்டஅஞ்சுகாவியந்தானிதுபோல்சொல்வார் வசனித்தார் சித்தர்களுமுனிவர்தாமும், சட்டமாயொளித்துவைத்தார் அனந்தங்கோடி சாற்றினேனிந்தநூல்முதனூல்தானே. (௨௩௮)

தானென்றதிருநடனம்போலேசுவாமி தான்சொன்னர் நந்தீசர் எந்தமக்கு, தேனென்றமொழியுடையா ளப்பதானைதேசத்தோர் தங்களுக்குக்கொடுக்கவேண்டாம் மானென்றசிவகாமி என்தாயார் பூசைவஸ்துவைப்போலிந்நூலை வணங்கிப்பாரு, கோனென்றவழியொளியும் ஞானந்தோறும கும்பிக்கும் மணித்தாயைக்கூறினேனே. ()

கூறியதோர் துரிசியிட ஆட்டங்கேளு குன்றிபோல் துருசியொருகட்டிவாங்கி, மாறியதோர்புடக்காலாறைத்துப்பூசி மைந்தனேசிறுபுடத்தில்தவளநீராம், ஆரியதோர்வெண்கடர்க் கொப்புமுண்டோ ஆச்சரியங் கோடானகோடிவித்தை, தேறியதோர்வெண்கண்டர்களஞ்சினாலு சிறந்திடுவாய்விரமொன்று சூதம்ரண்டே. (௨௪௰)

ஒன்றாகக்கெந்தியுடன்பாதிகாரம் ஒக்கவேகுருசெயநீர் தன்னாலாட்டி, நன்றாகக்காய்ந்தபின்புவறுத்துப்போடு நான்சொல்லக்கூடாது வேதைப்போக்கு, பன்றாகும்வெண்கண்டரிடைக்குரெட்டிப பாய்ச்சுவாய் சூதமொன்றுவிரமொன்று, மன்றாகுங்காரீயம்பற்பமொன்று வார்த்தனைப்பாய்செயநீரால் வறுத்துக்கொள்ளே. (௨௪௧)

இரசபற்பம்.

கோள்ளவேரசம்நீரும் ஆடுமோடும் கோடானகோடிவித்தைதொந்தங்கோடி, விள்ளொணமெள்ளவேநாகத்தைக்கட்ட வெண்கடர்மால் தேவிகாரம்சாரம், அள்ளவேகுருசெயநீர் விட்டுக்கொண்டு ஆட்டியோகத்தில் பூசிக்கொண்டு, உள்ளவேபத்தெருவில் புடந்தான்போடு ஓடாமல் புகையடங்கிமாண்டுபோமே. (௨௪௨)

மாமென்றஅரிதாரம் சிவப்புக்கேளு மைந்தனே விஷ்ணுவின் மூலிமாட்டி, தாமென்றமால்தேவிக்கங்கிபூட்டிச் சார்வாகச்சிறுகாடை புடந்தான்போடு, ஆமென்றதாரமதுசிவப்புமெத்த ஆச்சரியம் வேதைமுகங் கோடிகோடி, ஓமென்றகண்டரின் சிவப்புசொல்வேன் உவருப்புவெண்காரம்கூடக்காட்டே. (உசங)

கூட்டியல்லோசெயநீராம் நூற்றுக்கொன்று குணமான கைபாகத்துடன்வறுக்க, மாட்டியேயெடுத்துப்பார் சிவப்புமெத்த மைந்தனே கோடிக்கவர் விரித்துவாடும், வேட்டியெல்லா குருவண்ட செயநீராலே பிரபல்லியம்குறுக்கைவழி வித்தைமாக்கம், பூட்டியெல்லாம்வெளியாகச்சொன்னேன்பாரு புகழ்பெரியவெடியுப்புச் சுன்னங்கேளே. (உசச)

பாஷாணக்கட்டு.

கேளப்பாவெடியுப்புச்சீனம்நேராய் கெடியானகுருசெயநீர்விட்டுஆட்டி, நாளப்பாகாயவிட்டு அறுத்தாயானல் நன்முனவெடியுப்புச்சுன்னமாச்சு, வாளப்பாசாரமிட்டு செயநீர்வைத்தால் மைந்தனே கோடானகோடிவித்தை, தேளப்பாகொட்டுதல்போல் பாஷாணமாற்கம் திறஞ்சொல்லவுனக்கரிது நன்முய்த்தானே. (உசரு)

தானென்றஅப்பிரேகம் வெடியுப்புச்சீனம் சாரமொடு வெண்காரமடையன்காந்தம், வேனென்றவுவருப்புரோமனீரும் வீரமுடன் நேராகவரைத்துக்கூட்டி, வானென்றகுருசெயநீர் விட்டுஆட்டி வளமாககவுசித்துச்சீலேசெய்து, மானென்றரவிமுகத்தில் காய்வைத்து வரிசையுடன்வுப்பில்வைத்து எரித்துவாங்கே. (உசசு)

வாங்கியேதீபமொருசாமமாட்டு மருநாள்தான் கமலவன்னிசாமமூட்டு தேங்கவேஆறவைத்து எடுத்துப்பாரு தந்தம்போல் முழுகட்டு தன்னேச்சொல்வேன், ஏங்கவேவாதியென்முலிந்த முறைசெய்தால் செய்தவனேயோகியவன் ஞானியாவான், நீங்கியேவறுமையெல்லாம் தவறுண்டேபோம் நெறியானவித்தையிதிலடங்கிப்போச்சே.

போச்சென்றுயெண்ணுதேயின்னூல்தான்கிட்டி புகழ்ந்தரசவாதியென்றும் ஞானியென்றும், ஆச்சென்றுசொல்வதல்லால் வேறொன்றில்லே ஆச்சரியமெத்தமெத்த அறிவுண்டாகும், நீச்சென்றமவுனமுண்டாம் திஷ்டியுண்டாம் நிலேத்தகுருசெடநீரும் பலபேர்க்குண்டாம், வாச்சென்றமித்தனேயுமார்தான்காண்பார் மகத்தானகாவியந்தான் வாய்த்தபேர்க்கே. (உசஅ)

வாய்த்ததொருபாஷாணப்போக்குகேளு மகத்தானவித்தையப் பாசொல்லொண்ணாது, எத்ததொருவுட்சாரச்சுண்ணநீரில் யெரிந்து விடு துளாந்திரமாய்மிசைந்தோர்சாமம், மேய்த்ததொருதேன்வலை யல் மடையன்சீனம் மிருதாருசிங்கியொடு அப்பிரகம்கூட்டி, காய்த் ததொருசெயநீர்விட்டு ஆட்டிக் கசடற்றப்பாஷாணம் பூசிப்போடே.

போடப்பாசிறுசீலே மண்ணுஞ்செய்து புகழாகவுப்பில்வைத்து சட்டிகொண்டு, சாடப்பாவளிம்புக்குச்சீலேசெய்து தன்னுடனேசா மம்ரண்டுதீபம்போலே, கோடப்பாதிறமானபாஷாணங்கட்டும் கூட் டுகிறகுருவேறுவென்றுயானல், நாடப்பா அத்தியெங்கேநடந்தாயா னல், நல்லவெள்ளைப்பாஷண மிதற்கொவ்வாதே. (உருo)

ஒவ்வாதுயென்றுசொன்ன வகையேதென்றுல் வுத்தமனே பா ஷாணம்லொன்றுவாங்கி, கவ்வாதுவெள்ளியியம்ரண்டுசேர்ததுக் கன மானசூதமது நாலுங்கூட்டி, மவ்வாது வெண்காரமொன்றேயல்லால் மாறவே எருக்கன்பால்விட்டுஆட்டி, தவ்வாதுவறுத்தெடுத்துப் பின் னுமாட்டி சாதகமாய்வில்லேதட்டிரவியில்வையே. (உருக)

வையப்பா அப்பிரகம்மிருதாருசிங்கி வகையானசீனமுடன்மூன் றுங்கூட்டி, மெய்யப்பாகவசமதாய் பொதிந்துமூடி விளாவாகவெயி லுலர்த்திச் சுண்ணமீதில், கையப்பாசிரங்கையுப்பிட்டுவைத்து கைம் முறையாயுப்பிட்டுச்சுண்ணமிட்டு, தையப்பானிறதமுடன் வாலேதன் னே சாமமொன்று தீபவன்னித்தன்னேமூட்டே. (உருஉ)

ஊட்டியிதைமண்திறந்து பார்க்கும்போது வுனேகூட்டிக் கரு கென்றசருகின்மெத்த, சூட்டியிந்தவேதைதன்னேச் சொல்லப்போ மோ சூட்சமென்ன கோடானகோடிவித்தை, பூட்டியிந்தபடியெல் லாம் வெளியாப்ச்சொன்னேன் புகழ்ந்துரசவாதியென்றுலென்னூல் பாரு, காட்டியிந்தக் காவியத்தைக்கொடுக்கவேண்டாம் கங்கைசரித் தோராணைகடக்கப்போவே. (உருந)

போவென்றேதனித்திருந்து யிந்நூல்தன்னைப் புகழ்ந்துமெச்சி வாசித்துக்கருக்களாய்ந்து, வாவெனவேயிதைவிட்டு நூலீய்ந்தாயா னல் வாய்புழுத்து நாவிழுக்க மரணமாகி, சாவென்றேன் புத்தியுள் ளோன் விவேகமுள்ளோன் சாகாமலிருக்கயிந்நூல் கொடுக்கமாட் டேன், கூவென்று யான்சாபம்போட்டதாலேகொடுமையென்ற சூட் சமதை யொளித்தார்தானே. (உருச)

இரும்புசெம்பு.

தானென்றயிரும்பினுடசெம்பைக்கேளு சாற்றுகிறேன் அடவி யிலே சொல்லவேண்டாம், தூனென்றமடையன் அப்பிரேகம் காந்

தம் தூக்குவாயிடைசமனுய்ரங்குபாதி, வாவென்றபழச்சாறுவிட்டு ஆட்டி மைந்தனேநெடுஞ்சில்லுகட்டியேதான், தீனென்றகெந்திரண்டுகாரமொன்று திறமான துரிசியுடசாரமொன்றே. (உருரு)

ஒன்ருகப்பொடிசெய்து குகையினுள்ளே வுத்தமனே அரப்பொடியுந்தூவிக்கொண்டு, நன்ருகச்சில்லிட்டுச்சீலைசெய்து நாற்பதெருக்குள் புடந்தான்வலுவாய்மாட்டி, சென்ருகஆத்தியெடு சுத்திசெம்பாம் அதினுடையஆட்டங்களோ மெத்தமெத்த, பன்ருகக்கோடிவித்தை யென்ருளாத்தாள் பதிந்திட்டேன்காவியமாய்ப் பதிந்திட்டேனே. (உருசு)

பதித்தமுறையின்னமொன்றுகூறக்கேளும பறப்பிலேவிடவேண்டாம்பாடோமெத்த, விதித்தபடிமுன்குகையில் நெரிஞ்சித்தூளுவிரைந்துள்ளுமிட்டு சிங்கிரசமுஞ்சேர்த்து, கதித்தவிதம்முன்போலப் புடந்தான்போடு கனகமொத்தசெம்பாகும் சொல்லப்போமோ, கதித்தவிதமேதென்றுசெம்பைகண்டால் சதகோடிசங்கவித்தை வேதையாமே. (உருஎ)

களங்கம்.

ஆமென்றசெம்புக்கு முன்னோர்புடத்தில் ஆச்சரியங்களங்கெடுத்துஆட்டங்கேளு, வேமோடுகளங்குரண்டு சூதம்ரண்டு வீரமொன்றுகாரமொன்று ஒன்ருய்க்கூட்டி,தாமென்றகுருசெயநீர்விட்டுஆட்டி தான்வறுக்க கோடிவித்தை தாண்டிவோடும், வாளென்றதொழிலெவற்குஞ்சொல்லவேண்டாம் வாய்பேசாதிருந்துவிடு மவுனங்காணே.

காணவேயிம்முறைகள் செய்யும்போது காட்டாதே ஒருத்தருக்குங் கைபாகந்தான், தோணவேமண்ணுல்கைமறப்புசெய்து சூஸ்திரந்தானிறுக்குதென்று சொல்லொணுது, பேணவேகண்காணுதடக்கஞ்செய்து பிரபல்லியவஸ்துகளும் மகிட்சிகூர்ந்து, பூணவேஆதாரம் மேல்மூலஞ்சென்று பூரணியேவாரணியேதாயேயென்னே. ()

என்னவேசதானித்திபமனதேயூன்றி ஏறடா அறிவங்கே பதத்தில்மீளும், வன்னமே காயச்சித்தியாகுஞ்சொன்னேன் மகத்தானவிரதையெல்லாம்வளரும்பாரு, அன்னையேமுன்னின்று கூட்டிவைப்பாள்அதுதானேபொருளாகி ஆட்டிவைக்கும், முன்னமே சொன்னமுறை போக்கெல்லாந்தான் முட்டுகின்றகைபாக முறையைப்பாரே.

துரிசி.

பாருநீ துருசியுட கட்டிவாங்கி பண்பாகச்சிவந்து நின்றபாலைமூலி, வேருநீ அரைத்துருட்டி பொதிந்துகொண்டு மேலாகச்சீலை

செய்துயெருதானென்றில், தேருநீபுடம்போட்டு யெடுத்துவாங்கி சேர்த்திடுவாய்சூதம்ரெட்டி கெந்தியொன்று, வாருநீபச்சிலைச்சார் விட்டுஆட்டி வறுத்துயிடுஆயிரத்தெண்மாத்துமாமே. (உசுக)

மாத்துமேயிவவேதைகோடாகோடிமகத்தானஆட்டமெல்லாம் யிதற்குள்ளாகும், மாத்துமேபரிச்செம்பு ஆயச்செம்புதன்னில் மருகிடவேவேதைமுகம்கோடாகோடி, மாத்துமேயிவ்வித்தைசித்தறசெய்தும் மற்றவற்கு மெய்தாதுநளினமெத்த, மாத்துமேநந்திசொல்லத் தன்வந்திரியானும் வருத்துரைத்தேன்மானிடற்குத் தொகுத்தசொல்லே. (உசுஉ)

மகாவில்வாதித்தயிலம்.

சொல்லுகிறேன்மாந்தருக்கு வில்வாதியொன்று சூட்டுகிறேன் சூட்சாதிசூட்சமொன்று, வெல்லுகிறேன் வில்வாதிபலந்தானூறு வியல்பான ஏலரிசிபலந்தான்பத்து, கெல்லுகிறேன் அதிமதுரம்தேவதாரம் கெடியான சித்த முட்டி பேராமுட்டி, தெல்லியதோர் கியாழமாய்ச்செய்துகொண்டு திறமான யெண்ணெய் சமன்சரியாய்க் கூட்டே. (உசுங)

கூட்டவேமெழுகுபதம் தனில்வடித்து குணமாகயெண்ணெய் தனையிறுத்துக்கொண்டு, நீட்டியேமண்டலந்தான் முழுகினக்கால் நிலையாது பித்தம்நாற்பதுவும்போகும், மீட்டிவரும் கபரோகம் சயுரோகங்கள் மீளாதயிருமல்முதல்சிலேசாடும், ஓட்டிவிடும் சொரிசிரங்குயாவுந்தீரும் வுத்தமனேமதிமயக்கம் போகுந்தானே. (உசுச)

களங்குமார்ககம்.

மாத்தானகுருக்களங்குயெட்டுக்கொன்று மடையனென்று சவ்வீரம்காரீயபற்பம், பாத்தான்சாறுவிட்டுஅரைத்துக்கூட்டிபதராதே வறுத்தரைத்துயெறித்துஆற, கூத்தானவேதையப்பா ஆடுஞ்சூட்டம் கோடானகோடிகவர்யாடும்பாரு, சீத்தான இவ்வேதை அதீதமெத்தச்சிறப்பானயிவ்வித்தை கூடுங்காணே. (உசுரு)

கூடுமென்றகாரியஞ்சூதம் நேராய்க் கூட்டுபொன்அப்பிரேகம் மடையவீரம், பாடுமென்றகெந்தகமும் வொன்றாய்க்கூட்டி பதறாதே குருசெபநீர் விட்டுஆட்டி, ஓடுமென்றரவியுலர்த்தி வறுத்துப்போடு ஒகோகோ ஐந்துதிரஞ்செய்தாயானால், ஆடுமென்றதுராதுரைக்கும் வேதையாகும் ஆஆ போக்கிதுவேகோடிதானே. (உசுசு)

## இரசமெழுகு.

கோடியென்றரசமெழுகின் வகையேதென்றால் குருசெயநீர் விட்டுக் கறியுப்பேயாடி, நாடியேகுக்கிடத்திற்சுண்ணமாகும் நன்றான சுண்ணத்தில் காராசாரம், வாடியேதிரியாதேகளஞ்சியொன்று மைந்தனேசேரவொன்றாய் யெளகிக்கொண்டு, தேடியேபீங்கானில் செயநீர்தாங்கி திறமானதுரிசிநீர் களஞ்சிபோடே. (உ௬எ)

போடியேபீங்கானில்வைத்துககொண்டு புகழாக வறுத்தெடுத்துசெயநீர்விட்டு, ஆடியேகெந்திதனையரைத்துக்காய்ந்து அப்பனே செயநீரையிறக்கிக்கொண்டு, மாட்டியேசுத்ததில் விட்டுஆட்டி மைந்தனேவறுத்தெடுத்துப்பின்னுமாட்டி, கூட்டியேவேதைகட்கு கோடானகோடி குறியானரசமெழுகின்கூத்தைக்காணே. (உ௬அ)

## சிங்குமகாபாஷாணக்கட்டு.

காணவேபாஷாணக்கட்டுகேளு கைபாகம் சூட்சவழிக்கருவைத்தானும், பூணவேமணிக்காரம்நிமிளைதானும் பூநீறு அப்பிரேசம் வங்கம்சிங்கி, தோணவேகற்பூராலத்திருடன் சுலுவானநவச்சாரம் இணங்கன்சினம், பேணவேகுருசெயநீர் தன்னாலாட்டிப் பேசாதே சமபாகம் வெள்ளிதானே. (உ௬௯)

தானேகேள்கவசித்து சீலைசெய்து சாமந்தான் வுப்பில்வைத்து எரித்துப்போடு, ஊனேகேள் மாட்டெலும்புபோலேயாகும் உத்தமனே இதின்சுறுக்குவேகமெத்த, நானேகேள்சொன்னபடி யாருஞ் சொல்லார் நாட்டிலே யிம்முறையையுரையவேண்டாம், மானேகேள் யிந்தவித்தை சூட்சம்ப்பா மகத்தானபாஷாணக்கட்டுத்தானே. ()

கட்டானபொரிக்காரம் கெந்தகமுஞ்சாரம் கல்லுப்புவெடியுப்புக்கலந்துகூட்டி, மட்டானகோரக்கர் மூலிச்சாற்றில் வடிமெழுகு போலரைத்துக்கவசம்செய்து, திட்டானமண்செய்து காயவைத்துத் திறமான தோரெருவில்புடந்தான்போடு, பட்டானதுரிசியதுநீரும் பாரு பாங்கானவீரமுடன் கெந்திகூட்டே. (உ௭க)

கூட்டியேவெண்காரங்கூடச்சேர்த்து குருசெயநீர்விட்டரைத்துவறுப்போடு; ஆட்டியேயிப்படியே குருசெயநீர்விட்டு அப்பனே ஐந்துவண்ணம் வறுத்தாயானல், நாட்டியேவித்தையொன்றால் கோடிவித்தை நன்றானவேதையுமாம் கோடாகோடி, ஊட்டியேதுருசியிட ஆட்டைக்காண் ஓகோகோ பராபரத்தினடிகாணலாமே. ()

காணுவோம்பூமியிலே தோற்றமெல்லாம் கருணையென்ற வித்தையெல்லாம்ஆதிமூலம், பூணலாமனதுக்குஅதுவேமூலம் புரியநா

மூன்னெழுத்தையேகமாக, தோணலாம் ஆகாசவெளிக்குட்சென்று சுருபமென்றமதிகுருவின்நடனமாக, பேணலாம்குருநிழலைத் திண்ணந்தான்போற்றி பீடித்தசித்தனென்றுபெருமைதானே. (௨௭௩)

தாமரபற்பம்.

பெருமையென்றதாம்பரத்தின் பற்பஞ்சொல்வேன் பேசாதே குருவிடையம் சொல்வேன்மைந்தா, அருமையென்றதாம்பரந்தான் களஞ்சியாறு அதிற்பாதிகாரியமிரதங்கூட்டி, உருமையென்றவெண்காரம் வீரமகெந்தி ஒன்றான குருசெயநீர்விட்டரைத்து, கருமையென்றகுக்கிடத்தில் தவளம்நீராம் கனகமடாவெகுகோடி காட்சிபாரே.

தாட்சியாமின்னமொருவித்தைகேளு கைபாகம்மெய்பாகம் கருவைச்சொல்வேன், ஆட்சியாம்பொன்னிமிளை வீரம்காரம் அந்திடைக்குப்பொன்னென்ற அப்பிரேகங்கூட்டி, வாட்சியாய்குருசெயநீர்விட்டு ஆட்டி மைந்தனேகுக்குடத்தில் மடையன்போலாம், பூச்சரியாம் வெட்டுவைந்தால் புதுவையொக்கும் புகழானநாகத்தின் போக்குதானே. (௨௭௫)

போக்கானவசிகரத்தின்மூலங்கேளு புகழ்பெரிய ஆவின் கோரோசினை கற்பூரம், வாக்கானகண்ணினிடமூலிதானும் மகத்தான சந்தனமும்புனுகுங்கூட்டி, தாக்கானமந்திரமும்ராசவசியம் சர்வமோகினிவாவா வென்றேசொல்லி, தார்க்கானநீலகண்டன் மாடும்போலே கண்டதெல்லாம் தேடிநின்றுகதரும்பாரே. (௨௭௬)

வசியம்.

பாரப்பாஇராம்பொன்றுகூடச்சேரில் பரைவசியம் செகவசியம் யெட்டுமாடும், வாரப்பாசெங்கழநீர் படிச்சார்விட்டு மயனம்போல் அரைத்துருட்டிவைத்துக்கொண்டு, சேரப்பாமத்தியிலே திலர்தம் போடு திறமானவசிகரத்தின்சித்தியாச்சு, காரப்பாயிதைமறைத்துச் சொன்னார்சித்தர் கருவையெல்லாமின்னூலில்கண்டிடாயே. (௨௭௭)

கண்டதொருநூல்போலயிந்நூல்தன்னைக் காசினியோர்க்கொருநாளும் கொடுக்கவேண்டாம், அண்டதொருசிவனாணை குருவினாணை அப்பனேயிந்நூலைப்பதனம்பண்ணு, அண்டியொருசிஷன்வந்து அடித்தாலுந்தான் அருமையென்றகாவியந்தான் கொடுக்கவேண்டாம், தொண்டியே ஏவல்செய்துகெஞ்சினாலும் தெளிவுறவேநூலினிடந் தியங்கிடாதே. (௨௭௮)

தியங்கியதோர்கருக்களெல்லாம் சொல்லவேண்டாம் செய்முறையும் கைமுறையும்பதறவேண்டாம், மயங்கியதோர் சூதம்ரெண்டு வீரமொன்று மகத்தானபொன்னப்பிரகம் தானுங்கூட்டி, தயங்கிடவேசூதபற்பம் அரைதான்கூட்டித் தாளனகெந்தகமும் கால்தான்கூட்டி, வயம்பிடவேகுருசெயநீர்விட்டுஆட்டி வகுப்புறவேபின்னுமப்படியேசெய்யே. (உஎகூ)

செய்யப்பா நாகத்தைப் பற்பமாக்க திறமானவீரத்தா லாட்டிப்பாரு மெய்யப்பாசூட்சமெல்லாம் வெளியாய்ச்சொன்னேன் விள்ளாதேஒருவருக்கும்விள்ளவேண்டாம், தையப்பாளிறத்தமிட்ட வாலைதன்னை தயவான சிவகாமித்தாயேபோற்றி, மெய்யப்பா பிரபல்லிய வித்தைதன்னை மெய்யாகக்கண்டுசொன்னார் காட்சியாமே. (உஅ0)

## தீராதவாந்திக்கு.

சொன்னாலேமானிடற்கு வாந்திகண்டால் துடியான்சிரகமும் ஏலந்தானும், பன்னுகின்றஅதிமதுரம் தேவதாரம் பாங்கான நெற்பொரியும் நலமாஞ்சுக்கு, துன்னுகின்றவிளாவிலையும் கொத்தமல்லி துணையான பச்சையென்றபெயரும்சேர்த்து, மின்னுகின்றமுட்டியுடன்கியாழஞ்செய்து முனையானபராபரியைப்பூசிப்பாயே. (உஅக)

பூசித்துக்கணேசனைப் போற்றிசெய்து புகழாக காலைமாலைகொண்டாயானல், ஆசித்துமதமூர்ச்சைமயக்கந்தீரும் அப்பனே சிறுசிறுப்புச்சுழலைதீரும், பூசிக்கும்சுவாசமதுகாந்தல்போகும் பொல்லாத வயிறுளைச்சல் அகலும்பாரு, நேசித்துக்கியாழம் செய்துபார்த்தால் நெருங்கிவரும் பித்தமெல்லாமிந்தநூலே. (உஅஉ)

இந்தநூல்காவியந்தானுயிரமுந்தப்பா தியம்பினேன் கருக்குருவும்வெளியதாக, இந்தநூலாயிரந்தான் சூஸ்திரப்போக்கு இனிமைபெறக்குருவெல்லாம்பனிபோலாக, இந்தநூல்கைபாகம் செய்பாகம் யாவும் வெளியாச்சுதென்றுசித்தர் மெய்ச்சிக்கொண்டு, அந்தநூல் போலவென்று அப்பாசித்தர் அருநூலும் பெருநூலும் ஒளித்தார்காணே. (உஅங)

காணப்பாகோடிவித்தைசெய்யும்நூலே கருவென்று லோகத்தில்விளங்கச்சொன்னேன், பூணப்பாதினந்தோறும் பூசைசெய்து புகழவைத்தெடுத்தடக்கம் செய்துவைத்தால், தோணப்பாயிந்நூலுக் காவியந்தான் தொண்டுபண்ணல் யிந்தநூல்கொடுக்கமாட்டார், பேணப்பாநூல்தனையே கொடுத்தாயானல் பெருநரகில்விழுந்துன் தன் பெருமைசொல்லே. (உஅச)

சகலமேகங்களுக்குபரிசாங்கதத்திரயோதசி.

சொல்லுகிறேன்மானிடற்குமேகம்வந்தால் சூட்சாதிசூட்சமொன்று செப்பக்கேளும், வெல்லுகிறேன்கிளிமூக்கின் கிழங்கினேடு விதமான அசுவகெந்திகிழங்குதானும்,செல்லுகின்றபரங்கியுடப் பட்டைதானும் கொடிதானமுளகருணைப் பட்டைதானும் செல்லுகின்றசெனுமரப் பட்டைதானும் சிறப்பான இலவனுடப்பட்டையாமே.

பட்டையாம்வெள்வேலன்பட்டைதானும் பாங்கான அத்தியுடப்பட்டைதானும், பட்டையாம்நுணுமரப்பட்டையாகும் பதிவான அழிஞ்சிலிடபட்டைதானும்,பட்டையாமாமரப்பட்டைதானும் பாங்கானகொய்யாவின் பட்டைதானும், பட்டையாமிச்சியுடப் பட்டைதானும் பருவான அரசினுடப்பட்டையாமே. (உஅசு)

ஆமேதான்கருநொச்சிப்பட்டையாகும் அப்பனேநாகலின் பட்டைதானும், வேமேதான்கொழுஞ்சியிடப் பட்டைதானும் வியப்பான மருதனிடப்பட்டைதானும், காமேதான் இச்சியுடப்பட்டைதானும் கருவானசெம்மரப் பட்டைதானும், போமேதான்கொங்கிலவன்பட்டைதானும் குணமானகருவேலன் பட்டைகூட்டே. ()

கூட்டவேதென்னிடப்பட்டைதானும் குறிப்பானபனையினிடப் பட்டைதானும், நீட்டியேபூவரசன் பட்டைதானும், நிலையான தேக்கினிடப்பட்டைதானும், கூட்டியே சரக்கொன்றை பட்டைதானும், குணமான பீலியிடப்பட்டைதானும், பூட்டியேஓதியனிடப் பட்டைதானும் புகழான வாடையுப்பட்டைசேரே. (உஅஅ)

சேர்த்துமேசூரணித்து வடியேசெய்து திறமாகச் சீனியிலே கலந்துகொண்டு, கோர்த்துமேமாலைகாலையுண்டாயானல் குறிப்பான மேகமென்ற திருப்தும்போம், நீர்த்துமேவாதமென்ற தெண்பதும் போம் நிலையாது மேகவெள்ளையாடும்பாரு, ஆர்த்துவரும்தொண்ணூற்றூர்சிலேத்துமரோகம் அகன்றுவிடும் தன்வந்திரிவலுமையாமே. (உஅகூ)

தாமேதான்சாஸ்திரத்தையார்கேட்டாலும் தடைசொல்லியனுப்பிவிடுசதாசிவத்தின், ஆமேதான்சற்குணற்குயிந்தநூலு அறையவேதன்வந்திரிவகுத்தேன்பாரு, தேமேநான்கருக்குருவுமிதிலேதோன்றும் தெளியாதவஸ்துவெல்லாம் அறையலாகும், கோமேதான்சித்தர்கூடி யனந்தங்கோடி சூடிலமாய்மறைத்தாரேகோடிதானே. ()

கபாடமாத்திரை.

தானனமானிடற்குகபாடமாத்திரை சாற்றுகிறேன்லிங்கமொரு வீரம்பூரம், கோனனகெந்தியொடுதாளந்தானும் குணமானகாந்த மொடு காரந்தானும், தேனனசூதமொடுபரங்கிச்சக்கை தெளிவாகத் தேன்விட்டு அரைத்துமேதான், பானனகுன்றிபோலுருட்டியேதான் பதிவாகமுலைப்பாலிலுண்டுபாரே. (உகூக)

பாரப்பாமுத்தோஷ சுரமும்போகும் பாங்கான பித்தத்தா லெ டுத்தரோகம், சீரப்பாவுடலைவிட்டேகும்பாரு தெளிவாகயிந்தநூல் கவரோகோடி, நேரப்பாயிக்காவியமாயிரந்தான் நிறையானகற்பூர தீபமப்பா, தேரப்பர்சோககாமாலைதீரத் தெளிவானகியாழமொன்று செப்பக்கேளே. (உகூஉ)

சேர்கைகாமாலைக்குக்கியாழம்.

கேளப்பாநீர்முள்ளிவிழிவேரு கெடியானபூவரசன் பட்டைதா னும் கோளப்பாகையானும்தொட்டிதானும் குணமானநெரிஞ்சியிட கீரைதானும் நீளப்பாபுண்ணாக்கின்பூண்டுதானும் நேரான மூக்கிரட் டைமூலிதானும் வேளப்பாதேட்கொடுக்குமூலிதானும் வியல்பான தகமையுடமூலியாமே. (உகூங)

மூலியாமரேர்கணியும் கடுக்காய்தானும் முதிர்வானசீரகமும் திப்பிலிதானும், காலியாம் சுரைக்கொடியும் வெள்ளரிவித்தும் கரு வான ஆடாதோடைமுள்ளங்கிச்சார், நீலியாம்வெள்ளாட்டு அமுரி தன்னில் நேராகப்படியெட்டு அளந்துவிட்டு, பாலியாம்பாண்டத் தைச் சுண்டக்காய்ச்சிப் பதமாகக்கியாழமதையுண்டிடாயே. (உகூச)

உண்டிடவேகாமாலைவீக்கம்போகும் வுத்தமனேரோம்பல் கட் டிபோகும், கண்டிடவேகவுசையொடு விம்மல்போகும், கதிப்பான தொண்டைக்கட்டுச்சீதம்போகும், அண்டியேமலபந்தம்வாங்கிப்போ கும் அப்பனே வயிறூதல்அகன்றுபோகும், தெண்டமுடன் புறண் டுவந்த வீக்கமபோகும் தெளிவாகத்தன்வந்திரியுரைத்தவாறே. ()

பித்தவெடிப்புக்கு.

வாருனலோகத்து மானிடற்கு வளம்பெறவேபித்தவெடி வந்து தானல், கூறுனசீரகமும் பலமோஅஞ்சு குணமான ஏலரிசிபலமோ நாலு, நீரான எலுமிச்சம்பழச்சாற்றுலே நினைவாகவொருசாமம் எரி த்துமேதான், காரானயிஞ்சியிடச் சாற்றினலே கனமாகமுச்சாமம் எரித்திடாயே. (உகூரு)

எரித்துமேவெயில்தனில்காயவைத்துஎழிலாகச்சூரணித்துவடிகட்டி செய்து, கரித்துமேசீனியதில் சமனாய்ச்சேர்த்துகருவாக அந்திசந்தி கொண்டாயானால், பொரித்துவரும்பித்தவெட்டை நாற்பதும்போம் பொல்லாதமதமூர்ச்சையகலும்பாரு, தெரித்துவிடும் கண்மறைப்பு தெளிந்துபோகும் தேவியெனக்கிட்டமுறைசெய்துபாரே. (உகள)

மூத்திரப்பிரமியத்திற்கு.

பாரேதான்மாந்தர்கட்குரத்தங்கண்டால் பரிவாகமருந்தொன்று செப்பக்கேளும், கூரேதான்சிங்கியிடப்பற்பந்தானும் குணமான பவளத்தின்பற்பந்தானும், சீரேதான்விராலினிடக் கொழுந்துசாற்றில் தெளிவுறவேயரைத்துமேதன்னிற்கொள்ள, சேரேதான்ரத்தமென்ற பிரமியம்போம் சிறப்பான தன்வந்திரிநூலிதாமே. (உகஅ)

நரித்தலைவாதத்திற்கு.

நூலானநரித்தலையின்வாதங்கண்டால் நுணக்கமாய்செங்கொடி வேலிதானும்,சேலானஎட்டிவிரைகொள்ளுதானும் செழிப்பான எள்ளினிட வீழிதானும், பாலான் ஆவாரப்பட்டைதானும் பதிவான வெள்ளுள்ளி மிளகுதானும், கோலானபெருங்காயம் சமனாய்க்கூட்டி கொதித்துமே வேதுமுகங்கட்டிடாயே. (உகக)

கட்டிடவேமுழங்காலின் வாதம்போகும் கருவானவாதமென்ற தெண்பதும்போம்; திட்டிடவேவுட்குத்துப் பிரவிச்சும்போம் திடமானவலுவந்துநேரும்பாரு, கொட்டிடவேயாக்கையதற் கழிவோயில்லை குணமாகும் வாதத்தோர்பிடிப்புமாறும் நெட்டிடவேயிம்மருந்து சுருக்குமெத்த நெடிதான காவியந்தான்பாருபாரே. (௩00)

ஆறுரணப்புகை.

பாரப்பாகாவியந்தான் பாடுமெத்த டார்ப்பதற்குவெகுகாலஞ் செல்லும்பாரு; காரப்பா இரணங்களுக்குப் புகைதான்சொல்வேன் கருவானலிங்கமொடு புளியம்பரணை சீரப்பாவுரல்தனிலே கீழ்மேலிட்டுச் சிறப்பாகப்புகைதனையேபிடித்தாயானால், வேரப்பாரணவேறு அற்றுப்போகும் வெகுகோடியிந்நூலு காட்சியாமே (௩0க)

சகலவாய்வுக்குத்தலுக்குக்கியாழம்.

காட்சியாம்மாந்தர்கட்கு வாய்வேவந்தால் சழறுகிறேன்சுக்குடனே கருவாய்ப்பட்டை, தீட்சியாம்கொடிவேலின் பட்டையோடு தெளிவான கடுகுடனே கழற்சிக்காயும், மாட்சியாம்வசம்புடனே வெள்ளைப்பூண்டு மகத்தானரோகணியுமொன்றாய்க்கூட்டி, நீட்சியாம் கியாழமதுசெய்துகொண்டு நேர்ப்பாகஅந்திசந்திகொண்டிடாயே. (௩0உ)

கொண்டிடவேவாதமென்ற தொண்பதும்போம் கொடிதான் குத்தலென்றரோகம்போகும், அண்டிடவேபத்தியந்தா னுப்பாகாது அப்பனேமற்றதெல்லாமாகும்பாரு, தெண்டிடவே சீதளப்பண்டமாகா தெளிவாகஸ்தனங்களாறுநாளாம், விண்டிடவேவறுத்துப்புத்தானும்கூட்டு வியப்பாகமற்றதெல்லாஞ்சேருசேரே. (௬௪௬)

சகலகிரந்திக்குமெண்ணெய்.

சேரப்பாகற்றாழைக்குமிழின்சாறு திடமானதாழையிடமணத்தக்காளி, காரப்பாநெல்லிக்காய் கையான்சாறு கனமான்வீழியொடு தொண்டைச்சாறும், நேரப்பாவிழிதியிடச்சாறுங்கூட்டி நெடிதான கொடுப்பையுடசங்கம்பூலா, கோரப்பாதக்காளியிலையிநோடு கொடிதானவேலியிடப்பருத்திதானே. (௬௪௪)

தானனயிருநெஞ்சியானைத்திப்பிலி தயவானசிவகரந்தி விஷ்ணுகிரந்தி, கோனனதண்ணிமிட்டான் கிழங்குகூட்டி குணமானபசுமபாலும் காடித்தண்ணீர், தேனனவாமணக்கி னிளநீரோடு தெளிவாகமெழுகுபதம் காய்ச்சியேதான், பானைகரண்டிவீதங்கொண்டாயானல் பறக்குமடா கிரந்திமுதல்பறக்கும்பாரே. (௬௪௫)

பறக்குமப்பாயின்னமொருபாகம்சொல்வேன் பண்பாகக்கேட்டிருங்கள்மாணுக்காளே, சிறக்குமென்றசிற்றரத்தைபேரரத்தை சிறப்பான நிலப்பனையின் அசுவகெந்தி, திறக்கமுள்ளநிலக்குமிழும் தண்ணீர்மிட்டான் திறமானகற்றாமணச்சித்திரமூலம், கறக்கமுள்ள துத்திவேர்நீர்நெருப்பு கடிதான சாபத்திரிகிராம்புமாமே. (௬௪௬)

ஆமேதான்பத்திரியுமதுரமாஞ்சில் அழகானலவங்கமொடுஏலந்தானும், சாமேதான்வால்மிளகு பத்திரிதானும் சார்வானதிரிகடுகு திரிபலாதி போமேதான்சோம்புடனே சீரந்தானும் பெ திவானகசகசா நாகப்பூவும் நாமேதான் கடுக்காயுமல்லிதானும் நலமானரேவலிடசின்னிசேரே. (௬௪௭)

சேர்த்துமேகார்போகஅரிசிதானும் சிறப்பான வகைக்குசமனிடையதாக, கோர்த்துமேசூரணமாய்செய்துகொண்டு கொப்பெனவே சீனியதுசமனய்ச்சேர்த்து, தீர்த்துவரும்வெண்ணெய்தனில் கொண்டாயானல் திருமடாபெருங்கிரந்தி அரிகிரந்தி, பார்த்துமேசெங்கிரந்திகருங்கிரந்திபறக்குமடாயிம்மருந்து அதிதங்கேளே. (௬௪௮)

உக-மேகம்தீரசர்வாங்கசுத்திஎண்ணெய்.

கேள்வேசித்தாமணக்கெண்ணெய்நாழி கெடியானகையான்சாற்படிதான்நாழி, நாளவேபசுவின்பால் படிதானுழி நலமான தேங்

காய்ப்பால்படிதானுழிமெதுவானகுமரிச்சார்படிதானுழி, ஆ... றுகன்சார்படிதானுழி அப்பனேநீப்பூண்டு எளநீரா்மே. (௩ாசு)

எளநீராம்கருஞ்சீரம்சிறுநாகப்பூ யெழில்லானசாதிக்காய் கிராம் புஏலம், களம்புடையகூகைநீா் மதுரம்வேகம் கனமானசீனமொடு காரந்தானும், களம்பெறவேகற்பூரசத்துதானும் கடிதானயெண்ணெ ய்தனில்விட்டுக்காய்ச்சி, வளம்பெறவேகரண்டிவிதம்கொண்டாயானு ல்வாங்குமடா நோயனைத்தும்வாங்குந்தானே. (௩ாய)

## எலிவிஷத்திற்குமருந்து.

தானனமாந்தருக்குஎலிதீண்டினலே தபவாகச்சாற்றுகிறேன் மருந்தோவேகம், கோனனபூனையிடப்பிச்சிதானும் குணமானகாஷ் டமுடன் கஷ்டந்தானும், சேனையிம்மூன்றுமொன்றாய்ச்சேர்த்துத் திறமாகப் பஸ்பித்துக்கொடுத்தாயானல், வேனைவிஷமதுவுந்தீரு பாரு விளம்பினேமிம்மருந்துவேகங்காணே. (௩ாயக)

## பதினெண்குட்டத்திற்குமருந்து.

காணவேமானிடற்கு குஷ்டம்வந்தால் கண்காணுதோடுதற்கு மருந்துசொல்வேன் தோணவேலிங்கமொடுபூரந்தானும் துடியான வீரமொடுசாரந்தானும், பூணவேகாரமொடுகெந்திதானும் புகழான துருசுடனே துத்தந்தானும், ஆணவேபாஷாணந் தன்னில்கூட்டி அப்பனேமிறுதாருசிங்கிகூட்டே. (௩ாயஉ)

கூட்டவேமடையனிடாசமுந்தானும் குணமானஅரிதாரம் மூ சிக... , நீட்டிடவேகெவுரியிட் டுடன்தானும் நேரானபொரிகா ரம்சமனுய்ச்சேர்த்து, திட்டவேஆடுதின்னப்பாளைதன்னில் திறமாக வறுபதுசாமமாட்டு ஆட்டவேதயிலமதுயிறக்குதற்கு அப்பனேபில் லைதட்டி நிழலில்வையே. (௩ாயங)

வைத்துமேமெழுகுபதம் காய்ந்தபின்பு வாகாகக்குழித்தயிலம் இறக்கிக்கொண்டு, கைத்துமேபனவெல்லத்தில் குன்றியிடைகொள்ள நாடாதுகுஷ்டம் பதினெட்டும்போகும், கைத்துமேபுளிபுகையும் தவிர்த்துப்போடு கடிதானவாயுவென்ற பதார்த்தந்தள்ளு, தைத்து மேவிஷரோகம் விஷப்பாண்டுபோகும் தரியாதுநோய்களெல்லாம் தவிர்த்துபோமே. (௩ாயச)

## பெண்கள்மருந்தீட்டுக்குச்சிட்சை.

போமேதான்பெண்கள் மருந்திடுபோகப் பூட்டுகிறேன்தேங்கா யின்பால்பிழிந்து, ஆமேதான்கடுகுரோணிமாஞ்சில்தானும் அடவா கருரணித்துப் பாலில்தாக்க, போமேதான் மூன்றுநாளாறுவேளை

...சப்புடனே தானருந்ததீரும்பாரு, சாமேதான்மருந்திடுமுறியும் பாரு சார்வாகப்பத்தியந்தானுப்பாகாதே. (௩௱௰௫)

கெற்பத்தைவின்னப்படுத்தமருந்து.

ஆகாதுமங்கையர்கள்கெற்பழிக்க அறையுறேன் மருந்தொன்று செப்பக்கேளும், போகாதுநீலியின்சாற்றினாலே பொல்லாதவீரத்தைக் கழஞ்சிபொடியிட்டு, சாகாதேகாலைமாலை யிரண்டுவேளை சருகாமல்தானருந்த கெற்பவின்னம், நோகாமல்கெற்பழிந்துபோகுமென்று நோக்கமுடன்தன்வந்திரிபுகன்றவாறே (௩௱௰௬)

கெற்பமுண்டாகமருந்து.

வாறானமங்கையர்கள்கெற்பமாக வறையுறேன்பசும்பாலு வசம்புதானும், நீறானவிழுதியிலைமூலிதானுப் நிலையானகுபபமேனி சமனாய்க்கூட்டி, காறானபால்தனிலேல்குழப்பியேதான் கனமாகவிருவேளைகொண்டாயானால், சேறானகிருமியது அற்றுப்போகும் செனிக்குமேபிள்ளையது செனிக்கும்பாரே. (௩௱௰௭)

செனிக்குமதுபிள்ளையதுபிறக்கும்பாரு தெளிவாகும்திரேகமது கலைக்கும்பாரு, கனிக்குமேயிந்தமுறைபொய்யாதையா காசினியிலாருந்தான்சொல்லமாட்டார், வனிக்குமேமுறையோடேசெய்தாயானால் மகாகோடிபுண்ணியங்களெய்தும்பாரு, பனிக்குமேயிக்காவியம்தீத வித்தைப்பாடினோம் தன்வந்திரிபாடினோமே. (௩௱௰௮)

சுகபேதிரத்நாதிசூரணம்.

பாடினோம்சுகபேதிசெப்பக்கேளும் பாங்கானசூரத்து நிலாவிணாயும் தேடினோமே ரேவலுசின்னிதானும் சிறப்பானசுக்குடனே கடுக்காய்த்தோலும், கூடினோம்சீரகமும்வாலுழுவைதானும் குணமான கருவாய்த்தோல் கற்றாமணக்கிழங்கும், நாடியேசூரணிததுவடியே செய்து நலமாகஅந்திடைக்குச்சீனிசேரே. (௩௱௰௯)

சேர்த்துமேபாணிதனில்கொண்டாயானால் சிதராதுபலபேதி நீரும்போகும், கோ த்துவருமூன்றுவிதநீரும்போகும் கொடிதான மலக்கட்டு மலபந்தங்கள், தீர்த்துவிடும்வயிறுளைவு கிருமிப்பூச்சுசிக்காமல்அகன்றுவிடுமே சுகமேசெய்யும், ஆர்த்துமேயிப்பாகம் சித்தர் சொல்வார் அப்பனேநந்தியெமக்கருளினாரே. (௩௱௨௰)

ஆமதுதானேதெண்டமென்றாயானால் அகலயில்லை பதினெண்பேர்சித்தர்களெல்லாம், வேமதுதான் வழலையென்று சொல்வதெல்லாம் வெவ்வேறேயிடைபாகம் விளம்புவாகள், ஆமதுதான்வழலைக்

கியிடைசளேது அபபனேபுரிபாஷை மெத்தவுண்டு, கோமதுதான் சித்தர்கள்தான் கூடிக்கொண்டு குகைதனிலேயிந்நூலை ஒளித்திட் டாரே. (ருஉக)

ஒளித்திட்டமுப்பூவையும் வெளியில்போட்டேன் உத்தமர்கள் கண்டாக்கால் அடக்கங்கொள்வீர், பளித்திட்ட மடையர்கள்தான் இந்தநூலே பாங்காகவுலகத்தில்போடுவார்கள், நளித்திட்டயிந்தநூல் மறுமமறுமம் நவிலவேமுடியாதுநாவேமெத்த, அனித்திட்ட அவன் தலைதான் வெடித்துப்போகும் அரகராயிந்நூல்தான்ஒளித்திட்டாரே.

ஒளித்திட்டசித்தர்கள்தான் சொல்லவென்றால் உத்தமர்களிப் படிதான்வழலைசொல்வார், பளித்திட்டாரிடையொன்று மார்க்கமெ ன்றும்பரிகமாயவர்களனேகம்சொன்னார், நளித்திட்டமுப்பூவும் வெ ளியிற்போட்டால் நாசமாய்அவன்குடும்பம் நசித்துப்போகும், களித் திட்டயிந்நூலை காட்டாதேசொன்னேன் கனமானபிள்ளையென்றால் கையிலீயே. (ருஉரு)

ஈயாதேகோடிதனம் கொடுத்தாலுந்தான் யிளப்பமாயின்னூலை கொடுக்கவேண்டாம், தையாதேசொன்னவித்தை பிழைக்கச்சொன் னேன்தனங்கோடி அவன்கொடுத்தாலென்னவாகும்வையப்பாகோடி தன மிதிலுண்டாகும் வாகாகயிந்தநூலுசுருக்குமெத்த, கையப்பா பழுத்தாக்கால்பழந்தானாகும்கைகண்டயிந்நூல்போல் கண்டிலேனே

கண்டிலேன்சகலதுறைதனக்கெல்லாந்தான் காரணமாய் வழலை சுண்ணமெடுத்துக்கொண்டு, பண்டிலேன்டண்டிதரோ மருந்துக்கெல் லாம் பாங்காகவிச்சுன்னம்பரிவாய்ப்போடு, அண்டிலேன் நோய்க ளெல்லாம் நிர்த்தூளாய்ப்பொங்கும் அஷ்டசித்துக்கெல்லாந்தான் சகலதுறையாடும், பண்டல்லோ ஆதியண்டவாமமப்பா பரிவாகயிந் நூலையீந்திடாதே. (ருஉரு)

ஈயாதேயிந்நூல்தான் யென்னவென்று யிதமாககேட்டாக்கால் சொல்லக்கேளு, தாயானவழலைதனை யிப்படிதான்சொல்வார் தயவா னசித்தர்கள் வெவ்வேறேசொன்னார், மாயாதேஉலகத்துக்குள்ளே மைந்தாமச்செந்திரு உனக்குச்சொன்னேன் பாருபாரு, பாயாதேகூடு விட்டுக்கூடுசெய்யும் பாங்கானவுன்துசிரம் வெடித்துப்போமே. ()

வெடித்துபோமென்றுசொல்லி சாபம்போட்டால் வெளியிலே யிந்தநூல்வந்ததேது, படித்திட்டசிவயோகிதனக்குமப்பா பாங்கான ஞானிக்கிகொடுக்கவேணும், குடித்திட்டமடையருக்கு யீந்தாயாகில்

குரும்பரவரோதுசொல்வாரிந்தநூலே, மடைத்திட்டவழலேதனை மெடு த்துக்கொண்டு, வாகானபதங்கண்டுகொடுக்கநன்றே. (கஉஎ)

வாடை.

நன்ருனவாடையொன்றுசொல்லக்கேளு நயமானஅப்பறகமினி வெட்டாசைபூசி, கண்டானதிகைப்பூண்டு பச்சையோங்திப் பாங்கா ன்வழலேயொன்று சேர்த்துக்கொண்டு, கண்டாயோ லவத்திலிட்டு மைந்தாமைந்தா கனமானகோலம்விட்டு அரைத்துக்கொண்டு, பண் டானவட்டுபோல்பிடித்துநீயும் பாங்கானவோட்டிலிட பற்பமாச்சே.

ஆச்சப்பாஇப்படியேயெடுத்துக்கொண்டு ஆனேயொடு மனிதர் பேரில் மருந்தைப்போடு, பேச்சப்பாநம்பியுன்பின் துடருவார்கள் பொற்பெரியத்தொழிலும் இவ்வண்ணமேயாகும், மூச்சப்பாதம்பன ந்தான் கொண்டோதினல் மூதண்டமுச்சடங்கும் சாவுமில்லே, காச் சப்பாசமாதிக்கி ஆதிகற்பம் கனமான ஞானமெல்லாம் வணங்கும் பாரே. (கஉகூ)

வணங்கியேவழலேகொஞ்சமெடுத்துக்கொண்டு வாதபுலிவாய்க் கட்டஅய்யென்போதுஞ், உணங்கிலிப்புசவ்வென் றெடுத்துனாப்பார் யிதுவிட்டப்புளியின்னங்கேளுகேளும் தடங்கயிலேபிரவென்று சத் திருக்கால்சொல்லவந்தபேய்பிறக்கு அய்யன்ருேது, பாங்கானபணங் காசு பொருளொன்றுமில்லே படையரவின்மருந்துவகை தன்னேக் கேளே. (கஙய)

வகையென்னுஅம்மென்ருல் வருகும்பாம்புவந்தபின்பு போவெ ன்ருல்பவவென்ருேது, துகையென்னுசற்பம்ஆக் கிருஷ்ணவென்று சொல்லுவேன்சிறியானங்கைவிஷசத்துரு, நகையென்னு நசியென் ருல் நல்லப்பாம்பு நல்விஷமும்முடனேவிழும் மசியென்ருக்கால், பகை யென்னவோ கண்டபோதே அய்யார்ப்றக்குமே பாம்பெல்லாம்பணி யும்பாரே. (கஙக)

பணியடாதயபேணிபறவுஆவென்ருல் படமெடுக்கும்அணியெ ன்னுசி காகாவெண்ணில், அணியாகசெத்துவிடுமரவமெல்லாம் பனி யென்னும் பாராபாத்தில்செகாட்டாமகிமை, யினிப்புண்டோ வயித் தியரே யினியென்னுகோளருமைஉலகத்தோர்க்கு யெவ்விதமும்வோ டும், துணிவானமந்திரந்தான்துணிவுமெத்த துடியானஅரவத்தின் மருட்டமாமே. (கஙஉ)

மருதுபொட்டனயெடுத்து வடக்கம்செய்து வாதாடும்உலகத் தோரெதுத்தாருனல், அருக்கடிமந்திரிக்கச்சென்று யிதமாகஅவன் மேலேபொடிதன்னேப்போடுபோடு, சுருமாகஅவன்தானு மசந்து

போவான் சுட்டாலும்போகாது துன்பமெத்த, அருந்தறவா உன்னே வந்து பணிந்தானுனல் அன்புடனேசியென்று பொடியைப்போடே.

போட்டவுடன்வஞ்சகங்கள் தீர்ந்துபோகும் புகழானநோய்க ளெல்லாமாண்டுதீரும், கேட்டவுடன்சித்தர்வந்து கிருபைசெய்வார் கெவுனத்தில்பறந்தேற மார்க்கஞ்செய்வார், வாட்டங்களில்லேயடா பொடியினலே மக்ரமவுனத்தைதயெல்லா மிதுக்குள்ளாகும், பாடுங் கொட்டத்ததினலாகதென்ன ானாபூசையரிபூசைபணிந்துபாரே. ()

மாரியந்தமண்டைதனையுடைத்துமூளை வனிதாயித்தின்கரண்டி யிலேவைத்துக்காய்ந்தால், மீறியந்தவெடியுப்பு வாங்குமட்டு மிதுகெ டுக்க யந்தயெடுத்துவெள்ளீயத்தில், யேறிட்டோ மாத்தெட்டு காட் டுமையா பென்னசொல்வே னிந்தமுறைக்கெல்லாந்தொந்தம், தேறி னதன்முறைநமனேசெய்வான் சித்தாந்தமாயோக வானம்தானே. ()

துத்தநாகக்கட்டு.

தானென்றதுத்தநாகக்கட்டுகேளு தனியானஅரவத்தோல்பலமி ரண்டுவாங்கி, மானென்றரோமமது பலம்ரெண்டப்பா மைந்தனே பொடிபொடியாகத்தரிச்சுக்கொண்டு,ஊனென்றபொடிக்கமூவி காய் ந்தரூமமுத்தமனே பலம்ரெண்டாயிருக்கவேணும், மானென்றயிம ரண்டத்தோடு ரெண்டுமொகவேபலம்நாலு பொடித்துக்கொள்ளே. ()

பொடிக்கேத்தரணபரணியடைத்துக்கொண்டு மைந்தனே குழி த்தயில்ம்வாங்குவாங்கு, வடிக்கேத்தமயில்துத்தம் சுறுக்குதாக்கமெ ழுக்காகும்நாலுசெம்புவெள்ளியாறு, நடிக்கேத்த தங்கமொன்றுகூட் டியேதான் நலமாககுருவொன்றுகொடுத்துப்பாரு, படிக்கேத்ததுத் தமதுஎண்ணியப்பா பழுக்குமடாவயசாறு பயன்சொன்னேனே. ()

சொன்னேனேமாதேவிபலமுமஞ்சு சுகமானஅரன்தேவி பல மோநாலு, உன்னேனேபொடிபண்ணிமேதிக்கொம்பிலுள்ளடைத்து மாம்படைசாற்சிரங்கை, பண்ணேனேகுமரிச்சாரோர்சிரங்கை பருங் கொம்புக்குள்ளடைத்துமரக்குச்சாலே, கன்னேனேகொம்புவாயடை த்துசீலே சிலேக்குமண்செய்தாட்டுசாண்புடமேபோடே. (௬௬அ)

புடமாரியதையெடுத்துநிறுத்துப்பார்த்து பெண்போலே யந்தி டைக்கித்தங்கம்சேர்த்து, திடமாகஉருக்கயிலே சரியாநிற்கும் செப் பினேன்ரசநீறுசெப்பக்கேளு, குடமான்றசங்குளிக்கல்லிட்டுநீதான் கொட்கரந்தைசார்விட்டு ரெண்டுசாமம், அடவாகயனாத்துவில்லே காயவைத்து அதின்பிறகுபுடம்போடசுன்னமாமே. (௬௬௯)

ஆச்சுன்னமறச்சந்தான்விராகனென்று அப்பனேகெந்தியுமவ்வி டையேபாகும், மூச்சென்றமாம்பட்டைமுத்தின்தாக முன்கொண்டு தினமூன்றுவறுத்துக்கொண்டு, வாச்சென்றகலேயத்தில் விட்டுமூடி மண்செய்துகுப்பியிலேயன்பத்தோர்கள், பேச்சென்னபுதைத்துவிடு பிரிச்செடுத்து கோழிபுடம்போடச்செந்துரிக்கும்பாரே. (௫௪௰)

பாரப்பாவெள்ளிபத்தில்கொடுத்துப்பாருபக்குவமாஞ்செந்தூர மொன்றுதானே, நேரப்பாமாத்தஞ்சுயின்னங்கேளு னிசமானகெந்தி பல மஞ்சுங்கூட்டி, காரப்பாசூதமது பலமுமஞ்சு கலேயமதிலிட்டு மேல்சட்டிமூடி, வேரப்பா குளியில்வைத்து மணலேயிட்டு வெள் ளாட்டுபுழுக்கையொரு நாழிபோடே. (௫௪௧)

நாழியிதமாழிவிட்டு யெருவைப்போடு நாற்பத்தஞ்சாநாளிலெ டுத்துப்பாரு, ஆழிசெந்தூரத்தைவாளியிட்டு அப்பனேசிமிளிலே பதனம்பண்ணு தாழிவைத்துசெம்பினிலேபற்றுக்கொண்டு தனியாக புளியிட்டுக்கொடுத்திடவேமாத்து, பாதிபாம்செந்தூரம்பூட்டுமெத் தப் பாடினேம்எட்டுமாத்துபூட்டினேமே. (௫௪௨)

பூட்டிப்பார்யின்னமொன்றுசெப்பக்கேளு பூதலத்தில்ரெண்டு கைபிரமாணத்தில் ஈட்டிப்பார்பெரியஎருவாகத்தட்டி ரெண்டருவுங் காயவைத்துஎடுத்துக்கொண்டு, விட்டிப்பார்அடியெருமேல்புளியன் பூவைவிக்கணத்திபறப்பியதில் காரீயம்வைத்து, சுட்டிப்பார்துண்டு துண்டாகவெட்டி சுகராகபுளியம்பூமுன்போல்போடே. (௫௪௩)

முன்பாகபூவிட்டமுக்கிக்கொண்டுமோகமுடன்துட்டுப்பத்தனி யறுகும், அன்பாகநாலுவிரல்கனமாயிட்டு அதின்மேலே புதுமேலந் தஎருவுமூடி, வன்பாகரெண்டெருவும்மூடிமூடி வளமாகரெண்டெ ருவுமகிழ்ந்துசிலே, ஒன்றுசெய்து புளியம்பொறுககு யெருவுமிட்டு குளியிலும்மளையளவு புடம்போடநீறே. (௫௪௪)

நீறுனகெவுரியதுவிறுகன்பத்துநிறுமகார்த்திகைகிழங்குதுவை த்துவேறு, வீறுனகிழங்குகொண்டுவாயைமூடி மிகுசீலேமண்செய்து குகையில்வைத்து, நேராகஉருக்கவேகெவுரிசெம்பாம் தனிவெள்ளி பத்தினிலே ஒன்றுயீப, ஆறுகபழுக்குமடாயின்னங்கேளு அக்கிழங் கைகவசமிட்டு கவசம்கட்டே. (௫௪௫)

கட்டியேபுடமிட்டுஎடுத்துவெள்ளிக் காசுபணம்பற்றுருக்கிகுரு வொன்றிய, எட்டளையும்சரியாகுமின்னமொன்று ஈயச்செந்தூரமு ண்டு யியம்புவேன்கேள், நிட்டிரண்டுதான்துவைத்து மூன்றுநேர மணியுருக்கி யிம்மருந்தில்சாய்த்துபின்னே, தட்டியேகம்பியிலேவை த்து பழச்சாத்தால் தானளைத்துவில்லேபதாப்புடத்தைப்போடே. ()

புடம்போடுபின்னுமிச்சரக்கனைத்துயிந்த பினையோகமோநாழ ள்செய்துபோடு, நடம்போடுசெந்தூரமாகும்பாரு நற்செம்புநாலு வெள்ளியாறுஞ்சேர்த்து இடம்போடேசெந்தூரமொன்றுதக்க யிட் டிடவே மாத்தாகுமின்னஞ்சொல்வேன், அன்போடுகோழிமுட்டை நாலுவாங்கி மைந்தனே தயிலமதையிறக்கிக்கொண்டே. (௫௬௭)

கொண்டபின்புகெந்திசுத்திபாலிலஞ்சு கூராகசுத்திசெய்துபொ டித்துப்பொட்டணங் கட்டியேயண்டத்தயிலம்விட்டுக் கனமானசுடர் த்தயிலம் வடிப்பாயப்பா, யண்டவித்தையஞ்சுமாத்துத்தான் சொன் னேனந்தலம்விட்டாறுபுடமேபோட், தண்டமிட்டுத்தங்கமாமிடை குனையும்சத்தை சதாவித்தையெளிமையிதுபிழைப்புதானே. ௫௬௮

பிழைக்கவேநாகமஞ்சுரசம்பேருக பிரளாமல்கழஞ்சிரெண்டு வைத்துக்கொண்டு, வுளக்கவேறுகத்தைகரண்டியிட்டு அதையுருக் கிரசம்சொடுத்து அம்மியிலேவைத்து,பிளக்கவேவெடியுப்பு நாலாங் காக்சல் யிட்டரைத்துமுன்னேகால்களஞ்சியப்பா,விலக்கவரைரெண் டுநாழிகையில் கவசந்தான்வீசும்போது தண்ணீர்விட்டரையக்கேளே

அரைக்கையிலேயந்தரமெடுத்துக்கொள்ளு, அதின்பிறகு தண் ணீரைனிரம்பவிட்டு, உரைக்கையிலேயிறுகி மொக்கவளித்துக்கொ ண்டு வுடன்மெழுக்குபதமானல்லில்லைதட்டி, நினைக்கறவிகாய்ந்து விடசுன்னமப்பா நிசமாகப்தனமாய்வைத்துக்கொண்டு, உரைத்தெ டுத்தரசத்தை சிறுபயறுவீதமுத்ததங்கக்கட்டில்ரசம்விட்டுத்தேயே

தேய்க்கவேஉண்டுகொள்ளும்தங்கம்நாலு திரும்பிறவிகாய்ந்து மேதசட்டில்சேரு, சாய்க்கவேமுன்ரசத்தில்பயறுவிதம் தடவிரவி காயவைக்கதகடுஞெறுங்குமப்பா, மாய்க்கவேபிஞ்சாடிமூன்றுசெம்பு மாட்டிடவே ரவிப்பிறப்பையாகும்பாரு, தேய்க்கவேயதையெடுத்து வெள்ளியேழு செய்தங்கம்சாதிலிங்கஞ் செம்புமூன்றாயீயே. (௫௭௧)

ஈயவேயிடைக்கிடைதான்தங்கமிட்டு யிதில்தங்கமிட்டுருக்கயே ழுமாத்தாம், ஆயவேயில்லாவிட்டால்புத்தொட்டிலூதுவப்பவல்லோ வேதையதுயென்னசொல்வேன், சாயவேசாதிலிங்கமெழுக்குகேளு கறுங்கோழிமுட்டையிலேபணம்போற்றுவாரம்,பாயவேபணிவிடை ஒண்ணாதானப்பா பச்சைகற்பூரம் முட்டைக்குள்ளேதாக்கே. ()

தாக்கியேரவியில்வைப்பாய் மெழுகுமாகும் தயவாகயம்மெழு கெடுத்து லிங்கத்தில்சுற்றி, மீக்கியேவிளக்கினிலே பிடிக்கும்போது மெழுக்காகும் அதில்தங்கம்கூட்டிக்கொண்டு, ஆக்கியே வெள்ளி செம்புபத்துக்கொன்று அப்பனே அதில்பத்துக்கொன்றுசேரு, பாக்

கியமே உண்டாகும் யினிமேலென்ன பண்பானஅரிதாரகட்டை கேளே. (கூருஉ)

கட்டானஅரிதாரம்குளிகல்லிலிட்டுக் கருதியேசாராயம் விட்டரைப்பாய், மட்டாகசாமம்ரெண்டரைத்தபோது வழிக்கயிலேவேளைச்சார்மூன்றுதுளிவிட்டு, திட்டாகமைபோலேயாட்டியாட்டு திடமாக வழித்தெடுத்துப்பில்லைசெய்து, தட்டாகவில்லைரவிசாயவைத்து தனிநாயுருவிசாம்பலேற்றுயேற்றே. (கூருச)

ஏற்றியெரிப்பாவாவிறகுகொண்டு யிருசாமமதியெரிக்ககட்டிப்போச்சு, ஆத்தியேசெம்புபத்துக்கிவைலன்றீயவாச்சரியம ருடனே சொல்லப்போருய், மாற்றியேகூர்வதர்க்குவகைகையைக்கேளு மைந்தனேவெடியுப்பு புளினவச்சாரம், தோத்தியசூடனதுசெயநீர்விட்டுச்சேர்ததரைக்கவேயதுவுமெழுக்கதாமே. (கூருரு)

மெழுக்கல்லோசரக்கெதுவுங்கட்டுகெட்டுமெழுக்கிடுவாய்மேல்ப்பிறையோகங்களப்பா, அழுக்கமுள்ளசுண்ணம்புமுப்புமாகும் அதுவரைத்து சீலையிலேபூசிக்கொண்டு,வழுவமுப்புவாருமல்மெழுகுமேதான் வாகாகநாலுமிந்தச்சீலைமண்ணு, தொழுகமுப்பாய்ப்பூசியேகாயவைத்து துகழ்வாவிபுடமிடவேகட்டப்போமே. (கூருசு)

போமேதானிந்தநூல்சூட்சாசூட்சம் பூட்டினுர்வெகுகோடிமருந்துதானும், ஆமேதான்மாருட்டம்செய்துவைத்தார் அப்பனேநானுரைத்தேன் தெளிவாக, சாமேதான்முக்கருவுமிதற்குள்ளாகும் தப்பாதுதப்பாதுநாவோமெத்த, காமேதான்கைபாகம் செய்பாகந்தான் கருவாளிதானறியச் சொன்னுர்தாமே. (கூருஎ)

## தீராதவாந்திக்கு.

சொன்னுலேமானிடற்கு வாந்திகண்டால் துடியானசீரகமும் ஏலந்தானும், பன்னுகின்றஅதிமதுரம் தேவதாரம் பாங்கான நெற்பொரியும் நலமாஞ்சுக்கு, துன்னுகின்றவிளாவிலையும் கொத்தமல்லி துணையான பச்சையென்றபெயரும்சேர்த்து, மின்னுகின்றமுட்டியுடன்கியாழஞ்செய்து முனையானபராபரியைப்பூசிப்பாயே. (கூருஅ)

பூசித்துக்கணேசனைப் போற்றிசெய்து புகழாக காலைமாலைகொண்டாயானல், ஆசித்துமதமூர்ச்சைமயக்கந்தீரும் அப்பனே சிறுசிறுப்புச்சுழலைதீரும், பூசிக்கும்சுவாசமதுகாந்திப்போகும் பொல்லாத வயிறுளைச்சல் அகலும்பாரு, நேசித்துக்கியாழம் செய்துபார்த்தால் நெருங்கிவரும் பித்தமெல்லாம்பறக்கும்பாரே. (கூருகூ)

பறக்குமென்றே தன்வந்திரி பகர்ந்தார்மெத்த பாடினா் இன்னூலுக்காவியந்தான், திறக்கமாய் மானிடற்கு வெளியாய்த்தோன்றும் சீரானகாவியந்தான் அதீதமெத்த, பறக்கமுள்ள நூற்கோர்வை பகரக்கேளும் பதிவானகருக்கிடை நூல் அய்ந்துசொன்னேன், சிறக்கமுள்ளதன்வந்திரிக்கியாழமைந்நூற் திறமானலேகிய மைந்நூறுமாமே

நூற்றொகுப்பு.

நூறானஅன்னூறுபறபஞ்சொன்னேன் நுணுக்கமாங்கிரதத்திலந்நூறுஞ்சொன்னேன், வேறானசெந்தூர மந்நூறுஞ்சொன்னேன் வெளியானதயிலத்தி லந்நூறுஞ்சொன்னேன், கூறானதொந்தங்கள் கோடாகோடிகொட்டினேன்காவியத்தி லனந்தங்கோடி, சேறானஎந்நூல்போ லாருஞ்சொல்லார் திறமானகாவியந்தா னிந்தநூல்பாரே.()

தங்கபற்பம்.

பாரப்பாதங்கபற்பம்சொல்லக்கேளு பாங்கானதங்கத்தின்காசுவாங்கி, நேரப்பாகருமத்தன் நிலையரைத்து நெகிழவேகவசித்துச்சீலைசெய்து; சீரப்பாகசபுடமேயிட்டாயானல் சிறப்புள்ள பற்பமதுயென்னசொல்வேன், காரப்பாபற்பத்தை லேகியத்திலுண்ணும் பாங்கான மண்டலந்தான்பத்தியந்தான்காரே. (௫௬௨)

காற்கவேதிரேகந்தான்சட்டைதள்ளும் பாங்கானதிரேகமதுவச்சிரகாயம், தீற்கவேயிறைச்சிவகையாவுங்கூட்டு தெளிவாககூண்டுகறிகூட்டுகூட்டு, ஆற்கவேசேத்துமக்கள்தொண்ணூற்றாரும் அகன்றுபோம் கூடுவிட்டுகாசரோகம், வேற்கவேசயமீளைசுவாசகாசம் விரண்டோடிப் போகுமெனப்பேசினேமே. (௫௬௩)

பேசினேமகடத்திலுள்ளவியாதிதீரும் பிரலாபசன்னிமுதல்பிறநீர்க்கோவை, காசினியில்யிந்தபற்பம் சுறுக்குமெத்தக் கண்டவற்கு கண்டபடிசொல்லப்போகா, தேசிவித்தைபரிவித்தை யேமவித்தை தீட்டினே மாயிரந்தான்காவியத்தில், வாசிமுதல்தத்துவகாவியத்திற் சொன்னேன் வாகாகயிந்தநூல் குருநூலாமே. (௫௬௪)

நெல்லிக்காய்கெந்திபற்பம்.

குருநூலாம்கெந்தகத்தின் பற்பஞ்சொல்வேன் கெடியானகெந்தகத்தின்கட்டிவாங்கி, அருவானஆத்தலரிமூலிதன்னை அன்பாகதாமறைத்துக்கங்கிபூட்டி, பருவானசீலைமண்ணேழுஞ்செய்துப் பதிவானகுக்குடமேயிட்டாயானல், தருவானபற்பமது தவளம்போலாம் சாற்றவொண்ணாக்கெந்தகத்தின்பற்பமாமே. (௫௬௫)

பற்பமாம்வெண்ணெய்தனில்கொண்டாயானால்பறக்குமடா சூலைநோயெல்லாந்தீரும், அற்பமென்றெண்ணாதேகெந்திபற்பம் அரிதானகிரந்திமுதல்யாவுந்தீரும், கற்பநோய்நீரிழிவு பிரமேகம்போம் கருவான குட்டமுதல்பதினெட்டும்போம், சொற்பமாம்நெல்லிக்காய்லேகியத்தில் சுகம்பெறவேவுண்டிட பித்தம்போமே. (௩௱௬௰௬)

போமேதான்புண்புரைகள் சிலவிஷங்கள் பொல்லாதகடிவிஷங்கள் வாதம்போகும், தாமேதான்வயிற்றுவலி மகோதரங்கள் தசையிலுள்ளவிஷநீர்கள் தவிர்ந்துபோகும், நாமேதான்பாண்டுகாமாலைதீரும் நவிலவொண்ணாவலிவாதம் அற்றுப்போகும், காமேதான்யிந்தபற்பம்சுறுக்குமெத்தக் காசினியிலாருந்தான்செய்யார்பாரே. (௩௱௬௰௭)

மண்டூரபற்பம்.

பாரப்பாமண்டூரபற்பம்சொல்வேன் பாங்காகஆயிர மாண்டுசென்ற, தேரப்பாசிட்டத்தைக்கொண்டுவந்து தெளிவாக கோமியத்தில் மண்டலந்தான், நேரப்பாவூறவைத்துச்சென்றபின்புநெடித ணபொன்னூமத்தன்சாற்றினாலே, வாரப்பாபன்னிரண்டுசாமந்தானும் வாகாகத்தானரைத்து பில்லைசெய்யே. (௩௱௬௰௮)

செய்துமேஅம்மூலிக்கவசஞ்செய்து செழிப்புடனே செகபுடமேயிட்டாயானால், நைதுமேபற்பமதுதவளம்போலாம் நாட்டிலேயாருந்தான்செய்யார்பாரீர், கைதுமேமலைத்தேனில் கொண்டாயானால் கசடற்றுப்போகுமடாபாண்டுசோகை, பெய்துவரும்விஷநீரு ஆம்பல்க்கட்டி பிறண்டோடிப்போகுமெனக்கூறினேனே. (௩௱௬௰௯)

நீலாஞ்சனக்கல் பற்பம்.

கூறினேமாயுறுவேதந்தானும் குணமானநீலாஞ்சனக்கல்லுதானும் தேறினதோர்கட்டியாய் வொன்றுவாங்கி தெருளியென்றமூலிதன்னைக்கங்கிபூட்டி, ஆறினதோர்கெசப்புடத்தில் மேலெருவையிட்டு அப்பனேகாற்றுபடாவிடங்களாகா, கூறினதோர்கைபாகம் பிசகிடாமல் சொப்பெனவேநீற்றியதையெடுத்திடாயே. (௩௱௭௰)

எடுத்திடவேவெண்ணெய்தனில் கொண்டாயானால் என்மக்காள்மதுமேகம்நீருகல், கொடுத்திடவேகுடிவிட்டுப் போகுங்கண்டீர் குடிலமாமிப்பற்பங்கூறூர்கூறூர், அடுத்திடவேபத்தியமோ யிச்சாபத்தியம் அறைகிறேன்சீதளப்பண்டமாகா, தொடுத்திடவே சைபோகமாகாதப்பா துணைமக்கள்யிப்பற்பம் சுறுக்குகாணே. (௩௱௭௰௧)

அரிதாரப்பற்பம்.

காணவேதாளகத்தின் பற்பஞ்சொல்வேன் பாங்காக மானிடர்கள் பிழைக்கவென்று, தோணவேதாளகக் கட்டிவாங்கி துடியான

சுண்ணாம்புத்தண்ணீர்விட்டு, ஆணவேகுகைபோலேசெய்துமைந்தா அப்பனே அதற்குள்ளேகட்டிவைத்து, ஊணவேஅண்டோடு சுண்ணமிட்டுயெழிலாககுக்குடமேபோட்டிடாயே. (௩௭௨)

போட்டிடவேபற்பமது யென்னசொல்வேன் புகழானபற்பமது தவளம்பேரலாம், மாட்டிடவெள்ளிசெம்பில் பத்துக்கென்றுவாகாக கொடுத்திடவேமாத்தஞ்சாகும், காட்டிடவேசயரோக மீளைபோகும் கனப்புடனேயிருமலது காசம்போகும், தீட்டிடவேயெலிவிஷங்கள் துலையாதகுஷ்டமொடு குஷ்டநோய்போமே. (௩௭௩)

போமேதான்வண்டுகடி சிலவிஷமும்போகும் பொல்லாதமந்தாரகாசம்போகும், ஆமேதான்கிரந்திபதினெட்டும்போகும் அப்பனே வாதமென்றதெண்பதுவும்போகும், சாமேதான் சேத்துமங்கள் தொண்ணூற்றாறும் தவறுண்டோபோகுமடா சாற்றக்கேளு, நாமேதானிந்தநூல் முறைபாகத்தோடு நாட்டினேமானிடர்க்கு நாட்டினேமே

மகாசாதிலிங்கபற்பக்கோடரி.

நாட்டினேமானிடர்கள் பிழைப்பதற்கு நவிலவொண்ணா சாதிலிங்கக்கட்டிவாங்கி, மூட்டினேமுலைப்பாலிலூறவைத்து முத்தமனே சுருக்குமுதல்நாலுசாமம், தீட்டினேம்வெண்கருவு வெடியுப்புச்சீனம் திறமானவீரமொடு பூரம்சேர்த்து,வாட்டமுடனக்கருவால்நாலுசாமம் வாகாகஅரைத்துமேகவசம்செய்யே. (௩௭௫)

செய்துமேகுக்குடமாம்லகுவிற்போடு செழிப்பானபற்பமது தீரும்பாரு, கொய்துமேபற்பத்தை தேனிற்கொள்ள கொப்பெனவே பாண்டுகாமாலைதீரும், நைதுமேபாரிசவாய்வுபோகும் நலமானசூலைமுதல் நாடாதோடும், பெய்துமேசுரங்களறுபத்துநாலும் பிரண்டோடிப் போகுமெனப்பேசுவோமே. (௩௭௬)

கொச்சிவீரப் பற்பம்.

போகுமேகொச்சியென்ற வீரந்தன்னைக்குவலயத்தில்நல்லதாய் வாங்கிக்கொண்டு, ஆகுமேநாய்க்கோட்டான் கிழங்குதன்னை அன்பாகத்தானரைத்துக்குகைபோற்பண்ணி, ஏகுமேவீரத்தை அதற்குள் வைத்து யெழிலாகமுப்பூவும்களஞ்சியிட்டு, பாகுமேகுக்கிடமேபோட்டாயானால் பளிங்கறறபற்பமது ஆச்சுபாரே. (௩௭௭)

பாரப்பாசன்னிபதிமூன்றும்போகும் பாங்கான சிலேத்துமது தொண்ணூற்றாறும், நீரப்பாபித்தநோய் நாற்பத்துநாலும் நேரான வாதமதுயெண்பதும்போம், காரப்பாபிப்பற்பம் கடினமெத்தப் பாரினிலேயாருந்தான்சொல்லார்வில்லார், நேரப்பாபத்தியமோ யிச்சாபத்தியம் நினைவாகயிப்பாகஞ்செய்பநன்றே. (௩௭௮)

### அன்னபேதிபற்பம்.

நன்றான அன்னமென்ற பேதிதன்னை நாட்டுகிறேன்மாணுக்கள் பிழைக்கவென்று, குன்றான அன்னத்தின்கட்டிவாங்கிக் குழியானைக் கல்லுதனைமுசைசெய்து, நன்றானகட்டியைவுள்ளேவைத்து நலம்பெறவேகெசபுடமேயிட்டாயானால், வன்றானசுண்ணும்புபோலேநீறும் வருக்கவொண்ணு பற்பமதுஆகும்பாரே. (௩௭௯)

### இரத்தினபற்பம்.

பாரப்பாமேகமென்றதிருபதும்போம் பரிவானவுஷ்ணநோயகலும்பாரு, தேரப்பா ரத்தினத்தின்கட்டிவாங்கித் தெளிவானபூனைக் குகைபோற்செய்து, சீரப்பாகுக்குடமே போட்டாயானல் தெளிவானபற்பமது தவளம்போலாம், நேரப்பாபற்பத்தின்வேகமெத்த நெடிதானவெண்ணெய்தனில்கொண்டிடாயே. (௩௮௰)

கொண்டிடவேமேகமதுதிருபதும்போம் கொடிதானசூலைபதினெட்டும்போகும், அண்டிடவேசயமோடியீளைபோகும் அப்பனே காந்தலதுதீரும்பாரு, பாண்டுபேர்ல்திரேகமதுமின்னும்பாரு பதிவகசட்டையதுவுதிரும்பாரு, தெண்டமுடனிந்தநூல்கோர்வைபோலத் தெளிவுறவே யாருந்தான்சொல்லாரன்றே. (௩௮௧)

### பாஷாணப்பற்பம்.

அன்றானமானிடற்குப்பற்பமொன்று அரையுரேன் மாணுக்கள் பிழைக்கவென்று, குன்றானப்பாஷாணக்கட்டிவாங்கி குணமானமூசையொன்றுசெப்பக்கேளும், பன்றானசீனமொடுவெடியுப்புச்சேர்த்துப் பாங்கானபேரண்டமலன்றாய்க்கூட்டி, வன்றானவெண்கருவால் அரைத்துமைந்தா வாகாகசிமிழ்போலேமூசசெய்யே. (௩௮௨)

செய்துமேபாஷாணக்கட்டிவாங்கித் திறமானதிருகுகள்ளிப்பாலையூட்டி, நைதுமேமேலுந்தபில்லைமூடி நலமாகயேமூசிலைவலுவாய்ச் செய்து, கொய்துமேகுக்குடமேபோட்டாயானல் குவலயத்தில்மாசற்றப்பற்பமாச்சு பெய்துமே தேனதிலகொண்டாயானல் பறக்குமடா சகலநோய்பறக்கும்பாரே. (௩௮௩)

பறக்கின்றபற்பத்தைசெம்பிலீயப் பளிங்கற்ற தெள்ளியதுபாரு பாரு, சிறக்கமுள்ளவயததுதான்யெட்டதாகும் சிறப்புள்ளசரிகை வெள்ளி யுடனுய்ச்சேர்த்து, திறக்கமாய்க்காய்ச்சிடவேசிகப்புகாணும் தேர்ந்ததோர்வித்தையிதுரசிந்வித்தை, துறக்கமாய்ப்பாடிவைத்தேனிந்தநூலுதொழிலாளி பார்த்தாக்கால்செய்வாரன்றே. (௩௮௪)

### உப்புபற்பம்.

அன்றானமானிடற்குபற்பமொன்று அரைகிறேன் லவணமாம் பற்பமப்பா, குன்றானலவணமதைசேருவாங்கிக் குறிப்பாகசெருப்படையின் சாற்றுலாட்டி, பன்றானமாவிலிங்கப் பட்டைக்குள்ளே

பாங்காகபொதிந்துமேகவசம்செய்து, வன்ருகச்சபுடமேயிட்டாயா
னல் மாசற்றலவணத்தின் பற்பமாச்சே. (௩அ௫)

ஆச்சப்பாலவணபற்பம் சாற்றக்கேளு அப்பனே குன்றியிடை
நெய்யிற்கொள்ள,போச்சப்பாகுன்மமென்றதெட்டும்போகும் பொரு
மலுடன் வயிற்றுவலிசூதவாய்வு, நீச்சப்பாமகோதரமும்பீலிகையும
போகும் கோரானதசவாய்வுசூலேபோகும், தேய்ச்சப்பாபாரிசவாய்வு
போகும் தெளிவாகதிரேகமது மின்னும்பாரே. (௩அ௬)

மின்னுமப்பாபற்பத்தின்செய்கைகேளு மேன்மையாம்ரவிமதி
யும்ஒன்றாய்க்கூட்டி, துன்னுகின்றகுருலவணபத்துக்கொண்டு துடிப்
புடனேகொடுத்துருக்க மாத்தஞ்சாகும், மின்னுகின்றதங்கமதுசரி
யாய்ச்சேர்த்து மிக்கவேதகட்டித்து புடமேயிய, பன்னுகின்றமாத்த
துவும்வொன்பதாகும் பாடினர்வெகுகோடி வேதையாமே. (௩அ௭)

பரிசவேதை.

வேதையிலேயின்னமொரு போக்குசொல்வேன் வீரானஆயச்
செம்புதங்கமொன்று, ஆதையிலேகரிவங்கம்ரசமுங்கூட அப்பனே
வெள்ளியதுசரியாய்க்கூட்டி, பாதையிலேபித்தளையும் அரையும்சேர்
த்துப் பாங்காககாரமிட்டுவுருக்கிறைக்கால், தீதையில்லா களகம்போ
லாகுமப்பா தெளிவாகவொட்டில்வைத் தூதிப்போடே. (௩அ௮)

யோட்டிடவேமாத்தஞ்சுயிருக்கும்பாரு பொங்கமுட னிடைக்
கிடை தங்கம்சேர்த்து, ஆடையிலேசீவனம்செய்துகொண்டு அப்
பனேஎன்காவியமறிந்துபாரு, நீடையிலேகசடருக்கு கட்டவேண்
டாம் நிட்சயமாய்நாமுரைத்தோநந்திபாதம், ஓடையிலேதன்வந்திரி
பகவான்தானும தெளிவுறவேதாமுரைத்தார் வேதந்தானே.(௩அ௯)

வேதந்தானையுறுவேதமப்பா விவலரும்ஆயிக்குசொன்னதப்பா,
போதமாமிக்காவியந்தான் பூட்டினர்வெகுகோடிபூட்டுமப்பா, நீதமா
மருந்துவகைசெய்பாகம்யாவும் நிகழ்த்தினேன்குறுக்குவழியனந்தங்
கோடி, பாதமாம்நந்திபதம்வணங்கிநின்று பாடினேன்தன்வந்திரியா
டினேனே. (௩௯௰)

பேய்த்துமட்டிக்காயெண்ணெய்.

பாடினதோர்மானிடற்கு யெண்ணெயொன்று பட்சமாயுரைக்
கிறேன்பகரக்கேளும், தேடினதோர் மட்டிக்காய்காக்கணம்வேர் துடி
யானலவணமாமிந்துப்போடு, ஆடினதோர்வெள்ளுள்ளி வசம்புதா
னும் அப்பனேகருஞ்சீரம்சரியதாக, கூடினதோசித்தாமணக்கெண்
ணெய்தானும் குடிலமாஞ்சரியாகக்கூட்டிடாயே. (௩௯௧)

கூட்டியேமெழுகுபதம்தன்னிற்காய்ச்சி குணமாகாராறு நாள்
தான்கொள்ள, ஆட்டியேபத்தியந்தானிச்சாபத்தியம் அப்பனேகடு
கெண்ணெய்தானுமாகா, நீட்டியேமண்டலந்தான் இரண்டுமுலை

யுண்ண நீற்கா துசூசிகவாய்வுதானும், ஓட்டிவிடும்வாதமென்றதெண் பதும்போம வுத்தமனே யிந்தயெண்ணெய்அதிதமாமே. (௩௯௨)

சகலவாய்வுகளுக்குச்சூரணம்.

அதிதமாம்மாந்தருக்குச்சூரணங்கேள் அப்பனேதிரிகடுகுசீரந் தானும், வதிதமாம்திரிபலையும் விளங்கங்காயம் வாகானசவுட்டுமண் ணுரோணிதானும், சதிதமாம்கோஷ்டமுடன்மாஞ்சில்ஏலம் சார்வா னமதுரமாம் கிராம்புசந்தம், கதிதமாம்தாளிசம்சீரம்நாகம் கருவா கச்சூரணித்துவடிதான்செய்யே. (௩௯௩)

செய்யுமேசீனியதுசரியெடைதான்கூட்டி சிறப்பாக வெருகடி தான்கொண்டாயானல், கொய்துமேவாதமென்ற தெண்பதும்போம் குடிகெடுக்கும்பித்தமதுக்கிழேசாடும், கொய்துமேசந்துவாதம் முட க்குவாதம் தெளிவானமுகவாதமிசுப்புவாதம், பையதுமேசகல ரோக வாயுதானும் பறக்குமடாவீடுவிட்டுப்பறக்குமபாரே. (௩௯௪)

சிலேட்டுமரோகத்திற்குநெய்.

பறக்குமேமானிடற்குசிலேட்டும்தீரப் பாடுகிறேன்நெய்யோன் றுசூட்சாசூட்சம், சிறக்குகின்றசிந்தலொடுதேவதாரம் தெளிவான சித்தரத்தைகுராசானியோமம், நிறக்குகின்றமாமஞ்சள் விலாமிச் சோடு நேரானசந்தனமுமுத்தக்காசு, திரக்கமுள்ளசிறுதேக்குகண் டங்கத்திரி திறமானவாழுவையரிசிகூட்டே. (௩௯௫)

கூட்டியேநெய்தனிலேபோட்டுக்காய்ச்சிக் குணமாக மண்டலந் தான்முழுகினுக்கால், வாட்டிவிடும்சிலேட்டும்ந் தொண்ணூற்றுரும் வாங்குமடாகபரோகமீளைதானும், தாட்டிகமாமிந்தநெய்கருக்குமெத் ததாரணியிலாருந்தான்செய்யமாட்டார், பூட்டகமாய்ப் பத்தியந்தா ணிச்சாபத்தியம் புகலுகிறேன்தன்வந்திரிபுகலுறேனே. (௩௯௬)

அஷ்டகுன்மத்திற்குமருந்து.

புகலுகிறேன்மானிடற்குக் குன்மம்வந்தால் போவதற்குமருந் தொன்றுசெப்பக்கேளும், நகலுகிறேன்காரமுடன்தாரந்தானும் நல மான பூரமுடன்கெந்திதானும், அகலுகிறேன்லிங்கமுடன் காந்தந் தானும், அரியதொருமனோசிலையுங்கூடச்சோத்து, நிகலுகிறேன்திரி கடுகுதிரிபலாதி செடிதானதேன்விட்டுஅறைத்திடாயே. (௩௯௭)

அரைத்துமேதூதளங்காய்ப்பிரமாணந்தான் அன்பாகமண்டல ந்தான்கொண்டாயானல், திறைத்துவரும்குன்மமென்றதெட்டும்போ கும் திறமானவயிற்றுவலிபிரட்டல்தீரும், கரைத்துவரும்வாந்தியுடன் விம்மல்தீரும் கண்காணுதோடுமடாகண்டுபாரு, மறைத்துவரும்கண் ணேசைமழுங்கல்தீரும் மறப்பெல்லாந்திறப்பாகபாடினேமே. ()

மேகரசாயனம்.

பாடினேம்மேகமிருபதுதான்போகப் பண்பாகபரங்கியுடப்பட் டைதானும், தேடியேசாதிக்காய்சாதிபத்திரி தெளிவான அசுவகெந்

திசிறுநாகப்பூ, கூடியேபூமிசர்க்கரைதான்கூட்டி புகழானபூனையிடக் காலில்வித்தும் நீடியேதேத்தானின்வித்துங்கூட்டி நேர்ப்பானநிலைப் பனையின் கிழங்குங்கூட்டே. (௫௯௯)

கூட்டியேசீனியிடசர்க்கரைதானும் குணமான நெய்யுடனேகிரதஞ்செய்து,மாட்டியேநெல்லாவில்புளந்தானிட்டு மகிழ்ச்சிபெறமண்டலந்தான்கொண்டாயானால், நீட்டிவரும்மேகமென்றதிருபதுமபோம்நெடிதான பிறமேகம்தீரும்தீரும், வாட்டிவிடும்சகலரோகவியாதி தீரும் வகுப்பாகயிக்காவியம்தெளிவதாமே. (௬௱)

தெளிவானசிமுமோகரமுமாசித்து திறமானஸ்தம்பனமுச்சாடனமும்நசித்து, வளியானகிருஷ்ணமும்வேசனமும்நசித்து மாரணமும்பேதனமும்வகையுடனேநசித்து,பளியான ஜெகசாலமானதுவும் நசித்து பரிசனமாய்நின்றதொருஞ்ஞைசைநசித்து, வுளியாதபெண்ணுசையண்ணுசை நசித்துவொன்றுமனறு தன்மயமாமொடுங்குவதேனம்மா. (௬௱௧)

அடம்விடு வியாராலுமுடியாதப்பா அப்பனேநானுனக்கு அறைந்தவாறும், ஒடுங்கிநிரும்யமாகி பூரணத்தால்நின்றுபோங்குமுடித்தகவனமெல்லாமாற்றி, தடங்கலன்றிசித்திவெகுசுத்தமுடன்ருனுந் தன்மையுடன்மனதைத்தானறிந்ததாலே, திடங்கடுமயமாய் சின்மயபூரணமாய்சிவசிவாசெகமயமே சிவமயமாங்காணே. (௬௱௨)

காணவேகண்டதெல்லாஞ் சிவமயமென்றெண்ணுகடந்தேகிப் போனதெல்லாஞ்சிவமயமென்றெண்ணு, ஈணவேசூட்சாதிசூட்சமெல்லாம் என்மகனேபிராணயகளேயமாகும், பேணவேதன்னகமேசிவமயமென்றெண்ணு பிலமானவாசியதுசிவசிவமயமென்றெண்ணு, ஆணவேபீடமெல்லாம் சிவமயமென்றெண்ணு அப்பனேபிராணயகளே சுரூபமயமாமே. (௬௱௩)

ஆமப்பாசுரூபமயபூரணமென்றெண்ணியடர்ந்தெழுந்தத்துவத்தையறிவால்நீக்கி, தாமப்பாஓமென்றபிரவணத்தினலே தன்னுயிர்போலமன்னுயிரைதான்தானென்று, நாமப்பாசொல்லுகிறேம் நாதாந்தவிட்டில் நாடிமனங்கொண்டுவருநயனம்பாரு. சேரப்பாகொண்டு திருநயனம்பார்க்க சோமகிரிசூரியகிரிசுத்தமாச்சே. (௬௱௪)

ஆச்சப்பாசோமகிரியுச்சிமீதிலருன்பெருகுஞ் சூரியகிரிமூலமாச்சு, மூச்சப்பாபேசாதகாட்சிதன்னை பிரணவத்தின்கிருபையினல் சொல்லக்காகளுநீச்சப்பாநிலையறிந்துகாணப்போகா நிஜமானநிலையதுதானுந்திகாணே, காச்சப்பாமுப்பூவுக்சிடமேயாச்சுக் கண்காணுதோடுநிலையதிதங்காணே. (௬௱௫)

காணவேயுந்தியென்றகமலமீதில்கண்கொள்ளாகாட்சிவெருசூட்சங்காணும், தோணவேசூட்சநிலைதானேகண்டு துருவமென்றமேருவடாயடைந்ததன்னில், பூணவேயண்டபதங்கைக்குள்ளாகும், புருவ

மென்றசமாதியிலேபூண்டுக்கொண்டு,பூணவேமன துறுதியாகநின்று வுத்தகலை ரவிமதியுஞ்சோதியாச்சே. (௬௱௬)

சோதியென்றமுச்சுடருமொன்றாய்நின்று துலங்குதடா தன்ன கத்தில் ரன்றாய்ப்பாரு, நீதியுடநிலையறிந்துகொண்டதெல்லாஞ்சோ தியாச்சு, ஆதியென்றசோதியடா மனக்கண்ணாச்சு யறிவானரூபமடா ஆத்மாவாச்சு, ஓதியதோர்மந்திரகலையாதமாவாகி வுண்மையென்ற பூரணமாய்விளங்குந்தானே. (௬௱௭)

தானேதான்விளங்குமடாயறிவானந்தந் தண்மையுள்ளபூரணமா ய்தான்தானாகும், வீணேதான்திரியாதேயறிவைப்பற்று வேதாந்த சித்தாந்தம்ரெண்டுமொன்று, கோனேதான்தானவனாய்க் குறித்துப் பாரு குறியறிந்துபாராது நிலைகொண்டாயானால், ஊனேதானானந்த போதமாகு முண்மையென்றநிருவிகற்பமுறுதிபாரோ. (௬௱௮)

நிருவிகற்பம்ஆராதாரம்.

பாரப்பாநிருவிகற்பமார்தான்காண்பார் பத்தியுள்ளமாணாக்கள் சொல்லக்கேளு, காரப்பாசிவமிதென்றால்காரமாச்சு கருணைவளர் சிவமதுதான்விந்து, நேரப்பாவிந்துநிலையறிந்துகொள்ளு நிசமுனக் கில்லையடா நிஜத்வதக்கேளு, சாரப்பாசற்குருவினிடமேசென்று சங் கையுடன்றானவனாய்தன்னைப்பாரே. (௬௱௯)

பாரப்பாதன்னைமிகவறிவிற்கண்டு பாலகனேவிருந்துநடியமுர் தம்வாங்கி, நேரப்பாசற்குருவைதியானம்பண்ணி நிலையறிந்தகணப திக்குயபிஷேகித்தால், வீரப்பாகொண்டுநின்றயரிவைமைந்தா மெய் ஞ்ஞானபூரணமாயவிளங்கும்பாரு,காரப்பாயந்தநிலைசொர்கமென்று கருணையுட னந்திசந்திபூசைபண்ணே. (௬௱௰)

பண்ணப்பாயந்திசந்திபூசைபண்ணு பரமகயிலாசமென்றபதி யைநோக்கி, கண்ணப்பாதானறிந்து தன்னைபபார்த்தால் கசடானகர் மவினைகாணாதோடு, மெண்ணப்பாவென்றுதன்னை மறந்திடாதேபெ ட்டறிந்து திட்டமுடன்கட்டாய்நில்லு, முண்ணப்பாவிசையறிந்து பாய்ந்ததண்ணீர் முத்தியுடன்மணிகெவுனக்குளிகைபாரே.(௬௱௰௧)

பாரப்பாமானிடர்களேசெப்பக்கேளும் பரிவானவுலகமதிலபே யின்கூற்று, நேரானகூத்துதான்சிவன்செயலென்றெண்ணி நேர்மை யுடன்பூரணமாய்ப்புருவமேவி, தாரானயடிமுடியுமொன்றாய்க்கண்டு சுகசீவபிராணமயமாகிநின்றால், மாறாதவாழ்வுசிவயோகவாழ்வுவந்து தடா வினைதீருமனையைக்காரே. (௬௱௰௨)

மனதானமனதறிந்துமனதைக்காற்க மாற்கமுள்ளகற்பமொன்று வழுந்தக்கேளு, கனமானகற்பமடாயார்தான்காண்பார் கருணைவளர் யுகாரமடாசத்திசத்தி, குணமானயுகாரமென்றசத்திதன்னை குருவரு ளாலந்திசந்திபூசைபண்ணீ, சணமானஆங்காரத்திருக்கருத்து சின் மயங்கொண்டிடன்னாளுந்திறமாம்நில்லே. (௬௱௰௩)

திறமானசத்தியடாயுகாரசத்தி சிவசிவா மனம்நிறுத்தி பூசை
செய்தாலுறமானதேகமதுக்குறுதிமெத்த யுத்தகலைக்கியானமடாசித்
தியாகுந், திறமானயண்டபதங்கைக்குள்ளாகுந் திருவானபூரணமுஞ்
சித்தியாகும், பற்பமானபராபரமும்தான்தானாகும் பதிவானமூலத்
தில்பலந்தான்பாரே. (சாயச)

பாரப்பாபதியறிந்துகுருவைக்கண்டு பத்தியுடன்சத்திசிவபூசை
பண்ணி, காரப்பாகருணைவிழிமலர்க்கண்ணாலே கமலமென்ற குரு
நடுககண்ணைப்பற்றி,நேரப்சாநின்றதினால்மைந்தா நிஜமானசிவரூபங்
கண்ணிற்காணுந், தேரப்பாசிவரூபங் கண்ணிற்காணார் தெளிந்தும
னங் கொண்டதினாலாதிபாரே. (சாயரு)

திருவுளச்சிவன்செயல்அனுதசிட்சை.

ஆதியென்றநாதமடா சோதிசோதி யறையறிந்துபூரணமாய்ப்
பூசைசெய்தால், சோதியென்றஞானமதுயிதுதானச்சு சுகமாகசிவ
யோகமிதுதானச்சு, நீதியென்றபிரணயமிதுதானச்சு நிஜமான வாசி
யதுயிதுதானச்சு யோதியதோர்மந்திரமுமிதுதானச்சு வுண்மையெ
ன்றபூசைவிதியிதுதானச்சே. (சாயசு)

ஆச்சப்பாகெவுனசமிதுதானச்சு ஆதியெனறகற்பமது யிதுதா
னச்சு நீச்சப்பாவுபதேசமிதுதானச்சு நிஜமானசத்திசிவமிதுதானச்
சு, பேச்சப்பாபேசுகதுமிதுதானச்சு பேசாதமவுனசமிதுதானச்சு
காச்சப்பாதெரிசனமுமிதுதானச்சு கருணைவளர்வாலையுடகருத்தைக்
கேளே. (சாயஎ)

மனமறியகற்பநிலைசூட்சம்.

கருத்தறிந்துகருணையுடன் கருவைக்கொண்டால் கால்சத்தி
மேல்சத்திகாணுதோடுந், திருத்தமுடன்பூரணமும்மேலநின்றுடுந் திரு
வானவாலையுடசெயல்தன்னாலே, மருத்தமென்றமாய்கையெல்லாம
மாண்டுபோகும் மங்கையுடன்கெங்கையதுவலுமைமெத்த, நிருத்தி
யந்தமாதாரபூசைபண்ணி நேர்மையுள்ளமாதவாய்மகவாயெண்ணே.

காயாதிகற்ப சமாதிச்சூட்சம்.

என்மக்கள்மானிடரேகற்பசூட்சமையா யின்பாஷந்தான் கொ
டுத்தமாதர்தன்னை, தன்மையுடன்மோகமதாய் சஞ்சாரஞ்செய்தால்
தானினைந்தகாரியங்கள் தவறுண்டேபோம், வுண்மையென்றமந்திரங்
களுந்தவாதையாயுடலதிலேசெந்தீயுமுடனேபற்றும், வண்மையென்
றகூத்துவனுமுயினாயுண்பான் மாற்கமுடன்மனதறிந்துமனத்தைக்
காரே. (சாயசு)

காரப்பாமனதறிந்துமனதைக்கார்த்து கருணைதருஞானசத்தி
வாலைபூசை,நேரப்பாநேர்மையுடன்பூசைசெய்தால் நினைத்தபடிமுடி
க்கும்வகைக்குள்ளாகுஞ், சாரப்பாசகல கலைக்கியானந்தோன்றுஞ்

சதாயோகமான்சிவயோகந்தானுந், தேரப்பாசிவயோகத் திறத்தால் மைந்தா சிவசிவாபூரணத்தின்செயலைக்காணே. (சஉய)

## பூரணமெழுகு ரவிசூட்சம்.

செயலானசெயலறிந்துசெயலைக்காண திறமானதிறகமொன்று செப்பக்கேளு,மயலானமயக்கருத்திமவுனங்கொண்டு மகத்தானகேசரியாமண்டத்தேறி கயமானபூரணமாஞ்சோதித்தாயே சுத்தமுடன் தான்வணங்கித்தொழுதுபோற்றி, நயமாகவஸ்துவைசெய்துக்கொண்டு நாதாந்தபூரணத்தைநயமாய்வாங்கே. (சஉக)

வாங்கியந்வபூரணத்தைமைந்தாநீயும் வணக்கமுடன்பீங்கானில் வைத்துப்போற்றி, பாங்குபெற்றரவிபிசஞ்சரியாய்ச்சேர்த்து பதமாக மதித்துரவியில்வைத்து, சாங்கமாய்காய்ந்தபின்பு யெடுத்துப்பாரு சதாசிவத்தின்செயலதினால்மெழுகாய்ப்போகும், பூங்கமலயமுர்தரச மெழுகைவாங்கிபுத்தியுடன்சத்திசிவவாலைசேரே. (சஉஉ)

சேரப்பாயஞ்சையுமொன்றாகச்சேர்த்து திறமாகமத்தித்து ரவியிற்போட்டு, சேரப்பாயின்னமொருகருமானங்கேள் சத்தியுடன்புனுகுடனேவீரம்பூரம், காரப்பாகருவறிந்துசேர்த்துக்கொண்டு கலய மதிற்குன்றிறந்துதயிலம்வாங்கி,நேரப்பாமுன்சொன்னயஞ்சும்போடு நிஜமான தயிலத்தைவிட்டுக்கிண்டே. (சஉங)

கிண்டிமிகத்தானெடுத்துரவியிற்போட்டு சிருபையுடன் பீங்கானில்தானுஞ்சேர்த்து, அண்டகேசரியாதுதன்னைப் போற்றியாக்கை நிலைதனையறிந்துசந்தி, குண்டுமெணியளவெடுத்துக் கொண்டாயானால் குருலமென்றதீவினைகள்காணுதோடு, மெண்டினசயிங் கீர்த்திபெறு வாளையாயின் பாஷாக்காயாதிகற்பந்தானே. (சஉச)

## அமுர்தரசபாதங்கொள்ள அனுதரட்சை.

தானென்றமவுனசத்திபானமாது தனையறிந்தகாலமதில் தானேதானுய், தேனென்றதப்பியாசபானங்கொள்ள சிவந்தமலர்குவித்து பூமலர்ந்தகால, மூனென்றயமுதர்தரச மெழுக்குங்கன்னியுகந்துமனம் கொண்டுவாயேகமாகி, கோனென்றகுருவருளாலுருஞ்சிவாங்கி குவிந்தமலாகணிந்தமணிசுவைந்துவாங்கே. (சஉரு)

வாங்கியறுசபையறியமதுரங்கொண்டு மனங்களியமாவடியில் மனக்கண்சாற்றி, பாங்குபெறமொக்கடிலப்பதிவாய்நின்றூர் பரிவானசிவயோகப் பலத்தினலே, தாங்கிநின்றமும்மூர்த்தியாருதாரம்தான் காணப் புவனமெல்லாந்தானேதானுய், யேங்கியதோர்வாதியுடபலத்தினலே யுள்ளறமனைபலத்துறிபாரே. (சஉகூ)

உறுதியுள்ளபஞ்சகணபஞ்சகமலமுண்மையுள்ள திரிகோணயந்தரத்காலே, பருதிமதிசடரொளியாபண்டஞ்சூழ்ந்து பரும்பணி

யாந் திசைநாதவாசியாலே, சுருதிதிருவாசியம்மாவாசியாலே சுகசிவ பிராணகலை சோதியாகி, சரிதையொடுகிரிகைசிவ யோகமாகிசகலக லைக்கியானமென்ற ஞானமாமே. (௬௨௭)

கலைக்ஞானம்.

ஞானமென்றஞானமடா மவுனஞானம் நாதாந்தபோதமென்ற ஞானந்தன்னை,மோனமென்றமனதடங்கிஞானப்பாலை முத்திபருகலை யறிந்துயூதிவாங்க, ப்ானமென்றபானமடாமதுரபானம் பரஞானபூர ணமாய்நின்றுபாயுந், தானமென்றதலமறிந்துவாயுவாலுஞ் சங்கையு டன்வாசிகொண்டு வாய்ால்வாங்கே. (௬௨௮)

வாங்கியிருகலையறிந்துமவுனமாகமவுனமென்றமாங்கனியைகனி வாயுண்ண, யேங்கியேயொருசபைதாண்டப்பிலனுண்டாகும்பொடு ங்கிமனக்கால்கெதியையூணிப்பாரு, தாங்கிநின்றதேகம்து வலுத்துக் காணுந் தன்ருதுவாசியதுதங்கம்போல, மாங்கனித்தானுண்டபெ லன் கெதியுண்டாச்சு மகத்தானசூட்சமென்றகுட்சம்பாரே. (௬௨௯)

சூட்சமென்ற சூட்சியுடகாலைப்பாரு குதானமானகெதியிருகா லய்யா காட்சியிவன்சூட்சாதிகாலைக்காண கண்காட்சியானகால்தன் னைப்பாச்சு, சாட்சியென்றஜெகசாட்சியமுர்தமுண்ண தானிருந்த கண்காட்சி தானாய்நின்று பேட்சியென்றசூட்சமடாபின்னேதுமில்லை பிலமானயனுபோகியானல்பாரே. (௬௩௰)

பாரடாயிவளாட்டுக்காலேபாதம் பற்றிகொண்டுகண்டுபிடி வா தஞ்சிற்தி, ஊரடாயுப்பாலுமப்பிறைலு முள்ளபடிகண்டுபிடி வாதத் தாயே,காரடாமுப்பூவால்கண்டவித்தை கைபறிந்தால்ரசவாதங்கொ ள்ளையாச்சு, நாரடாநாரிமனமார்தான்காண்பார் நயப்பதங்கண்டவர் கள்யேழைதானே. (௬௩௧)

ஏழையென்றேன் யான்வலுத்தென் யென்னைப்போலேயேகநிரு மயமான சோதிப்பாலை, காழையிலேகருவறிந்துகொண்டேருனே கண்டபடிகண்டவற்குதொண்டுசெய்வான், வேளையிலேகதலிதுலைசா ய்ந்தமாற்கம் வகைபாருதுகைபாருமனதைக்கற்ருர், தாளையிலேமலர் பூர்த்துக் கனியுண்டாச்சு சதாயோகயோகமதாய்க் காணுவாயே. ()

காணுதற்குயென்னசெல்வேன் விதிதான்வேண்டுங் கண்டவர் கள்விண்டோதுண்டோகனியின்மாற்கம், பூணுதற்குமனம்பூண்டுகா லைப்பாற்க புலம்பிமனம்நிலையாதேமூலமாற்கந், தோணுதற்குமும்மூ லங்கண்டுபோகுஞ் சுகமானசக்கரத்தையறிந்துகொள்வாய்ப், பேணு தற்குயோகவெளிசூட்சாசூட்சம்பொருந்துநீகொள்வதற்குதொட்டுக் காட்டே, (௬௩௩)

தொட்டுமிக்காட்டுவதுயந்தரத்தோடுகுறிபோலகாட்டுவதுசூட் சாசூட்சம், கட்டுவதுயங்கேபடா விருதாற்கொண்டு காரணந்த

ரொட்டவிடங்கருணையாகு, மெட்டுரெண்டுங்கூட்டியல்லோ திரவு கோலா லிதையறிந்துபூரணத்தாலறிந்துபாற்க, கிட்டுமடாபூரணத் தின்வட்டம்பாரு கேசரத்தின்கேசரியாற்கிருபைபாரே. (சஙச)

சர்வஞானமுக்கோணமந்திரவாள்தியானபூசை.

பாரடாபரஞ்சோதி முக்கோணத்தில் பற்றிக்கொண்டு யின்ன மொருகருவைக்கேளு, காரடாகனிந்துமனக்கனிவாய்நீயும் காலறிந் துவாசியினல்கருவைப்பற்றி, நேரடாநிலையறிந்துபானங்கொள்ளு நிச மானயறுசமயம்நிலத்தைப்பாரு, மேரடாயடிமுடியுங்கணேசன்சத்தி மெய்ஞ்ஞானபூரணத்தின்கெதியைப்பாரே. (சஙரு)

கெதியானகேசரமேமணியின்சோதி கிணேசனடிமூலமடாஆதி யந்த மதியானமய்யமடாருத்திரமூல மகத்தானவாசியடாஸ்ரீமறீங்கெ ன்று, விதியானயெழுத்தறிந்துவோதுதற்கு விவம்பரிதுவோங்கார விஞ்சைமூலம், பதியானபதியறிந்துமந்திரவாலே பத்திமனங்கொண் டபடியின்னங்கேளே. (சஙசு)

கேளப்பாமந்திரவாள் தனக்குமந்திரங் கேசரத்தின்பூரணவே ரங்காரமாவாள், வாளப்பாயதையறிந்துதியானம்பண்ண அடிமறந்து செய்யாதேயறிதைப்பற்றி, நாரப்பாமுப்பெலியுமங்கேவாங்கும் நாற் பத்திமுக்கோணநாதத்தாட்டு, வாளப்பரவாழ்வதற்கு மவுனத்தாயே மனதுருகப்பூரணமாய்மதிகண்ணெண்ணே. (சஙஎ)

கண்ணனகமலதிரிசூலிவாமி காரணமேபூரணமேகமலத்தாயே, விண்ணனசபைதனிலேநடனமாடி வேதாந்தப்பேரொளியாம்நின்ற தாயே, முண்ணனகண்மணியேரூபாரூபி முதலானபூரணமேயருமை க்கண்ணே, வுண்ணனபூரணமாயெங்நாளுந்தா னோமென்றமூலமந்தி ரசத்திமாதே. (சஙஅ)

சத்தியமாய்நின்றசிவ சத்திமாதே சமர்முனையில்வெற்றிதரும் நாதத்தாயேவெற்றியுள்ளபூரணத்தின்வேதரூபி வேதாந்தகோத்திர மாய்விளங்குந்தாயே, முத்தியுள்ளமோனமந்திரவிபோக மோனமு டன்தியானமதாப்பூசைசெய்ய, பத்தியுள்ளமந்திரவாள்கையிலீய்ந்து பதிவானவரங்கொடுப்பாள்கெதியைப்பாரே. (சஙக)

பார்முழுதுமொருகுடைக்கீழ் பரிவாயானபகர்ந்தொல்லேமறவா தேதியானம்பாரு, சீர்பெறவேபூசைசெய்யில்கும்பமெட்டுந் தீர்கமு ள்ளகும்பமடாவோம்பிரதானம், நேர்பெறவேகும்பநவகும்பம்வைத் து நேமமுடநவக்கிரகந்தனக்குமைந்தா, பேர்பெறவேகாகமது கபிலே மைந்தா பிலமானயட்சதையும் படிதானென்றே. (சசம)

படியாகஅட்சதையும்பரப்பிமைந்தா பித்தியுடன்பிரணவத்தை பதிவாய்காட்டி,முடிவானசத்திநடுமையந்திற்கு மோனமுள்ளயட்சத் தையும்படிதானெட்டு, மடியானகரமதிலேசத்திகும்ப மாதியென்ற

பிரணவத்தையன்பாய்சாத்தி, வடிவாகயெனையாள் வாவாயென்று மாற்கமுடன்ருனிருந்துசொல்லக்கேளே. (சசக)

கேளப்பாபிரணவமேல்முக்கோணமிட்டு கிருபைவிள்ளகோண மதில்விந்துபோட்டு, வாளப்பாசொல்லுகிறேன் கும்பமெல்லாம் வ கையுடனே நூலணிந்துகெங்கைவிட்டு, ஆளப்பாமாங்குலேபம் தேங் காய்சாத்தியன்பாகசவாதணிந்துஆடைசாத்தி, சூளப்பாசுகந்தபரிம ளங்கள்சாத்தி சுத்தமுடனியிருந்துபூசைபண்ணே. (சசஉ)

பண்ணப்பாசரீரத்தில்பஞ்சபூதம் பரமனுடனுட்டுகிறதாளத் துள்ளே கண்ணப்பாமண்டலத்தில்வர்னமூர்த்தி கனமாகததானிருக் கப் பிருணதானை, வண்ணப்பாபதிவானமூலத்துள்ளே வணக்கமு டன்பிருணனேத்தான்தரிக்கப்பண்ணி, அண்ணப்பாசிரமத்தோடுண் ணப்பண்ணு மப்பனேராப்பகலாய்காணுங்காணே. (சசந)

காணப்பாகுருவசனந்தெளிந்துகொண்டு கலந்துநின்றமாய்கை யொடு மாயாலம்பம், பேணப்பாசைதன்னியமிந்தமூன்றும் பிலமான ஆகாசம்போலேபாரு, தோணப்பாமறைந்திருக்க கண்டாலுந்தான் துகன்றுத்ததீர்க்கமுடன்முத்தியாக, பேணப்பாயறிவுடனே யென் னேரந்தான் பிலமாகநிற்கிறதோர் நிறந்தான்பாரே. (சசச)

தாரணைப்பிரமதியானம்.

பாரப்பாவுலகமதில்பிரமநாமமென்று பரிவாகநிச்சயித்து மனது பூண்டு, நேரப்பாயறிவல்லோ தாரணையுமாக நிலேயானதியானமதில் நேர்மைகேளு, காரப்பாயகிலமெல்லாம்போதமாக கண்கண்டசட மெல்லாமகண்டமாகி, நேரப்பாவெளியெல்லாம் நிர்மலமாய்க்காண நேர்மையுள்ளதியானமதுநினைவாய்க்காணே. (சசரு)

அமரபட்சபூர்வத்தியானம்.

காணவேஅமரபட்சபூர்வபட்சந்தன்னில் கலந்துநின்றஆசனத் தில்கருணைவைத்து, பூணவேகுண்டலமுங்கிரீடம்சாத்தி புகழான சரஸ்பதியும்வாமபாகம், பேணவேபரிவாரம்நிறுத்துநிற்க பெருமை யுடனிருதயத்தில் தியானம்பண்ணி, தோணவேமானதமாம் பூசை செய்தால் சுத்தமுள்ளதியானமடாமாய்கைபாரே. (சசசா)

பிரமாதியானம்-மாலுடையதியானம்.

பாரப்பாமாலுடையதியானங்கேளு பத்தியுடன்பச்சைவானரு பமாக நேரப்பாசங்கொடுசக்கரமுமாக நிசமானபாபமொடுகரங்கள் சாற்றி, காரப்பாகுண்டலமுங்கிரீடம்வைத்து கண்ணறிந்துமுத்தி ரையுந்துளசிமாலே சேரப்பாலட்சுமியும்வாமபாகம் தீர்க்கமுடன்தி யானிக்கதியானமாச்சே. (சசஎ)

ருத்திரதியானம்.

ஆச்சப்பாருத்திரனே தியானம்பண்ண அரகாயநெழுத்து மாயுசங்களோடு, காச்சப்பாகுண்டலமுங்கிரீடம்வைத்து கருணை

யுள்ளருத்திரியும்வாமபாகம்,பேச்சப்பா தானிருத்திமவுனமாக பெரு மையுடனிருதயத்தில் பேணிப்பார்க்க, மூச்சப்பாயடங்கிநின்றதியா னமாச்சு முத்தியுடன்றன்னறிவாலிருப்துபாரே. (சசஅ)

மயேஸ்வரிதியானம்.

இருந்துகொண்டுமகேஸ்வரனைத்தியானம்பண்ண யிருள்கண்ட வெளிமீபாலேயின்பங்கொண்டு, வருந்திநின்றகுண்டலமுங் கிரீடஞ் சாத்தி மகத்தானமயேஸ்வரியைவாமம்வைத்து, சொரிந்தமூர்த்தம்பூர ணமாய்பேதங்கொண்டு சுகசீவபிரூணகலேசுத்தமாக, அருந்தவமாயி ருதயத்தில்நினைக்கமைந்தா யரிசுரணமகேஸ்வரின்றியானங்காணே.

சதாசிவதியானம்.

காணவேசதாசிவனார்தியானங்கேளு கருணையுடன்பஞ்சவர்ன ரூபமாக,தோணவேமனோன்மணியும்வாமபாகம் சுகமாகதேவகணஞ் சூழ்ந்துநிற்க, பேணவேயிருதயமாய்கமலந்தன்னிற் பிரியமுடனரு ளிருந்துதியானித்தாகசால், பூணவேநினைத்தவண்ணங் கணணிற்கா ணும் புனிதருள்ளதியானமதைபூண்டுபாரே. (சருய)

பாரடாயிப்படியேஆறுவகைதியானம் பரிவானமண்டலத்தில் மூன்றுவகைதியானம், நேரப்பாதானிருந்துவுபாசிப்பார்கள் நேர்மை யுள்ளதேவாதிதியானமாச்சி, வேரப்பாவிஷயமென்றதியானஞ்சொல் வேன் விளங்கிநின்றபிரபஞ்சந்தான்தானென்றுங்,காரப்பாயண்டவெ ளிரூபமாகக்கருணைபெறத் தானிருக்கதியானமாச்சே. (சருக)

அத்தோர்யதியானம்.

ஆச்சப்பர்அத்தோர்யதியானங்கேளு அண்டரண்டபுவனமெல் லாதோமென்றெண்ணி, நீச்சப்பாசகலவுயிர்தாமென்றெண்ணி நிச மாலபரவெளிதான்தாமென்றெண்ணி, மூச்சப்பாபஞ்சகர்த்தாள்தா மென்றெண்ணி முனையானமயேஸ்வரியைத்தியானித்தேதான், பேச் சப்பாபேசாத மவுனந்தானாய் பேரண்டசுயப்பொருளாய் தியானஞ் செய்யே. (சருஉ)

செய்யப்பாதியான்மதுபத்துஞ்சொன்னேன் சிவசிவாசமாதியஞ் சுசெப்யக்கேளு, மெய்யப்பாதத்துவலயசமாதிமைந்தா விளங்கிநின்ற தத்துவத்தைநன்றுய்ப்பார்த்து, பொய்யப்பாவென்றறிந்து புருவமே வி பூர்ணமாய்கற்பூரதியானம்பார்த்து, மையப்பாமையமதில் நின்று யானல் மகத்தானதத்துவலய சமிதியாச்சே. (சருங)

ஆச்சப்பாதத்துவலயசமாதிசொன்னேன் அரகாரசவ்விகற்பச் சமாதிகேளு, நீச்சப் ாநிலையறிந்துவாசியாலே நிறைந்தபரிபூரண மாய் தீபம்பார்த்து, காச்சப்பாகருவிகாணுதியென்றகட்டரிது வெளி யாய்கண்டுகொண்டால், போச்சப்பாசவ்விகற்பசமாதியாச்சு பிலமா னநிருவிகற்பச்சமாதிகேளோ. (சருச)

## தன்னையறியசத்திசிவம்.

கேள்டாநிருவிகற்பச்சமாதிதன்னைக் கிருபையுள்ளமானிடரே சொல்லக்கேளு, வாழடாதன்னறிவேசாட்சியாக மத்தானயண்டமெல்லாம்தான்தானாக, காலடாசகலவஸ்த்தும்பேதமாகக் கண்டதுவும் கேட்டதுவுமாயமாக, ஆளடாஆனந்தங்கொண்டாயானால் அக்கருநிருவிகற்பமதுதான்காணே. (௪௫௫)

காணநிருவிகற்பசமாதிசொன்னேன் கருவானயுள்ளசஞ்சாரமாதிகேளு, தோணவேஅண்டசராசரங்களெல்லாஞ் சுகமாகவேறெல்லாம் நாமென்றெண்ணி, பேணவேதானிருந்து கிரகம்சூட்சம் பிரியமுடன்கண்டறிந்துவாசல்பூட்டி, பூணவேநடக்கும்போ திருக்கும்போது ஒடுக்கமுட்ன்மவுனமதாயுலாவுவாயே. (௪௫௬)

வாயானமேல்வாசல்பூட்டும்போது மகத்தானதிட்டியெட்டுமொடுக்கமாச்சு, மாயாதவுடுக்கமதிலொடுங்கியந்த மகத்தானயனுக்கிரகவலஞ்சென்றேறி, தாயானதிரேகமதேபோதமாக நானிருக்கசஞ்சாரமாதியாச்சு, தோயாதேசஞ்சாரமாதிகொண்டு சுகமாகஆரூடசமாதிகாணே. (௪௫௭)

காணவேஆரூடசமாதிதன்னை காரணிதுநந்திபதம்சொல்லக்கேளு, பூணவேதத்துவல்யசமாதிபெற்று புகழாகநிட்டையுடன்செய்யவேணும் பேணவேநிருவிகற்பசமாதிபெற்று பிலமாகசஞ்சாரசமாதியாகி, தோணவேஆரூடசமாதிகொண்டால் சுத்தமென்னஅசுத்தமென்னரெண்டுமொன்றே. (௪௫௮)

ஒன்றானஆரூடசமாதிகேளு வுண்மையுள்ளநந்திபதம்அருமையாக, கண்டதொருகாட்சியெல்லாம்மனித்தியமென்று கால்வைத்து அடிநடுவேமுடிமேலாக, விண்டதொருபஞ்சறிவையறிவால்நீக்கி வேதாந்தபரமவெளிதன்னிலேடே, நின்றுடிகொண்டுசிவ ஜோதியாகி நின்றதினலாரூடசமாதியாச்சே. (௪௫௯)

ஆக்சப்பாசமாதியஞ்சு நன்றாய்ச்சொன்னேன் ஆதிதொடுத்தந்தமவரைநன்றாய்ப்பாரு, பேச்சப்பாஅடிமுடியும் பிலத்துக்காணும் பெருகின்றஆஸ்டாங்கமதிட்டம்பாரு, மூச்சப்பாமுன்னிலையாய்நிறுத்திக்கொண்டு முத்தியுள்ளநவக்கிரகசூக்ஷங்கண்டு, பாச்சப்பாஅனுக்கிரகப்பதியில்நின்று பாதாதிகேசமுதல்தன்னைப்பாரே. (௪௬௰)

தன்னைத்தான்தானறிந்துபார்க்கும்போது தத்துவமாய் நின்றதொருதொண்ணூற்றாறு, மெண்ணத்தான்துலையாதஆசாபாசமென்னசொல்வேன் பஞ்சகர்த்தாபஞ்சபூதங், கண்ணைத்தான்தானறிந்த கண்ணிற்கண்ணுங் கலையானரவிமதியுஞ்சுடர்கள்மூன்று, முண்ணத்தானறிந்து மனதுண்ணிப்பார்க்க வுண்மையென்றநிக்ஷயத்தை வுணர்க்கொண்ணுதே. (௪௬௧)

ஒண்ணானநிச்சயத்தைகவுனாக்கவொன்றா லுண்ணுக்குமண்ணுக்குமொன்றுங்காணேன், கண்ணானபேரொளியையென்னசொல்வேன் கறுப்பல்லவெளுப்பல்லசிவப்புமல்ல, விண்ணானநீலமல்லபச்சையல்ல விளம்புதற்கு யறிதானஅண்டத்துள்ளே, பண்ணானபாழ்வீட்டு யிருளுக்குள்ளே பாய்ந்துநின்றுபார்க்கவெல்லாமிருளாய்ப்பேச்சே

இருளானயிருளினுட ஒளியைப்பார்க்க யென்னசொல்வேன் அதினுடையயின்பந்தன்னை, மருளானமனம்நிறுத்தி மனக்கண்கொண்டு மாசற்றயிருளொளியைமகிழ்ந்தோர்தானா, மருளானபேருலகிற்றானேதானாய் மந்தவெளிதன்னையறிந்துஒளியைப்பற்றி, வெருளானயிருள்நீக்கிமளிருநின்று விளங்குமருள்பொருளெனமேவுவாய். ()

மேவுகின்றவாதியந்தமுதிக்குமுன்னே மெய்ஞ்சானயிருளதிலே அருளுண்டாச்சு, தாவுகின்றயருளதிலே வொளியுண்டாச்சு தன்னொளிவுந்தானதிலே வொளியுண்டாச்சு, கூவுகின்றபரவொளியில் சதாசிவன்தான் கூற்மையுடன்பேரண்டம்படைத்துநின்றார், பாவுகின்றமயேஸ்வரனார்சத்தத்தோடே பதிவாகவாய்வதனைபடைத்தார்பாரே.

பாரப்பாருத்திரனார்தவித்தாலந்த பக்குவமாயக்கினியை படைத்துநின்றார், நேரப்பாதிருமால்தன்கிருபையாலே நிச்சயமாய்ஜெலமதனையடைந்துநின்றார், பேரப்பாபெற்றதொரு பிரமாவுநதன் பெருக்கவேபூமிதனைபடைத்துநின்றார், காரப்பாமுன்சொன்ன சத்திசிவம்ரண்டுங் கருணையுடரவிமதியுமானார்தானே. (௪௬௫)

தானேதானாகிநின்ற யேழுலகந்தானுந் தனித்துநின்றபராபரமாஞ் சுழியினுள்ளே, வானேதான்கெதியெனவே சகலசித்தும் வருந்திவினையாடிமிக வானாட்டி, ஆனேதான்தானெனவேமுப்பாலுக்கப்பா லொடுங்கிநின்றபானவீட்டுக்குள்ளேசென்று, நானேதான்நீயெனவேயந்தகாரம் நலமாயிருளருளில்நாட்டம்பாரே. (௪௬௬)

பாரப்பாயிருளொளியும் வெளிமூன்றய்யா பரிவானதேகமதிற்கணக்குகொள்ளு, சாரப்பாயிம்மூன்றுநிலையைச்சொல்வேன் சீரமென்றசத்தியடா யிருள்தானப்பா, நேரப்பாஒளிவானயறிவின்கண்ணு நிஜமானவெளியதுதான்மாயாமாயங், காரப்பாமாய்கைவெளிகண்ணேசூட்சங் கருவானகண்மறைந்தாவிருள்தான்காணே. (௪௬௭)

காணப்பாயிருளதனால்வொளிதான்தோன்றுங் கருவானவெளியதனால்வெளிதான்தோன்றும் பேணப்பாவெளியொளியு மெதினாலாச்சு பெருகிநின்றயிருளதிலேவுண்டாச்சப்பா, வூணப்பாதானொடுங்கும்வகையேதென்றா லுத்தமனேவெளியதுவும் ஒளியில்சேரும் பூணப்பாஒளியதுவு மிருளில்சேரும் புத்தியுடன்கண்டறிவாய் தன்னுள்தானே. (௪௬௮)

தன்னுள்ளேதானறிந்துதன்னைப்பார்க்க தனதான மண்டலங்கள் மூன்றினுள்ளே, விண்ணுள்ளமுச்சுடரைக்கண்டுமந்த வேதாந்தமுச்

சுடரினொளியைப்பார்க்கில், கண்ணுள்ளேவெளிதனிலே கண்ணைக் கண்டேன் கருணையென்றவொளிதனிலுந்தன்னைக்கண்டே, னுள்ளத் தினிருள்தனிலே நின்றுபார்க்கில் யேகநிருபயமானயருள்தானுச்சே.

ஆச்சப்பாயருள்நிறைந்தபுருதமையம் யண்டபகிரண்டமென்ற ஆதிவீடு, பேச்சப்பாபெருகிநின்றஆதிவீட்டில் பிலமானபஞ்சகர்த் தாள் பஞ்சமூர்த்தி, மூச்சப்பாநிறைந்ததொருசுடர்கள்மூன்று முனை யானசுழிமுனைதான்மோட்சமென்று, பேச்சப்பாஅந்திடமேசொந்த மாகி புத்தியுடனந்திடத்தேபூஜைபண்ணே. (௬௭௰)

பண்ணப்பாபூசைவிதிகண்ணேசூட்சம் பாலகனேசூட்சமென்ற சுடரில்நின்று, நண்ணப்பாஆதாரமூலபீட நாதாந்தமூலமடாநந்தி வீடு, முண்ணப்பாவிண்ணுனந்திவீட்டில் மோட்சமென்றயட்சரத் தைசொல்லக்கேளு, விண்ணப்பாநிறைந்த திருநயனமேவி மேன்மை போலுரீங்ரீங்கென்றுேதே. (௬௭௧)

ஓதுவதுபுருவநடுசுளியில்நின்றுவுத்தமனேநாத்தெட்டுவுறுவே செய்தால்,மதுவயதோர்பூசைதானு மாறகமுடன்சுத்தமதாய்சித்தியா ச்சு, கோதுவதுமூதில்லாஆருதாரம் குருவுமானமூலமடாநந்திபதங் காணலாகும், நீதியுள்ளவாதாரமீருருக்குள் நிரஞ்சனமாய்நின்ற பூர ணந்தான்பாரே. (௬௭௨)

பாரப்பாபூரணமாம்ஜோதிவாலை பற்றிக்கொண்டுஆதாரபீடமா னல், நேரப்பாஆதாரபீடமீதில் நிரஞ்சனமாய்நின்றதொருவாலைதன் னை, காரப்பாகருணைஒளிக்கண்ணுல்மேவி கமலாஞ்சிமுர்தமதைக் களித்துக்கொண்டால் நேரப்பாபெற்றதொருவாலைப்பெண்தான் பெ ருகிநின்றசோதியடா கண்கொள்ளாதே. (௬௭௩)

## நேத்திரதியானம்.

கண்ணுனகண்மூடிவிழியைத்தானே கருணைவளர்சுழிகையிலே கருத்தைவைத்து, விண்ணுனநேத்திரத்தைவிரலாலாட்டி விளங்கி நின்றரவிபோலேகாந்திவீசும், மொண்ணுனகாந்திப்பிரகாசங்கண்டா லுத்தமனேயப்பிறிதிவி லூட்டிப்போச்சு, முன்னுனசோதியிலேமன க்கண்சாற்றி முத்தியுடன்சுத்தமதாம் தன்னைப்பாரே. (௬௭௪)

· பாரப்பாசிவயோகவாலைப்பெண்தான் பறிநின்றதிசைநாதந்தா னேகொண்டால், காலப்பாவாலையவளிருக்கும்வீடு கருணைவளர்கே சரியாங்கமலந்தன்னில், நேரப்பாசுழிமுனையாம்புருவமீதில் நின்றி லங்குங்கற்பூரதீபந்தானுய், சேரப்பாயத்தீபச்சுடரிலேதான் தெளிந் துகொண்டு சிவஞானிசிவத்தைத்தேடே. (௬௭௫)

தேடப்பாகண்மூடி விழியைத்தானும் திருவானசுழிமுனையிற கருத்தைவைத்து, நாடப்பாநேத்திரத்தை சூடிப்பாரு நாடாந்தகட வியைவிரலாலாட்டி, கூடப்பாபிறையையொளி யென்னசொல்வேன்

கோடானகோடிரவி பிறைவீசுஞ், சூடப்பாயப்பிறப்பைத் தானே கண்டால் சுகமானசிவரூபந்தான்தானுச்சே. (௱௭௰௬)

ஆச்சப்பாசீவகளேயிதுதானய்யா ஆதியந்தமானதுவுமிதுதானய்யா, பேச்சப்பாபேசாதமவுனமைய்யா பெருகிநின்றசாயுட்சியபதவி அய்யா, மூச்சப்பாநிறைந்ததிருவாசியாலே முத்திபெறநவக்கிரகசூட்சம்பார்த்து, காச்சப்பாயக்கினிகொண்டாறுதாரங் கருவானவெளி பூசைகண்கண்டேனே. (௱௭௰௭)

கண்டசிவரூபமிதுதானய்யா கருணைவளர்சாயுட்சியபதிமிதய்யா விண்கண்டவெளிபூசைச்சரிதைமாற்கம் வேதாந்தசுழிமுனையில்மேவிப்பாரு முன்கண்டகாட்சியெல்லாம் மங்கைகண்டேன் முத்தியுள்ள பிறப்புமங்கேகண்டேன், கண்கண்டஓங்காரவட்டந்தன்னில் காணுதடாயெட்டுரெண்டுங் கருவாய்க்காணே. (௱௭௰௮)

சத்திபூசை.

காணப்பாமானிடரே யுமக்காய்ச்சொன்னேன் கருவானயெட்டுரெண்டும் நாதவிந்து, பேணப்பா நாதவிந்து சத்திசிவமாச்சு பொழிகிநின்றசத்திவந் தான்தானென்று, பூணப்பாயறிவதினல் மனமே பூண்டு புத்தியுடன்சத்திசிவ பூசைகேளு, தோணப்பாதனையறிந்து பூசைசெய்ய சொல்லுகிறேன்கருமான சூட்சந்தானே. (௱௭௰௯)

தானனசூட்சமதுயென்னவென்றால் தண்மையுடன்போம்வாய்வுசிவமதாகு, மூனையுட்புகுதல் சத்திசிவமாகு முண்மையுடனிதுவறிந்துதன்னைப்பார்த்து, கோனுன்குருபீடபுருவமத்தி குருவாகஅனுக்கிரகசுழியமீதில், வானனகேசரகமதானேதானும் மனங்குவிந்து பூசைசெய்யும்வகையைக்கேளே. (௱௮௰)

வகையானபூரகந்தான்வங்கென்றாது மகத்தானகும்பகந்தா நங்கத்தேனில், துகையானரேசகந்தான்சிங்கென்றெய்யா சுத்தமுடன் யோகசாதனையைக்கேளு, கையாதபூரகந்தானுவவங்கென் றுபத்தியுடன்றுநிருக்க மாத்திரைசெண்டாச்சு, கையாதனுலுதிர நவங்கென்றுக்கால் நன்மையுள்ளமாத்திரைநாலுமாச்சே. (௱௮௰௧)

ஆச்சப்பாரேஷகருசெயசிங்கென்றே தானினைத்துமிகவூதிவிடுதடாமல், மூச்சப்பானறிந்துயிப்படியேசெய்தால் மூக்கியமடாசிவ யோகபூசைதானும், பேச்சப்பாபேசாமல்மவுனங்கொண்டு பெருகிநின்றவாசிதாரணையைப்பற்றி காரப்பாயிப்படியே வருஷமொன்றில் கருணையோசிவயோகங் கருதிப்பாரே. (௱௮௰௨)

பாரப்பாயிந்தவிதந்தேவிபூசை பதறாமல்செய்துசிவ யோகம் பார்த்தால் நேரப்பாநின்றதொருமகனேயொன்று நினைத்தவரந்தான் கொடுப்பான் நிலையைப்பற்றி சாரப்பாசிவயோகத்தாலே சார்ந்திருந்துபூரணியை பூசைசெய்து, காரப்பா ஆதாரம்நன்றாய்ப்பார்த்துகருத்துன்வைந்து பூசைசெய்[illegible]நவைக்கேளே. (௱௮௰௩)

கேளப்பாமயேஸ்வரிக்குவாமபூசை கிருபையுடன்செப்புகிறவகையேதென்றால், வாளப்பாயன்னமொடு பலகாரங்கள் வார்க்கவகைநெய்யுடனேபரமானங்கள், ஆளப்பாவெண்டயிருமண்டத்தோடியருள்பெருகவஸ்துவொடு சுத்திவைத்து, காளப்பாதானறிந்து நைவேத்தியஞ்செய்து கருணைபெறதூபமொடுதீபங்காட்டே. (௪௮௪)

காட்டடாதீபமொடு தூபங்காட்டு கருணைபெறமானதமாம் தியானஞ்செய்து, மூட்டாமணிபூசை சங்கினோசை முழக்கடாசெகண்டிகைநாதபூசை, கூட்டடாசங்கீதமேளவாத்தியம் குமுரவேநாகசின்னசாமத்தட்டு, சூட்டசோடசமாமுபசாரங்கள் சுத்தமுடன்செய்துகெடந்தன்னைவாங்கே. (௪௮௫)

தாங்கியிருமார்பினிடை யமைத்துமைந்தா வணக்கமுடன் சிமரீங்கிலியென்றேதான், நோங்கியொருமனதாகத்தியானம்பண்ணி நுட்பமாய்ப்புருவநடுக்கமலத்தேத்தி, தாங்கிமிக ஓங்ரீங்அம்மென்றோதி சங்கையுடன்மூலகணபதியைப்பார்த்து, பாங்குபெற சிவசிவயென்றமூர்தமூட்டி பத்தியுடன்சற்குருவைநம்மென்றோதே. (௪௮௬)

ஓதிமணப்பூரணமாய்மைந்தாநீயு முறைமையுடன்முதுகரிவற்கமெல்லாம், நீதியுடன்மூலமது கற்சினையேசெய்து நேர்மையுடன் சீஷர்களையருகழைத்து, சோதியென்றபுருவமதில்திருநீறிட்டு சுகசீவமருணகலை யமுர்தமீய்ந்து, ஆதிபரஞ்சோதிதன்னைத்தியானம்பண்ணி யமுதுகரிவற்கமெல்லாமவர்கட்கீயே. (௪௮௭)

ஈய்ந்தும்கநிர்மால்லியமெல்லாங்கூட்டி யின்பமுடன்திபதூபங்கள்காட்டி, ஆய்ந்துநின்றஅரதேசிபரதேசிக்கு அன்னமொடுபலகாரமன்பாயீய்ந்து, சாய்ந்துமனம்போகாமல்நிலையில்நின்று சங்கையுடன் வாசிதாரணையைப்பற்றி, பாய்ந்துமிகவாதாரத்துள்ளேசென்று பருவரியேகாரணியம்பரையேயெண்ணே. (௪௮௮)

அம்மரமேயகண்டமேஆதித்தாயே ஆதியந்தமில்லாதஅரூபத்தாயே தம்பரையேதமரசமேமவுனஞானச் சத்தானந்தவளிதாயேதாயே, நம்பரையேநாதாந்தகருணைவாழ்வே நானென்றுமநீயென்றுமில்லாதநனே, உம்பரையேவும்பருக்குமாக்குமெட்டா ஓங்காரங்கடந்துநின்றவொளியேயெண்ணே. (௪௮௯)

ஒளியாகிஒளிநிறைந்தவெளியுமாகி ரெண்டாகியுறுதியாகி, வளியாகிமதியாகிவானுமாகி .மவினரக்ஷயோகமெனும்ஞானமாகி, தெளிவாகிதெளிவினுள்ளே வொளியுமாகி சித்தாகிரிஷிகள்சத்திரமனமுமாகி, நெளியாகி சுளியாகிமேல்கீழாகி நேத்திரத்துக்கடங்காத பூரணமாயெண்ணே. (௪௯௰)

பூரணமேகருணைவளர்பூதத்தாயே போதமயமானசிவயோகத்தாயே, காரணமேகண்ணிறைந்தகமலத்தாயே கமலாட்சபூரணமாய்

னின்றமாதே, மாரணமாய்சகலசித்துந்தானேதானாய் மஹாமந்திரசுரூபமதாய்நின்றதாயே தாரணமாய்சகலவுயிர்வாசியாலே தந்தசுத்திசித்தமுமாய்தானேகாணே. (௪௯௧)

காணுகின்றகற்பூரதீபமாதே கைலாசவாசமுள்ள கமலத்தாயே, பூணுகின்றசத்தாகிசித்துமாகிபூரணமாயானந்தமயமுமாகி யூணுகின்றசித்தசுத்தபூதமாகி யோசையுள்ளநாதவிந்துகளையுமாகி தாணுகின்றவெவ்ளியொளியின்சோதியாகி சோதியெனுமாகியந்தவடிவுமாமே. ()

வடிவாகிமுடிவாகிமாலுங்காண மன்னுயிர்க்குந் தானனையனுமாகி அடியாகிநடுவாகிவானுந்தாண்டி அண்டசராசரங்களெல்லாம் நினைவுமாகி, முடிவாகிநானகநீயுமாகி மூச்சாகிமூச்சற்றபொருளுமாகி விடிவாகியசுத்தமுமாய்சுழியுமாகி விளங்கிநின்றயானந்தப்பொருளுமாமே. (௪௯௩)

பொருளானவேதாந்தசித்தாந்தமாகிபுகழுநின்றசமாட்சத்தின்பொங்குமாகி, அருளாகி அருளியந்தயகண்டமாகி அளவற்றவாகாசரூபமாகி, மருளாகிமருள்கண்டயறிவுமாகி மகத்தானசோதிசிவகாட்சியாகி, யிருளாகிவொளியாகிவெளியுமாகி யேற்றபரிபூரணமாயிருந்ததாயே.

தாயாகிதந்தையுமாய்சேயுமாகி சகலவுயிர்சீவகளை சீவனாகி காயாகிகனியாகிரசமுமாகி கண்ணாகிவிண்ணாகிகாந்தியாகி, ஓயாதமணிகெவுனநாதமாகிவொன்றுக்குமடங்காதவூமையாகி, பேயாகிபேர்பெரியகண்களாகிபேரண்டமானபூரணமேயெண்ணே. (௪௯௫)

பூரணமாய்காரணமாய்புத்தியாகி பொக்காகிவர்த்தர்கிபுகழாகியெங்குங், காரணமாய்நிற்குணமாய்கருணையாகி கண்ணடங்காவிண்ணாகி கருத்துமாகி, மாரணமாயதுமாகியிதுவாகி மருகியபின்னதுவற்றுயிதுவுமற்று, தோரணமாமண்டமுதற்பதமுமாகி சொல்லாகிகுருவாகி நின்றவாறே. (௪௯௬)

குறியாகிவேதாந்தசாட்சியாகி குணமாகிமனமாகி யதுவுந்தாண்டி, நெறியாகிஆதியந்தசூட்சமாகி நேருமனவாசிதிருவாசியாகி, சிறிதாகிபெரிதாகிசீவனாகி சீவனில்லகாலாகிதெளிவுமாகி,பெறிதாகியெட்டுடனே நாலுமாகி பேரொளியாய்சித்தொளியாய்நின்றதாயே. ()

தாயாகிஆதாரமூலமாகி தன்னொளிவும்விண்ணொளியும் தான்தானாகி தீயாகிகாற்றாகிவானுமாகி செலமாகிமண்ணாகிமூலமாகி, வாயாகிகண்ணாகிமூக்குமாகி வாய்நிறைந்தகாற்றாகிபரிசமாகி, சேயாகித்திருவாகிசெல்வமாகி தேவிமனோன்மணியான கண்ணேபெண்ணே.

தானென்றநால்சாமமெரித்துப்போடு சாதகமாய்ராக்காலம் ஆறப்போட்டு, காளென்றமூன்றுநாளானபின்பு கடுங்குப்பிஎடுத்துடைத்தால் தேங்காய்போலத், தேனென்றசிறுதிட்டத்தில் சிவந்துகாணும், திரும்பவுங்கல்வத்திலபொடியாய்ப்பண்ணி, பானென்றதிராவகத்தைவிட்டுஆட்டி பருபீங்கான்றன்னிலிட்டுதிராவகத்தைக்குத்தே. ()

குத்தியேமூன்றுநாள்ரவியிற்போடு குவிந்தபின்புவதனையேவறுத்துப்போடு, எத்தியேபொடியாக்கிமேருக்கேற்றி யிதமானவாலுகையில்தீயைமூட்டு, பத்தியேகமலம்போல்எரிப்பாயப்பா பன்னிரண்டுசாமந்தான்கடந்தபின்பு, புத்தியேகுப்பியைத்தா னுடைத்துப்போடு பொதிவானபதங்கத்தை எடுத்துக்கொள்ளே. (௬௮௪)

கொள்ளவேமுன்போலதிராவகத்திலாட்டிக் குவிந்தபின்புநீர்க் குத்திரவியிற்போடு, அள்ளவேகணலுக்குள் வறுத்துப்போடு அதிக மாங்காசியென்றமேருக்கேற்றி, தள்ளவேவாலுகையில்தீயைமூட்டித் தனையெடுத்துமுன்போலபாவனைசெய்து, துள்ளவே எழுதிரந்தீரந் தாயானல் சூரியன்போல்சிவந்திருக்குஞ்சாரந்தானே. (௯௮௫)

சாரந்தான்பலம்பத்து நிறுத்துக்கொண்டு சமர்த்தாகசூதமது பலமும்பத்து, வாரந்தான்தங்கமதுரண்டளையுமாகும் மருவிநின்று லைப்பொடியுங்கலவத்திட்டு, தீரந்தான்எலுமிச்சம்பழச்சார்விட்டுத் திரவுண்டைமூன்றுகப்பொடியாய்ப்பண்ணி, நாரந்தான்காசியென்றமேருக்கேற்றி நலமானவாலுகையில்வைத்திடாயே. (௯௮௬)

வைத்துமேபன்னிரண்டுசாமந்தீயை மறவாமல்போட்டுவரத்தீபம்போல, மைத்துமேமாதளம்பூப்போலேயாகு மைந்தனேவேறொன்றுக்குப்பிக்கேற்றி, நைத்துமேசீலையினல் கொத்மதொடாமல் நலமானகட்டிவைத்துஆயிரத்துக்கொன்று, தைத்துமேகாசிடைதான்கொடுத்தாயானல் தங்கமதுபதினறுமாற்றுமாமே. (௯௮௭)

தங்கமேபாச்சுதென்றுகொர்ச்சிக்காதே தளராமல்காயத்தைசுத்திபண்ணு பங்கமேவாராமல்தினம்பணமேயுண்ணுபளபளக்குமுடம்பெல்லாவாலேயாகும் அங்கமேசரீரமதுபவளம்போலாம் அரனுண்ட்கற்பமதுயானுமுண்டேன், சிங்கமேயிவனென்பாநனாயோயில்லே செகமெல்லாங்குன்றிமிடைக்கொவ்வாவாறே. (௯௮௮)

## குருபுத்தி.

ஒவ்வாதுதேகமப்பாசரீரத்துக்கு வுத்தமியாள்மனோமணியாள் தாய்ப்பிறப்பு,சவ்வாதுவுடன்பூசிசரக்கில்கூட்ட தணலிட்டுவாட்டை யிலேசவலேயாகும், கவ்வாதுகவலோகம்கவ்வுமுன்னே கனகமய்மாகி விடுங்கணக்கோமெத்த, பவ்வாதுவுலகத்தில்கேட்டபேர்கள் பரியாசமென்பார்கள் பாஷாண்டிதானே. (௯௮௯)

பாஷாண்டிமெத்தவுண்டுலோகத்துக்குள்ளே பரிவாகஅவருடனேபேசவேண்டாம், பாஷாண்டிவாதமுண்டோ வென்றுகேட்டால் பண்பாகசெய்தொழிலேவாதமென்னு, பாஷாண்டிவைதாலும் சகித்துக்கொள்நீ பதியற்றமார்க்கவாய்விசேஷம்பேசா, பாஷாண்டிமுகத்தின்முன்னே நிற்குமூதேவி பாங்கானதேசம்விட்டு மறுதேசம் புக்கே. (௯௯௰)

பத்தியேஞானமுத்திவாதியுடன்பேச புத்தியில்லா மலருடன் பேசவேண்டாம, கத்தியேமனதடங்கிப்போதம்பாரு, கனமானபெரி

யோர்க்குத்தொண்டுபண்ணு, எத்தியேமூலத்தைக்கும்பித்தேறுயிய லான தனங்களெல்லாசோதித்தேறி, நங்கியேஅமுர்தத்தை அண்ட முன்னிநாதாக்கள்ரிஷிகளுடமறைப்பால்நில்லே. (௬௬௧)

நில்லென்றஅறுபத்துநால் மறைப்புக்குள்ளே நிலைத்துநிற்கும் வாதசித்திக்குளிகைசித்தி, கல்லென்றகாயசித்திக் கௌனசித்தி க ளைகாணுயோகசித்திஞானசித்தி,இல்லென்னஎட்டுசித்தியுண்டுமேதி யிடங்கொள்ளா கனைகொள்ளவுலகிற்குள்ளே,சில்லென்றகாடுபோல் சத்திரங்கள்மெத்த செப்பரிதுவுனைகாணுவாதந்தானே- (௬௬௨)

வாதந்தான்முன்பின்னுய் சொல்லிவைத்து மறைத்தாரே சரக் கென்றவைப்புதன்னை, நீதந்தான் ஆதியுப்பையிழுக்காய்சொல்லி நிலை த்துநிற்கும் வீரத்தைமறைத்துப்போட்டார், வேதந்தான்மூடுக்கியே கோப்பாயநின்றவீரத்தைவைத்தாலேவாதமாகும், பாதநதானில்லா மல்நடக்கப்போமே பரிவாகசிவந்திருந்தசாரந்தானே. (௬௬௩)

சிவந்திருந்தசாரத்தின்மகிமைகேளு சொல்லசித்தர்முதல்ரிஷி கள்முடியாதப்பா, அந்தித்தகாலாங்கிநாயனுர்சொல்ல அன்புடனே கேட்டிருந்தேன்யான்கொஞ்சம்கண்டேஞ் வந்திருந்தசூதத்தைதுரத் திக்கொல்ல நலமாகவேசுருக்குநல்கப்போகா, அந்திருந்தபிள்ளைசொ ல்லநடந்தப்போலசரக்கெல்லாம் கண்ணிமைக்குள்கொல்லுந்தானே

## சூதக்களங்கம்.

கொல்லுகின்றகருவேதுவென்ருயானல் குவிந்தபடிசொல்லுகி றேன்குறிப்பாய்க்கேளு, வெல்லுகின்றசூதமொன்று கெந்தியொன்று விடுபட்டதாளகமும்சிலையும்லிங்கம், அல்லுகிறசிவப்பானச்சாரமொ ன்று அப்பனேப்ழச்சாற்ருல்சாமம்ஆட்டி, தெல்லுகிறவில்லைதட்டிக் காயப்போடு சிறப்பாகஅயக்குகையில்வைத்திடாயே. (௬௬௫)

வைத்துமேசீலைசெய்துபுடத்தைப்போடு வயிரவற்குபூசைபண் ணிதொழுதுபோற்றி, கைத்துமேகவசத்தைதாங்கிப்போடுகளங்காக வேயிருக்கும்நவலோகத்தில், அத்துமேயாயிரத்துக்கொன்றுபோடு, அப்பனேமாத்தென்னபன்னிரண்டாம், நைத்துமேசாவிக்கு வுப்புக் கேற்கும் நலமானசீஷருக்குத்தொழிலைசொல்லே. (௬௬௬)

## சூதக்கட்டு.

சொல்லவேசூதத்தைக்கட்டுதற்கு சுருக்காகவழிசொல்வேன்கே ளுமக்காள், அல்லவேயிருபகலில்பழச்சார்விட்டு ஆதியென்றசாரத் தைப்பொடியாய்ப்பண்ணி, மல்லவேசூதமொருபலத்தைவிட்டு மற வாமல் அகலில்வைத்துப்பொடியேதூவு,கல்லவேகட்டியதுமணிபோ லாகும் கரியில்வைத்துவுருக்கிடவேரசிதமாமே. (௬௬௭)

ஆமப்பா இச்சாரம்பொடியாய்ப்பண்ணி அப்பனேமஞ்சளென் றக்கருவைப்போட்டு, சேமப்பாரவியில்வைக்கத் தயிலமாகும் சிறப் பானப்பணவிடைதான்தயிலங்கொள்ள, போமப்பாசாவுகிறகற்பகா லம் புகழானவயிரம்போலிருக்கும்திரேகம், காமப்பாவித்தைகட்கும் மெத்தநன்றுகைவிட்டசூத்திரம்போல்கண்டுபாரே. (௬௬௮)

## துருசிவைப்பு.

பார்க்கவே துருசியிடவைப்பசொல்வன் பண்பாகச்செம்பாலே பனைபண்ணி, கார்க்கவேகல்லுப்பு பொடியாய்ப்பண்ணி காணிதுக்கு பதினாறுவெடியுப்புசீனம், மேற்கவேநிறுத்தந்தபானையிலேபோட்டு, மிதமானபழச்சாறுபடிதான்விட்டு, ஆர்க்கவேமேல்மூடிபுதைத்துப் போடு ஆறுதிங்களானபின்புஎடுத்துப்பாரே. (௬௬௯)

எடுத்துப்பார்பச்சையாங்கட்டிப்போகும் யிதமானவயிரம்போ ல்துருசியாகும், அடுத்துப்பார்அறுபதுவும் சுத்தியாச்சு அப்பனே செம்பதுவும்சிவனுமாச்சு, கடுத்துப்பார்தயிரதுரும் விஷ்ணுமாச்சு, கலந்துநின்றபழச்சாறுபிர்மாவுமாச்சு, தொடுத்துப்பாரிதனைகுருசெ ய்யில்வேதை துலையாதுவாதத்திலாதியாமே. (௭௰)

## பச்சைதுருசில்சூதங்கட்டு.

வாதத்திலாதியென்றசூதக்கட்டு வகைசொல்வேன்பச்சையென் றும் மயங்கவேண்டாம், நீதத்தில்துரிசியதுபலமுமொன்று நேர்ப்பா கப்பொடிபண்ணிவைத்துக்கொண்டு,பூதத்திலிரும்பானகரண்டிதன் னை புத்தியுடன்சலம்விட்டுஅலம்பிப்போட்டுசூதத்தைநிறுத்தல்லோ பலமும்போட்டுத் துப்பரவாய்த்தண்ணீராமுக்கால்வாரே. (௭௰௧)

தண்ணீர்தான்கொதிக்கையிலே துருசுத்தூளை சாதகமாய்த்தூ விவரத்தண்ணீராமே,தண்ணீர்தான்சுண்டிடவேமறுதண்ணீர்விட்டு சாகாமல்த்தூவிவரத்துருசுத்தூளை, விண்ணீராமூன்றுதரம்விட்டுக் காச்ச மெழுகுபோலுண்டிருக்கும் சூதந்தானுமதிண்ணமாவிட்டுந ன்றாய்தேய்ந்துதேய்ந்து சிறப்பாகக்கழுவிடவேதீர்க்கமாமே.(௭௰௨)

தீர்க்கமாயுருட்டியதைவைத்துக்கொண்டு செப்பரியமத்தங்கா ய்க்குள்ளேவைத்து, மூர்க்கமாய்வெள்ளியதுவராகனிடைபத்து முன் போல அழகாகத்திருவப்பண்ணி, தூர்க்கவேசூதவுண்டைநடுவேவை த்து துப்பரவாய்மேல்மூடிசீலைசெய்து ஆர்க்கமாய்காயவைத்துஎடுத் துக்கொண்டு அழகாகமேல்மூடித்திருகிப்போடே. (௭௰௩)

திருவியேமதுசுத்தால்நல்லயெண்ணைச் சிறப்பாககலசத்திலளா மட்டும்மார்த்து, மருவியேவெள்ளியென்றக்கிண்ணிதன்னை வட்ட மிட்டு வூஞ்சல்கலயத்திடடு தருவியேமேலோடுகொன்றிமூடி சாங்க

மாய் சிலமண்மேலேபூசி கருவியேகலசத்தில்கழுத்துதன்னில் கடுகி யேபணம்போலேதமருபோடே. (௭௱௪)

தமரிட்டுக்கலசத்தை ஆணிமேல்வைத்து தயங்காதேவிரற்பரு மன் திரியைப்போட்டு, தமரிட்டுவிளக்கேற்றிநாலுசாமம் தயங்காதே எரியிட்டுஆறவிட்டு அமரிட்டுவெள்ளியென்றக்கிண்ணிதன்னை அசை யாமல்திருகலிட்டுவுண்டைவாங்கி பமரிட்டுத்தண்ணியிலே கழுவிப் போடபத்துமுறை யவிர்ப்புடமாய்க்காயப்போடே. (௭௱௫)

காயபிலேபோட்டபின்புதண்ணீரிர்கழுவிக் கசங்காமல்வெள்ளி யுடசிமிழில்வைத்து, பாயையிலேமுன்போல எண்ணெயிலேப்போட் டுப் பக்குவமாய்நாற்சாமம் அரைத்தபின்பு போதையிலேயிப்படிதா ன்தூறுபுடம்போடு பேரானஎண்ணெயிலே பத்துமுறைபோடு, தே யையிலேவெள்ளியைத்தான்பிடித்துப்போடு சிறப்பானவெள்ளியை த்தான்யியமிட்டுதே. (௭௱௬)

ஊதியேமுன்னறையில் சிமிழ்போல்பண்ணு வுத்தமனேபுடம் பத்துஎறிப்புபத்து பாதியேயிப்படிதான்செய்துகொண்டு பரிவாகக் கரியில்வைத்துவுருக்கவாங்கும், கோதியேதங்கமிட்டு வுருக்கிக்கொ ண்டு குறிப்பானநாகமதுகூடவிட்டு ஆதியேசமனாகப்பொடியாய்ப் பண்ணி யந்தகெந்தி சூதமிடைச்சமனாய்க்கூட்டே. (௭௱௭)

கூட்டியேகல்வமதில்பொடியாய்ச்செய்து கொடிதானமல்லிகை யின்சாற்றாலாட்டி, நீட்டியேமூன்றுநாளரைத்தபின்பு நேராகப்பொ டிபண்ணிக்குப்பிக்கேற்றி மூட்டியேவாலுகையின் மேலேவைத்து முயர்ச்சியாய்த்தீமூட்டிக்கமலம்போல ஆட்டியேபன்னிரண்டுசாமமா னல் அருணநிறம்போலாகும்வேதைகேளே. (௭௱௮)

கேளப்பாநூற்றொன்றுநவலோகத்தோடுங்கெடியானமாத்தென் னஎட்டுமாகும், வேளப்பாகுளிகைக்குச்சாரணையேசெய்தால் வெகு கோடிகாலமடடும்லூடும்லூடும். தாளப்பாஆயிசுண்டுதயங்கவேணடாம் தயங்காதமூலிகையிலாசுமெத்த, பாளப்பாதுருசுவிட்டுச் சூதங்கட் டும் படுபேச்சு மூலிகையிற்காட்டாதென்னே. (௭௱௯)

என்னவேவுபரசங்கள் நூற்றிரண்டுபத்து யிலேகளினால் சுருக் கிட்டுசாறுவார்ப்பாய், பன்னவேபாஷாணம் அறுபத்துநாலும் படு முன்னேகட்டாக காசுச்சுண்ணம், மன்னவேயுப்புவகையிருபத்தஞ் சும் மல்லிகைப்பூப்போல்மலர்ந்துசுண்ணமாகா, தன்னவேசாரசாரங் களாலே சகலமுந்தான்கட்டினமுங்குருவுமாமே. (௭௱௰)

## துருசுகளங்கம்.

ஆமப்பாமுன்கையில்சிறிதுவுண்டு அந்தவகைமூலிகைதான் மனிதர்க்கீயார், வாமப்பாமலேகளிலே வுண்டுவுண்டு மகத்தானதலமது சூதமுண்டு, நாமப்பாமனிதரங்கேசஞ்சரிக்கப்போரார் சஞ்சரிப்பார் நாதாக்கள்ரிஷிகள்சித்தர் போமப்பாமனிதருக்குசரக்குக்காரம் புகழாதிவாதத்தில்துரிசியாமே. (௭௱௰௧)

ஆதியாந்துருசியென்றகளங்கஞ்சொல்ல அறையுறேன்பண்பாக அறிவுள்ளோர்க்கு பாதியாமதுரிசிபலம்ஒன்றேதூக்கு பண்பாககெந்தியது பலமேமுக்கால், மாதியாம்குடவன்பலம் ஒன்றேபோடு மாசற்றவீரமதுபலமேகால்தான், பேதியாம்திரிமூன்றுவுமிநீர்விட்டு பெலக்கவரை நால்சாமம்பின்புகேளே. (௭௱௰௨)

கேளுநீமெழுகாகும்பதத்தில்வாங்கி கெடிபடவேதுருசியின்மேல்அப்பிபபோடு, வாளுநீயுலாந்தபின்பு அதின்மேற்போட வகையாக சுண்ணும்புக்கவசம்போடு, தாளுநீயுலர்ந்தபின்பு சீலேசெய்து தணல்படவேதியாற்றிஎடுக்ககேளு, நீளுமேநீற்றியதைக் குகையில்வைத்து நேர்காரமிட்டுருக்கமணியுமாமே. (௭௱௰௩)

மணியெடுத்துவுடைத்தால்ரவியுமாகும் மாசற்றவெள்ளிதனே நாலுக்கொன்று, தணியாகவுருக்கிடவேமூன்றுமாற்று தப்பாதுகைகண்டதொழிலுமாகும் மணியாகயிச்செம்பு களங்கமாகும் அப்பனே செந்தூரங்குருதான்செய்ய, கணியாகநாலாறுகாணுங்காணும் கருத்திதுக்குள்ளேதென்றூல்கெந்திதானே. (௭௱௰௪)

நாணுகுந்துருசியென்றசெந்தூரத்தை சாற்றுகிறேனிறுவெகுவுமுன்னேபாரு, தேனுகும்வெடியுப்புசெயநீர்தன்னில் சிறந்துநின்ற துருசியொருபலந்தானெட்டு, காணுகுஞ்செயநீரில்தோய்த்துதோய்த்து கடுரவியில்தினந்தினந்தான் ஏழுநாட்கு, பானுகும்வெடியுப்புபலந்தான்மூன்று பண்பானசீனமதுமுப்பத்தஞ்சே. (௭௱௰௫)

அஞ்சவேகலவத்தில்பொடியாய்ப்பண்ணி அப்பனேகழுதையுடகாத்தம்வார்த்து, துஞ்சவேயரைத்துநன்றாய்பில்லேபண்ணித் துடியானரவிதனிலேவுலரப்போடு; மிஞ்சவேகலவத்தில் போட்டுநீயும் மேலாகசக்கரமாம்பானே வைத்து,கெஞ்சவேயுளுந்தரைத்துச்சீலேசெய்து கெடியானஅடுப்பேற்றித் தீயைமூட்டே. (௭௱௰௬)

மூட்டவேமேலோடிப் புகையோடொக்க மூக்காலேசலம்விழுகும்வெள்ளைநீராய், ஆட்டவேவெள்ளையைத்தானகலில்வைத்து அதன்பின்புசிவந்தசலம்வருகுமக்காள்,பூட்டவேபீங்கானில்வாங்கிவாங்கி பேரானஅரக்காலேகுப்பிபண்ணி, நீட்டவேயதில்வாரு களையாதப்பா நேரானலோகமென்றூல்கரைந்துபோமே. (௭௱௰௭)

போமெனவேரவியில்வைத்து துரிசைவாங்கிப்பொடிபண்ணிக் கலவத்திற்றிராவகத்தைவார்த்து, ஆமெனவேஅறுசாமம் அரைத்த பின்பு அப்பனேபெரும்பீங்கான் தன்னில்வைத்து, காமெனவேநீர் குத்திரவியிற்போடு கலங்காதேமூன்றுநாளானபின்பு, தாமெனவே தணலுக்குள்வறுத்துப்போட்டு தயங்காதேபொடிபோலே மேருக் கேத்தே. (எ௱௰அ)

எத்தியேதீமூட்டிப்பன்னிரண்டுசாம மிதமாகக்கிடந்தபின்புஆ றவிட்டு, மாத்தியேயுடைத்தெடுத்துக்கல்வத்திட்டு வாகானதிராவ கத்தில்அரைத்துமுன்போல், தூத்தியேபெரும்பீங்கான்தன்னிலவை த்துத் துடியானதிராவகத்தைக்குத்துகுத்து, ஆத்தியே தணலுக்குள் வறுத்துப்போடு அதிகமாங்காசியென்றகுப்பிபோடே. (எ௱௰௯)

போட்டுமேவாலுகையின்மேலேவைத்துப் பொலிவாகத்தீபம் போல்த்தீயைபபோட்டு, ஆட்டுமேபன்னிரண்டுசாமமானல் அப்ப னேஆறவிட்டெடுத்துப்பாரு, காட்டுஐந்துதிரமேயிப்படியேபண்ணு கசடற்றஅருணனைப்போல்சிவந்துகாணும், தீட்டுமேஅம்மரத்தைக் கத்திகொண்டு துக்கியேரசத்தோடுந்துரிசிஆட்டே. (எ௨௰)

துருசுசெந்தூரம்.

ஆட்டானசெந்தூரம் நவலோகத்தில் அணைத்திடவேபத்திரை யாமாயிரத்துக்கொன்று, மூட்டானசூதத்தைக் கரண்டியிலேவிட் டால் முதன்மையானசெந்தூரம் மார்க்கங்கிட்டும், காட்டானசாறத னில்பிழிந்தாயானல் கமலம்போல்திரண்டுருண்டுமணியுமாகும், வா ட்டானகுடன் தீக்குள்ளேவாட்டி மருவிநன்று யுருக்கிடவேசோதி யாமே. (எ௨௰௧)

வாட்டியேமேல்கவசம்சத்திசாரம் வளையலுப்புவெண்காரந்தா லுங்கூட்டி,நீட்டியேவெடியுப்புநீராலாட்டி நிலவரமாய்உள்கருதான் பூசிக்கொண்டு, வாட்டியேஅதின்மேலேகவசம்கட்டி வளமாகமணல் வறைவில்புடத்தைப்போட்டு, தீட்டியேஅம்புக்குட் கூர்மைபோலச் சிரசானவீரமதுமணியுமாமே. (எ௨௰௨)

மணியானஅயமதுதானுருகும்போது மாட்டுநீநாலுக்கு ஒண் ணுதங்கம், தணியானதங்கமிடைநாகம்போடு தனிநாகத்திடைபோடு லிங்கம்தன்னை, லினியானலிங்கமிடைவீரம்போடு மீளாமலடிக்கடிக் குகாரந்தாக்கு, கணியானஅயந்தானும்களங்கமாகும் காட்டிடவேநவ லோகமேமாமே. (எ௨௰௩)

எமமானூற்றுக்கொண்ணுயீவா யென்மகனேயெட்டனைதான்ஆ ணிக்கொக்கும், ஓமமாம்புடத்துக்குஉப்புக்கேகா உண்மையாயிரும பாட்டிசிவனத்தைப்பண்ணு, காமமாம்பெண்ணாசை தன்னைவிட்டு

கசப்போடுபுளிபுளிப்புயெண்ணைவிட்டு, சேமமாயிரும்புதான் செந்தூரித்து செகசாலவித்தையெல்லாம் துரும்பாயெண்ணே. (௭௨௪)

எண்ணியெண்ணிமனஞ்சலித்து விட்டஞானியெங்கெங்குமிருக்கிலுமேயெவடம்போயேன், அண்ணிகற்பமுணடுகொயசித்திசெய்து அங்கென்றுஅடுக்காது தவத்தில்சென்று, நண்ணுரதுவார்தேசமாம் தலத்தில்புக்கி நட்டமாஞ்சிலம்பொலியின்நாட்டங்கண்டு, ஒண்ணி ஒண்ணி மவுனத்திலறிவுதாக்கி ஒருவருடன்பேசாதேவுண்மையாமே

உண்மையாமிரும்பாட்டி சீவனத்தைப்பண்ணு ஒருபலந்தானிரும்பதன்னைகாசாய்விர்ப்பார், அண்மையாயிருபதுவும் ஆத்தாளாத்தாள் ஆட்சியாய்செந்தூரம்பண்ணிணுக்கால், பண்ணுமையாயிரும்புதனிலுணுக்கமெத்த நோய்சென்ருலிரும்பினுட நுட்பங்காணுர், வண்மையாம்புடசெயத்தின் மார்க்கங்காணுர், மகத்தானசித்தியெல்லாமிரும்பாலாச்சே. (௭௨௬)

இரும்பானசெந்தூரம்குன்றியுண்ணு யேத்தமாமண்டலந்தான் பத்தியாகும், கரும்பானகல்லாகும்தேகந்தானும் கரத்தாலே மலைதனையேகுத்திணுக்கால், துரும்பாகும்தூளாகும் தவுடுபொடியாகும் சுக்குலந்தான்மேலோடும் கீழோடாது, எரும்பானயெண்பதுக்குள் கொள்ளவாகும் இருக்குமடாயிருபதுவும்எத்தமாமே. (௭௨௭)

இரும்பானகளங்குக்குநாலத்தொன்று யேத்தமாங்கெந்தகத்தை சுத்தித்துகூட்டி, பெரும்பானபொற்றலையின்சாற்ருலாட்டி போட்டு வரப்புடம்பத்துசெந்தூரமாகும், பரும்பானநவலோகத்தி தொட்டியோடும் பார்த்ததுவும்பதிணுலும்மருவிக்காணும், துரும்புதான்தூளுனவாறுபோல சொல்முறைகள்மறவாதே சூட்டுசூட்டே. (௭௨௮)

மறவாதேசவர்க்கார சுண்ணந்தன்னை மாட்டுகிறகருவிதுதான் வழலைமாற்கம், துறவாதேஆருக்கும்கெர்ச்சிக்காதே செய்தொழிலை மறவாதேதிருட்டொண்ணுதே மறவாதேக்ன்னிதனைப்பார்த்திடாதே பரத்திலே மனதுண்ணிபாருபாரு, இறவாதேகாயசித்தியோக சித்தி பண்ணி யேத்தமாஞ்சமாதியிலேயிருந்திடாயே. (௭௨௯)

சமாதியிலேயிருக்கவல்லோசவர்க்காரத்தை தவராமல்வெளியாக்சொன்னேன்மக்காள், வமாதியிலே வழலைதனைசித்தரெல்லாம் மாச்சல்வயமகாகடினமாகச்சொன்னுர், எமாதியிலேஎண்ணைதனைவார்த்துபண்ணியேத்தமாஞ்சுன்னத்தில் நீத்தச்சொன்னுர், சமாதியிலே களபாடுபட்டுபட்டு காணுமலிறந்தவர்கள்கோடிதானே. (௭௩௰)

தானென்றசார்க்காரம் சொன்னதர்மம் தாயானமணித்தாய்க்கு குருவுக்காச்சு,எனென்ருல்நிகண்டுக்குள் தீர்ந்தேனையா யேளிதமாஞ்சித்தருக்குயிலக்காய்ச்சொன்னேன், கோனென்றசித்தரெல்லாம் வழ

லேதன்னை கூறினர்வெகுகடினம்குணமொன்றில்லே, தேனென்றயே மூலட்சம்சிவன்சொன்னதில் செப்பியில்லேயென்றுநான் திறந்திட்டேனே. எ௩க)

திறந்திட்டேனென்றுசொல்லியேசவர்க்காரத்தை சித்தரெல்லாம்யென்மேலேசினமுமாச்சு, மறந்திட்டவழலேதான் வெளியில்போட்டார் மலேயெல்லாம்சித்தர்மயமாச்சுதென்றே கறந்திட்டபால்போல வெளியாய்ச்சென்று கயிலாசபாட்டர்முன்னேகருதிச்சொன்னர், அறந்திட்டபாட்டரதுகேட்டபோதே யாச்சனித்தில் யென்னையங்கழைப்பிப்பாரே. (எ௩௨)

அழைச்சுமேகூர்மமுனிகூட்டிப்போனர் அதிகமாம்போகரேவு சவுக்காரத்தை, விழைச்சுமேவெளியாகச் சொல்லுவானேன்மேதினியெல்லாம்சித்தர்மயமாய்ப்போகும், பழைச்சுபரிதாபரிந்துபோடுயென்ருல் பாட்டர்சொல்லயான்கேட்டுபக்கல்விந்த, உழைச்சுமேநிகண்டுதன்னையொளித்துவைத்து உலகத்துக்கீய்ந்துவிட்டேன் உண்மைதானே. (எ௩௩)

சொல்லுகின்றயென்குருவேபூரணமேஅய்யா சித்தானுல்சகலருந்தான்துதிசெப்வார்கள், அல்லுமையா ஆதிசிவன்கோபமானுல் அனுசரித்து அஞ்சலி பெந்தனங்கள்பண்ணி, கல்லுமையாகனைத்ததோர்விசேஷஞ்சொல்லி கடாட்சிக்கவேணுமென்ருல் கருணைகூர்வார், வில்லுமையாய்வளேத்தாலோ அம்புதைக்கும் வெறுமரத்தில் அம்புவிதையாவிதம்போலாமே. (எ௩ச)

விதமானசவுக்காரம்தன்னைசொன்னுல் வெகுசெனருக்குபகாரமானுலென்ன, திதமானசுகுர்தம்வந்து லபிக்குமையா தெளிவான ஞானவெளிதோன்றுமப்பா, பதமானபாபம்வந்து பறந்துபோகும் பாஷித்தால்வெகுசித்தர் நூலுக்குள்ளே, அதமானதீயிலிட அகன்றுபோகும் ஆகையால்வாதமெல்லாம் அசடாய்ப்போச்சே. (எ௩௫)

அசடாகப்போகாமல்அறைகிறேனுன் ஆனந்தவன்பாக அறிவாய்க்கேளு, திசடானசித்திரைவைகாசிக்குள்ளே செங்கதிரோன்ரவிதன்னில்பொங்கிநீறும், பசடாகபூநீறுதான்பதக்குவாரி பாண்டத்திலிட்டுமேதண்ணீர்வாரு, திசடாகவொன்றுக்குரெண்டுதண்ணீர் சிறப்பாகவார்த்துமேகலக்கிடாயே. (எ௩௬)

கலக்கியேமூணுநாளானபின்பு கசகாமல்தெளிவிறுத்து காச்சுகாச்சு, புலக்கியேபொடியானபதத்தில்வாங்கி பேரானவெடியுப்புநீரால்கட்டி, விலக்கியேவில்லேபண்ணிகாயவைத்து மீராதேபுடமபோட்டுயெடுத்துவைப்பாய், துலக்கியேசீனத்தைகல்வத்திட்டு துடியான வெடியுப்புநீராலாட்டே. (எ௩எ)

ஆட்டியேஅஞ்சுநாள்வில்லைபண்ணி அகலீலிட்டு அன்பதெரு அடக்கிபோடு, தாட்டியேஆறவிட்டுஎடுத்துப்பாரு சுப்பிரமாய்வெள் ளையாய் சுண்ணமாகும், காட்டியேவில்லைவைத்து கல்லுப்புத்தானும் கணக்காகவெடியுப்புநீராலாட்டி, வாட்டியேஅகலிட்டு புடத்தைப் போட பாரம்போல்சுண்ணும்பு ஆகும்பாரே. (எ௩அ)

ஆகுமேபூநீறுசுன்னம்நாலு அரிதானசீனத்தில் சுண்ணம்ரெண் டு ஏகுமேகல்லுப்புசுண்ணமொன்று யேத்தமாங்கல்வத்தி லிதனைப் போட்டு போகுமேபொடிபண்ணிவெடியுப்புநீரால்பேசாமலரைத்தி ட்டுவில்லைபண்ணி,தேகுமேகுக்கிடத்தின்புடத்தைப்போட்டு சீதள மாய்ஆறவிட்டுயெடுத்துக்கொள்ளே. எ௩கூ)

எடுத்துமேவெடியுப்புநீராலாட்டியிழுத்தரைத்துவீரமதுபலம் கால்போட்டு, விடுத்துமேவில்லைபண்ணிகாயவைத்து மீராதேபுடம் போட்டுயெடுத்துவாங்கி, கடுத்துமேகல்வத்திலிதனைப்போட்டு கடி சானவீரமதுபலம்கால்போட்டு, தடுத்துமேவெடியுப்பு நீராலாட்டி சாதகமாம் அஞ்சுபுடம்போடடிடாயே. (எசப)

அஞ்சுமேபுடம்போடவேசுண்ணமாகும் ஆண்மையாஞ் சவுக் காரம் சுண்ணமாச்சு, கொஞ்சுமேசரக்கெல்லாம்கட்டிப்போகும் கெ டியாரம்போடலாம்வாதஆடடு, துஞ்சுமேவாய்திறந்து பேசவேண் டாம்சொல்லாதேஒருவருடன்சூட்சமெத்த,தஞ்சுமேவிளாங்காய்போ ல்உண்டைபண்ணி சாந்தமாம்ரவிதனிலே காயப்போடே, (எசக)

காயவைத்துயெடுத்துவைப்பாய்பதனமாக கருத்துவைத்துகை முறையாய்வளமாய்ப்பண்ணு, ஆயவைத்துச்சாத்திரத்தில் சொன் னரில்லை அறுபத்துநாலானல் மரபில்தானும, சாயவைத்துவெவ்வே றுய்சொல்லிப்போட்டார் சனங்களெல்லாம் சித்தமயமாகுமென்று, ஓயவைத்துநம்முடைய நிகண்டில்சொன்னேன் உத்தமாம்சவர்க்கா ரச்சுண்ணமாச்சே. (எசஉ)

சவுக்காரவித்தைதனைசொன்னரென்று சதாசிவனும்யென்மே லேகோபமானர், மவுக்கமாமவுனிகளும்கோபமானர் வாய்திறக்கார் சித்தர்கள்தான்யேன்னேடப்பா, குருக்காரம் நிகண்டுதனை குகையில் வைத்தால் கோபம்வந்தால்சித்தர்கள்தான் கிழிப்பாரென்று, உவுக்க மாமுலகத்தோர்க்கீய்ந்துவிட்டேன் உத்தமிதாம்சொல்லிடவேவுரை செய்தேனே. (எசங)

செய்திட்டேன்சிவகாமிசொல்லக்கேட்டு சித்தரெல்லாஞ்சினே கம்விட்டுகோபமாகி, வைத்திட்டாரென்றுசொல்லிவெளியில்போட் டேன் மறைந்துவைத்தகருவிதான்வழலைமார்க்கம், கொய்திட்டகுரு வாலேகோடிகவராகும் கூறரிதுகூகூகூகொள்ளைகொள்ளை, நைதிட் டசரக்குநமன்போலாகும் நாமறியோமிதுபோலேபோக்குதானே. (

போகானகருவெல்லாமெதினுலாச்சு புகழானஉளசாத்தின்குரு வாலாச்சு, தாக்கானசாத்திரத்தில்சித்தரெல்லாம் சாதகமாய்ச்சொல் லாதேபோனுரென்று, நோக்கானரெண்டுக்குள் வெளியாய்ச்சொன் னே னுட்பமெல்லாயென்னூல்போல் யெதுவுஞ்சொல்லார், வாக்கா னசவுக்காரமகுருத்தான்செய்யும் மார்க்கத்தைவழியோடே வழுத்து வேனே. (எசரு)

வழுத்துவேன்முன்வைத்தசவுக்காரந்தான் வாகாகப்பலம்பத்து நிறுத்துக்கொண்டு, எழுத்தவேயெருக்கம்பால் படிதானென்று யி சைந்தஅண்டசுன்னமது பலந்தானென்று, விழுத்தவேவெடியுப்பு சுண்ணமொன்று மிடுக்கானசீனத்தின்சுண்ணமொன்று, தழுத்தவே வங்கத்தின்சுண்ணமொன்று, சவுட்டைவில்லைபலமொன்று தூக்கிக் கொள்ளே. (எசகூ)

தூக்கியேகல்சுண்ணம் பலந்தானுலு துப்பரவாம்நல்லதண்ணீ ரெண்டுசேரு, நீக்கியேநீரதனில்கல்சுண்ணத்தை நிகழாமல்கலக்கி யேநீரிறுத்துக்கொண்டு, வாக்கியேமுன்சொன்ன அஞ்சுதானும் வ கைக்குஒருபலம் நிறுத்துகலக்கிக்கொண்டு, தாக்கியவீரமதுகாசுரெ ண்டு சாரமதுகாகரெண்டு பூரம்ரெண்டே. (எசஎ)

ரெண்டோடுகருநாபிகாசுரெண்டு நிச்சயமாம்புழுகதுவுங்காசு ரெண்டு பண்டோடுகுக்குவெண்பலமும்ரெண்டு பாங்கானகுருவண் டுஅன்பத்தொன்று, தண்டோடுவெள்ளுகமுங்காசுரெண்டு தளுக்கா னசூதமதுகாசுரெண்டு, துண்டோடுசுண்ணும்புநீரினுலே சுழட்டி யனைக்கொன்ருகக்கலக்கிக்கொள்ளே. (எசஅ)

கலக்கியேஒன்ருகவைத்துக்கொண்டு கடிசனயெருக்கம்பால்படி தான்விட்டு, அலக்கியேஅண்டமதுஅன்பத்தொன்று அப்பனேவெ ண்கருவைக்கூடவிட்டு, குலக்கியேகுச்சியினுல்மத்திச்சுவைக்க கொ ப்பளிக்க கடுங்காரசெயநீராகும், திலக்கியேதெளிவாகயிருத்துக்கொ ண்டு செயமானசவுக்காரந்தன்னில்போடே. (எசகூ)

போட்டுமேகவர்கழியால்கடையவெண்ணெ பெருமிலகும்வழித்தெடுத்துபெரும்பிங்கான், மூட்டுமேமூணுநாளாகமட்டும் முயர்ச்சியாய் கடைந்தெல்லாம்வெண்ணெவாங்கு, நாட்டியேரவியிலிட்டுகாயப்போடு நவாச்சாரம்சரியிடைக்கிநாட்டிப்பின்பு, ஆட்டியேஅஞ்சுநாளரைத்துமைபோல் அகலிலிட்டுமூடியேபுடத்தைப்போடே. (௭௫௰)

மூடியேபுடம்போடசாரங்கட்டி முத்துப்போல்வெள்ளையுமாம் பனியில்வைப்பாய், சாடியேசலந்தானும்சிவந்திருக்கும் தனுக்குள் வீரமொடுபூரம்போட்டு, பாடியேயெடுத்துவைப்பாய் பதனமாக பருவமாய்க்கம்பிஉப்பு தோச்சுப்போடு,சீடியேசீனத்தைதோச்சுப்போடு தேசுவாம்வெண்காரம்தோச்சுப்போடே. (௭௫௧)

தோச்சிடவேபாரைவுப்பு சூடன்வெள்ளை சூதமொடுசெவ்வீரம் சாதிலிங்கம், ஆச்சிடவேஅறுபத்துநாலுங்கட்டும் அருகாமலவணமதுகட்டிப்போகும், ஓச்சிடவேஉபரசங்கணூற்றிரண்டும்சத்தாம் உர்ப்பனமாய்சுருக்கிட்டுவாட்டுவாட்டு, காச்சிடவேசவுக்காரம்கடைந்த நீரில் சரக்கானவளையலுப்பையரைத்துக்கட்டே. (௭௫௨)

கட்டுதற்குமுன்பேதான் உள்கருவைக்கேளு காரமொடுசெவ்வீரம்லிங்கந்தானும், மட்டுதற்குவகைக்குஒருவராகனிடைதூக்கி மகத்தானசவுக்காரம்கடைந்தநீரில், ஓட்டுதற்குஅரைத்துமேஉள்கருவாய்ப்பூசி உலர்ந்ததொருவளையலுப்புகவசங்கட்டி, மட்டுதற்குமணலாவியிற்புடத்தைப்போட மகத்தானமுழுவயிரக்கட்டுமாமே. (௭௫௩)

கட்டியதோர்சரக்குகளில் வேதைகோடி கசடத்தசத்துகளோமெழுகுகோடி, தெட்டியதோர்செயநீரும்சுண்ணங்கோடி செந்தூரம்குருவோடுகளங்குகோடி, யெட்டியதோர்குளிகைவகை கோடாகோடி யெடுத்தோடும்குளிகையிலேவிந்தைகோடி, பட்டியதோபழுப்பினமும்கொழுப்பினமுங்கோடி பகாரிதுசவுக்காரநீரிலாட்டே. ()

சவுக்காரம்மரப்பையெல்லாம் வெளியாய்சொன்னேன் தாய்சொல்லையான்கண்டுசெந்தோஷித்து, எவுக்கமாம்யெழுகோடியுகமும்பார்த்து யேழையானசித்தருக்குயியல்பாய்ச்சொல்லி, தவுக்கமாம்நல்சீஷன்பார்த்துத்தேடி சவுக்காரவைப்பயெல்லாம் சாத்தினேன்யான், உவுக்கமாம்சவுக்காரம்பார்த்துதேர்ந்த உயர்சீஷநாற்பத்துமூவராச்சே. (௭௫௫)

ஆச்சப்பாகாற்பத்துமூணுபேரும் அண்டத்துசித்தருடன்வாது போட்டு, கூச்சப்பாகுளிகையுடவேகங்காட்டி குருவானதுரிசினீர் கூர்மைகாட்டி, தாச்சப்பாசவுக்காரம்கிழமைகாட்டி சடதாரதெரிசனத்தில்சார்வுகட்டி யேச்சப்பாசிலம்பொலியினிடக்கங்காட்டி, யெனைப்போலசமாதியிலேயிருந்தார்காணே. (௭௱௫௬)

இருந்திட்டசவுக்காரசெயநீர்தன்னில் யிதமாகவீரமொடு பூரம் போட்டு, கருந்திட்டகாரமொன்றுசவ்வீரமொன்று கருதிபதோர்தாளகமுப்துருசுஒன்று, திருந்திட்டசூதமொன்றுகல்வத்திட்டு சிறப்பாகச்செயநீராவிட்டுஆட்டி, நருந்திட்டநாலுநாளரைத்துமைபோல்நலமாகமூன்றுபங்குபண்ணிவைபே. (௭௱௫௭)

பண்ணியதோர்சாக்கதுவும்பலந்தானென்றுபரிவானஅரப்பொடிதான்பலந்தான்போட்டு, யெண்ணியதோர் யெலுமிச்சம்பழச்சாறுவார்த்து யிதமாகமூன்றுநாளூறவைத்து கண்ணியதோர்கழுவியெல்லாங்காயப்போட்டுகனத்ததோர்முன்பங்குஒண்ணுங்கூட்டி குண்ணியதோர்குகையிலிட்டு உருக்கியாட்டு கொட்டியேஉடைச்செடுத்து மருபங்கூட்டே. (௭௱௫௮)

கூட்டியேபின்பொருக்கால்குமுறஊது குகைனருக்கிசத்தெல்லாம்பொருக்கிக்கொண்டு, மாட்டியேபின்பொருக்கால்மருந்துகூட்டி மறவாமலூதிடவேசத்துமாகும், சாட்டியேசத்தெல்லாம் காரமிட்டு தரித்தயிடைநாலுக்குஒன்றுதங்கம், ஊட்டியேஒண்ணுகஉருகும்போது உயர்கின்றநாகத்தை ஊட்டக்கேளே. (௭௱௫௯)

நாகத்தைவுருக்குந்தோர்மார்க்கங்கேளு நலமாகச்சுத்திபண்ணிவில்லைவாத்து, ஆகத்தையிருக்குகின்றஅப்பரகங்காந்தம் அதிகமாம் வளையலுப்புசத்திரசாரம், மாகத்தையெவாச்சாரம்வீரமோடுகார மடுக்காரவகைக்கு அரைபலந்தான்கூட்டி, பூதத்தைவெடியுப்புநீரிலே புகழாகதினமூன்று அரைத்திடாயே. (௭௱௬௰)

தினமூன்று அரைத்தபின்புவெடியுப்புநீரில் சேறுபோல்குழப்பியேவைத்துக்கொண்டு, அனகாகவில்லையது ஆறுமணலாகும் அழகானகுழம்பிலேஅதட்டிவாட்டு, பண்பாகக்குழம்பையெல்லாம்பதியவாட்டு பண்பானவளையலுப்புகவசங்கட்டி, அனபாகஅன்பதெருஅடிக்கிப்போட அகாரமாமுழுக்கட்டுஆகும்பாரே. (௭௱௬௧)

கட்டியேலிங்கமதுகருதக்கேளு காரணமாம்சவுக்காரச்செயநீராலே துட்டிலேதுருசுஅஞ்சுபலத்தைவாங்கி, துடியானசல்வத்திலிதனைப்போட்டு அட்டவேஅஞ்சுநாளரைத்துமைபோல் அகலிலிட்டு புடம்போடச்சுண்ணமாகும், பட்டவேசுண்ணம்வைத்துக்கிடைதான் சாரம் பகட்டியரைத்தஞ்சுநாள்புடத்தைப்போடே. (௭௱௬௨)

போட்டுவாய்பீங்கானில்பனியில்வைத்துப் பெருகுகின்ற ஆறு போல்செயநீராகும், தீட்டுவாய்செயநீரில்பூரம்வீரம் சிறப்பாகவொடித்திட்டுவறுத்துக்கொண்டு, காட்டுவாய்கம்பிலிங்கம்பலத்தைவாங்கி கனமாகமுலைப்பாலும்பழச்சாறும்சேர்த்து, ஓட்டுவாய்ஓட்டிவிட்சுருக்குப்போடு உறுதியாய்ச்செயநீரை சுருக்குப்போடே. (எாகூங)

சுருக்கிட்டுநாற்சாமமானபின்புசுத்தமாம்சவாதோடுகாரம்வீரம் அருக்கிட்டசெயனீராலரைத்துப்பூசி ஆண்மையாம்வளையலுப்புசத்திசாரம், கருக்கிட்டவெடியுப்புநீராலாட்டி கனமாகமேல்கவசம்கட்டிவாட்டு, உருக்கிட்டுஉருதியாய்வாட்டிவாட்டி உண்மையாமறைவினில்புடத்தைப்போடே. (எாகூச)

மறைவிலேபுடம்போட்டெடுத்துவைத்து மகத்தான சவ்விரம் பலகைதானும், அறவியேயரைப்பலந்தான்தூக்கிக்கொண்டு ஆண்மையாம்பரிரேக்கைமேலேசுத்தி, கரவிலேகற்பூரதீபந்தன்னில் கனமானசவுக்காரசெயநீர்தோய்சு துரவிலேநால்சாமம் வாட்டுவாட்டு துரிசாகவாட்டிடவுங்கட்டிப்பாரே. (எகூரு)

பாரப்பாகுருவோடுயகாரஞ்சேரில் பாருலகில்நினைத்ததெல்லாம்வசியமாகும்ஆரப்பாமகாரநடுவெடுத்துமாலோடணையிலிடஅழைப்புவித்தையாகுமாகும், சேரப்பாசிகாரநடுவெடுத்தேபானு சேர்த்திடவேபேதனமாந்தெளிந்துபாரு,வேரப்பாவகாரநடுவெடுத்தேஇந்து மேலிடவேவித்துவேஷணந்தானுமே. (எகூசு)

ஆமப்பாரவிமுதலாய் கேதுமட்டு மவரவர்தன்றிசையிலக்கமறிந்துபோட்டு, ஓமப்பாசாத்தியந்தானும்போட்டு உரைக்கறியார் ஐங்காயமேலேபூசு, தாமப்பாசோதனைக்குவிளக்கில்வாட்ட சல்லியமூலிக்குவனாத்தகட்டிற்பூசு, நாமப்பாகண்டபடியுமக்குச்சொன்னேம்நவக்கிரகக்கசகமென்னுளுமுற்றே. (எகூஎ)

நாளானகார்த்திகையுத்திரமுத்திராடம் நாள்மூன்றும்ரவிதிசைக்குவருஷமாறும், வாளானசகடுவலைத்தனமாமூன்றும் மதிலினுட நாள்திசைதான் வருஷம்பத்தாம், கோளானமும்மீன்சித்திரையவிட்டம் குசனுடையநாள்திசைதான்வருஷமேழாம், ஆளானதிரைசோதிசதயமூன்று மாண்டுபதினெட்டாவுக்கறிகுவீரே. (எகூஅ)

அறிபனர்தம்விசாகம்பூராடறுபத்தஞ்சி அப்படியேமேலேத்துந்தானேயாகும், தானுனநவக்கிரகமடைந்தபின்பு சாதகமாயவரவர்தன் பீசம்போடு, கோனுனஅகாரமுதலஞ்சுபோடு குறிப்பானநகாரமுதலஞ்சுபோடு, வேனுனகுறிப்போடு ஸ்திரீயும்போடு மேவுசௌவுங்கிலியோடு ஐயும்போடு, ஊனுனபூதங்களஞ்சுபோடு உத்தமனேயவரவர்தன்றிசைநாட்போடே. (எகூகூ)

போடப்பாரேகைமுன்னைசூலமேத்திப் புகழாகவிந்திட்டுப்பிரண வத்தால்கூட்டி, சூடப்பாவதின்மேலேவிறுத்தமொன்றிட்டு துலங்க வேநாலிதழுஞ்சூலம்போடு, தேடப்பாசிதம்பரத்தின்மகிமைதானும் சிறக்கவேபோட்டிட்டால்வசியமாகும், நாடப்பாவதின்மேலே விருத்தமொன்றிட்டு நலமாகபத்திதழும்நவின்றிடாயே. (எஎ௰)

நவின்றிடுவாயதின்மேலேவிருத்தமொன்றிட்டுநலமாகபத்திதழும் பன்னிரண்டிதழும்போடு, உவன்றிடுவாயதன்மேலே விறுத்தமொன்றிட்டு உபையவிதழுனபயவிட்டம்பானுவட்டம், தவன்றிடுவாய் பீசாட்சரமறிந்துபோடுதப்பாமல்சிகாரமதைமாட்டுமாடடு மூவன்றிடுவாயன்பத்தோரெழுத்துமந்தமுறைவிதமிதழறிந்துமூட்டுமூடடே

மூட்டிடுவாயஞ்சுவன்ன கோட்டையிட்டு முளைக்கநூற்றிருபத் தஞ்சிதழுமிட்டு, கூட்டிடுவாய்நால்வாசல்தேவதையுமிட்டு குறிப்பாகப்பூசித்துப்பானம்பண்ணு,ஆட்டிடுவாய்வஸ்துவொடுசுத்திவைத்து அங்கணியாசங்காணியாசமறிந்துபணணு, பூட்டிடுவாய்பரமானம்பலகாரங்கள்பூசுபரிமளசுகந்தம்பூசைக்கேத்தே. (எஎஉ)

எத்திடுவாய்மைந்தனுடகாரஞ்சேறி லிருந்து சன்றதம்பனமாமிகத்திலேதான் காற்றிடுவாய்ருகுவொடுமகாரஞ்சேரில் சாற்றுகிறேன் நாதாக்கள்பாதம்போற்றி, மாத்துகிறேனெண்பத்தோரறையாநிற்கும் மறுபடியுமும்மூன்ருய்வகுத்திட்டேதான், தோத்துகிறேன்நவக்கிரகமடைக்கும்வாறு தொடுகுறிபோல்நன்ருகச்சொல்விப்பானே. எஎ௩

பானுகுழிமால்கேதுசனியேழாகும் பவரறியபுகழறிந்துகுசனேமுத்தம் வானுமடுகுசன்வெள்ளிகுருமால்பானு மகத்தானசனிருகுகேதுமுந்துந், தேனுசையபுகழறிந்துபுலன்பானுஞ் செம்பொனிராகுகேதுசனியேமுத்தும், நானுபுதனிரவிகுருருகுகேது சனிசெவ்வாய்புகழறிந்துமுத்துந்தானே. (எஎச)

முத்திகுருபுதனிரவி மைந்தனுகு முறைகேதுபிறைசெவ்வாய் வெள்ளிமுத்தும், வெத்திபுகர்ச்சிசெவ்வாயிரவிபொன்பால்விஷமான கேதுசனிருகுமுத்தும், மத்திசனியுடன்ருகுகேதுவிந்து வாரல்புகா குருமாலோடருக்கன்முத்துஞ், சுத்திடுமிராகுகேது சனிகுசனேவெள்ளி துலங்குமதிமாலிரவிகுருமுத்தாச்சே. (எஎரு)

ஆச்சிந்தகேதுசனிருகுவெள்ளி அம்புலிசெவ்வாயிரவிகுருபுதனேமுத்துஞ், வாச்சிந்தஅம்மூன்றுநடுமேலிட்டு வசியாகத்தலைமூன்றுமதின்கீழிட்டு, ஓச்சிந்தநடுமூன்றுமதின்கீழிட்டு உள்ளறைமூவொன்பதிலும்முறைகண்டேத்து, பேச்சிந்த விருபத்தா றிருபத்தேழில் வளமானதிராவகத்தால்சவுக்காரந்தானே. எஎகூ)

தானானசவுக்காரமிதுதானப்பா சாதகமாய்நூல்தோறுமொளித்
தார்சித்தா, வீணானபயல்களுக்குசொன்னாயானால் விண்ணிலிடிவந்
துதலைதெறிக்கும்பாரு, ஊனானநாய்போலே திரிதலைவாய்சொன்னே
னுண்மையாய்மனதில்வைத்துகைமுறையாய்ச்செய்து, தேனானசவு
க்காரஞ்சுன்னமாக்கிச் செயமாகும்யெட்டெட்டுங்கண்டால்நீறும். ()

கண்டாக்கால்வாதமெல்லாமடிகீழ்போற்றுங் கருவானசவுக்கார
மகிமைதன்னை, விண்டாக்கால்நசித்திடுவாய்நூல்கொடாதே வேதாந்
தஞானியென்றாலீயான்பாரு, தொண்டுசெய்வான்பதினாறு வருஷங்
காத்துச் சுப்பின்பவர்க்கீவாயப்பா, சண்டமாருதமபோலவெளியதா
கச் சாத்தினதோர்வயித்தியமன்பதுதானாட்டே. (எஎஅ)

நூல்சார்புவிப்ரம்ஐங்கோலக்குரு.

ஆட்டவேமுப்பூவின்மார்க்கஞ்சொன்னேன் அழகாககொங்கண
ர்தன்கருக்கள்சொன்னார், பூட்டவேகளிச்சுன்னஞ் சுந்தரானந்தர்
பொங்கியேஉப்பெடுக்கவகையாய்ச்சொன்னார், ஆட்டவேகயிலாசசட்
டைநாதர் ஆயிரத்தில்கைமுறைகள் அரைப்பின்பாகம், நீட்டவேமச்
சமுனிஎண்ணூற்றுள்ளே நிசமாகசுத்திமுறைசவுக்காரஞ்சொன்னார்

சொன்னார்கேள்கமலமுனிவாசமுனிதானும் சூத்திரத்தில்நாலு
நாம்வெள்ளையாகச்சொன்னார், சாத்திரமும்பதினெண்பேர்கள்சூத்தி
ரமும்பார்த்தால் சார்வாககருக்கள்மிகதோணும்பாரு, கண்ணாயிந்
தநூல்முன்னூல்க்கெல்லாம் கருக்குருவும்வெளியானகைமுறைதான்
பாரு, பன்னார்கேள்சுத்திமுறை யிருனூறுக்குள்ளே பகர்ந்திட்டேன்
ஐயங்கோலத்திறமிதாமே. (எஅ௦)

திறமாகவேள்விசெய்தாற்கோடாகோடி செய்தங்கேநீட்டிடவே
யோவதில்லை, திறமாகும்பூரணசூத்திரத்தைப்பாரு திட்சையொடு
கருக்குருவுஞ்செய்யலாங்கேள், திறமாகுங்களிச்சுண்ணங்குருக்கதா
கச் செப்புகிறேனையங்கோலஞ்சுக்கிரவாரம், திறமானகாய்வாங்கிசுத்
திகேளு சிறுநீருமீரெட்டுப்படிதான்பூவே. எஅக)

பூவோடுகூடன்சேர்வாகஞ்சேரு புழுகுநவாச்சாரங்கற்சுண்ணம்
போடு, நாவானதினாலேசொல்லாதேகேள் நன்றாகஅவித்துலர்த்தி
பதனம்பண்ணு, மாவாகயிடித்தெடுத்துமுப்பூவுஞ்செய்து மகிழ்வாக
முக்களஞ்சியிளவறுப்பாய்செய்து, வேமப்பாயெரியிடுநீதேனைவிட்டு
மெழுகுபோலானபதமிறக்கிப்போட்டே. (எஅஉ)

போட்டேகானுறவுசெய்துதேவிமுன்னேவைத்துப் பூசைபண்
ணிவடடுவெட்டாய்ப்பிடித்துலர்த்தி, காட்டாதேஒத்தருக்கும்லகிரிவ
டை களஞ்சிதான்மாலையிலேகொண்டால்கேளு, ஆட்டாதுபுலம்

பாதுவாசியேற மானந்தமானபரிபூரணத்திலூணு, நாட்டமாய்சிவ பதத்தை மனதில்வைத்துத் தூங்குநல்மறைவேமுத்தியடா நயனம் நாட்டே. (எஅஙு)

நாடாமல்சூடுகொண்டால்மேகங்கொண்டால் நன்றானமருந்து அனல்வீறுகொண்டால், பாடானசெந்தூரம்வெப்புகொண்டால் பரி வாகயிதுகளுக்கிழாழந்சொல்வேன், வேடானவறுகம்வேர்மிளகுங் கூட்டி வேகவேயெட்டொன்றாய்யிறுத்துவைத்து, மாடானபிச்சுவெ ண்ணெகூகைநீறு மாதளம்பூஅதிமதுரமரைத்துப்போடே. (எஅச)

போடப்பாயிந்தவகைஅஞ்சுதன்னைப் புகழ்ந்துநீகொண்டிடவே மூன்சொன்னதெல்லாந்தீரும், காடடப்பாபோவானேன்வயித்தியரே நீதான் கடையிலேபரங்கிவைப்புத்தேடுவானேன், வீடப்பாயிருந்து கொண்டுவயித்தியம்பாரு வேணுமென்றபொருள்கள்தரு மிக்தநூல் தான், ஆடப்பாயெட்டெட்டுஞ்சித்தியாகுமாதியென்றமுப்பூவிக்கின த்தைக்கூடடே. (எஅரு)

கூட்டவேதானன்றாய்வாசிதனிலேறி கூடவேசுழிமுனைக்கண் ணுலாடடி, ஆட்டப்பாமனதுருகிச்சிங்கிபூட்டு அப்பவல்லோபிரகாச மனந்தங்கோடி, நீடடப்பாயிந்தமுறைதொந்தங்கோடி நேரானசின் மயத்திலனந்தங்கோடி, பாடடப்பாயின்னதென்றுசொல்லப்போகா பனாயிருந்தபட்டணத்தின்ரூபந்தன்னை. (எஅசு)

கோரக்கர்மூலாடுடுலகிரி.

ரூபமென்றால் சிவப்டல்ல பச்சையல்ல உத்தமனேமஞ்சளல்ல வெண்மையல்ல, ரூபமென்றாலகறுப்பல்லபுகைமேகமல்ல வூணிப் பார்மனதிலின்னதென்று, ரூபமென்றாலடியல்லமுடியுமல்ல ஓகோ கோசிவரூபநன்றாய்த்தோணும், ரூபமென்றால்விளக்கொளியின் பிர காசம்போ லுண்மையதையறிந்தவனே தலைவனுமே. (எஅஎ)

தலைவனாயிருந்தவர்க்கேயெல்லாஞ்சித்தி சாராமலிருந்துவிட்டா ல்மடையனப்பா, அலையாமற்சொல்லிவிட்டேன்யோகசாதகம் அப்ப னேவிட்டகுறையாலேஎய்யும், மலையாதேயின்னூல்பார் தேறுந்தே றும் வயித்தியமுஞ்சித்தியடாவாதஞ்சித்தி, கலையானஆயிரத்தெண் கமலமீதில் கருணையாறேட்டிவருங்கொள்ளுகொள்ளே. (எஅஅ)

கொள்ளவேகோரக்கர் மூலிவட்டைக் குருவாகச்சூரணித்துக் கூடடக்கேளு, சொல்லுவேன்பலம்பத்துகோரக்கர் மூலி சூட்டுப்பில் யேற்றிவருயிளாஞ்சுதரந்தான் மெள்ளவேசூரணித்து யேலம்லமம் வெத்தியாமத்தம்விதைசாதிக்காயும், முள்ளபடிகாமப்பூவும் மிளகு கூட்டி முத்தக்காசுஅதிவிடையங்திப்பிலியுமாமே. (எஅகூ)

போமப்பாசொல்லுகிறேன் புலத்தியனேகேளும் புதுசாகஅபி ஷேகநிதிகள்தந்தால், ஆமப்பாபத்துக்குரெண்டுவீதம் அப்பனே மிஞ்சாதேமேலோடாதே, நாமப்பாஉள்ளபடிசொல்லிவிட்டோம்நம மிடமேல்குற்றமில்லைதீரும்ரோகம், ஓமப்பாசிவபதமேகிடடாதப்பா உற்பனமாய்சாபம்வந்துசண்ணுங்கேளே. (எகூ0)

பத்துக்குரெண்டுபணம்வாங்குவது.

கேளப்பாதோஷத்துக்கிரஞ்சுபத்து கெணிதமாய் சுரத்துக்கு ரெண்டுபத்துபணங்கேள், வாளப்பாசயமுதலாய் நீரிழிவுகாசம் வரி சையாய்மூணுபத்துபணமேகேளு, நளப்பாமருந்திட்டுமுக்கால்வா ங்கு நலமில்லாவுளவைபவுத்திரமாம்குஷ்டம், குளப்பாயிரஞ்சுபொ ன்னேவாங்கு துடியானதா துநஷ்டம்யிரஞ்சுவாங்கே. (எகூக)

வாங்குவாய்மேகமென்றசூலைக்கெல்லாம் வரிசையாய்பணம்பத் து அஞ்சுங்கூடடி, நீங்கிடவேபணமிருபத்தஞ்சுகேளும் நிலையில்லா சத்திகுன்மம் வயிற்றுவலிக்கெல்லாம், தாங்கிட மகோதரமும்ரெத் தபித்தம் தங்கத்தில்புத்துமுதல்கெற்பரோகம், பாங்குபெறப்பதினை ஞ்சுபணமேகேளு பழுதுசொன்னல் அவிஷதமும்கட்டிபோடே. ()

போடப்பாயிந்தமுறைபொருளேதந்தால் பூட்டல்லஅவிஷதங் கள்கொடுத்துதீரு கோடப்பாகொடியென்றரோகமெல்லாம் குறிப் பாகபாடுதற்குயென்னல்க்கூடா, தேடப்பாகிடைக்காது வயித்தியத் திற்கு சிரப்பளித்தமடடும்டாரோகந்தீரும், நாடப்பாநிதியாசை பி றியாதப்பா நாவினல்அவிழ்தவிலைசொல்லுவேனே. (எகூஙு)

சொல்லாதஅவிழ்தங்கள்தன்னைவேண்டி சோர்வில்லாயென்தே கப்வலுத்துப்போச்சு, எல்லாருமிப்படியேகொண்டாரானல் யேம மிறுத்துதட்டுமடாயென்றுசொல்லி, நில்லார்கள்வசைதப்புமென்று சொல்லி நிச்சயமாய்சாபம்வைத்தார் சாபந்தீர்த்து, வல்லார்நம்வாதி மகன்வயித்தியமேதீர்ப்பான் வணங்கிவந்தால் பிணியாளர்தகைத்துத் திரே. (எகூச)

தீரென்பான்உபசாரம்ரொம்பசொல்வான் தீர்ந்தவுடன்காற்காசு யீயான்பாவி, தீராதேபிணிதிரும்பி பெறுவயறுகொண்டு செகமெல் லாந்திரிந்தாலும்தீராதப்பா, தீராதசாபத்தால்பொருளுமற்று திரும் பிவந்துவயித்தியரேகும்பிட்டாலும், தீராதேநோயிதென்று கெணி தஞ்சொல்லு செப்பிடுவீர்அவனேயும்தேகமாமே. (எகூரு)

தேகவப்பாரோகமுற்ற தேகந்தன்னில் தீராதமேகமுண்டுசில பேருக்கு, மோகமுற்றபாவிகட்குசன்னியேழு மூத்தவயசாணபெண் ணைவேண்டினேர்க்கு, பாகமுற்றசனியெண்ணை வேண்டிக்கொண்டு

படுத்திருந்தோர்நீழிசுவுசயம்தீராது, யேகமாய்பாடிவிட்டார் தன்வந்திரிநூலும், யென்னூலும்பாடவுந்தானினிக்கூடாதே. (எகசு)

கூடாதுவாயுவப்பாநாபின்கீழே கூண்டெரியும்பித்தமடாகண்டத்தின்கீழ், மூடாதசிலேட்டுமெந்தான்பிர்மமண்டத்துள் மூவருமேவிகற்பமிட்டால்வீடுபோச்சு, நாடானதரிதரித்துபிழைக்கமாட்டார்நன்ருகயென்னூலைப்பார்த்தபேர்க்கு, கோடானகோடியென்றகாலமெல்லாம் கொள்ளுமடாவீடகலாதிருப்பர்தானே. (எகஎ)

தாம்பூலமகிமை.

இருப்பதற்குயென்னூலின் படிசெய்தாக்கால் யெண்ணைக்கும் எம்மிறத்துயில்லைப்பாரு, நரிப்பாலுஞ்சர்க்கரையும்போலப்பேசிநாடிவைத்தாரிக்குடும்பம் நாயேனென்பார், வெறுப்பாகும்நோய்தீர்த்தால்கண்டால்பேசார் வெகுஅதமம் சண்டாளர்விழலாந்தேகம், சிரிப்பார்கள்பிணிதிரும்பிஅலைந்தலைந்து தீராதுதீராதுதிறந்துபாரே. ()

திறந்துபார்வயித்தியற்கும்பெரியோருக்குத்தினமளித்தால்தாம்பூலம்நோய்கள்தீரும், திறந்துபார்நிதிகோடிதற்மஞ்செய்வோர் செகமெல்லாமறிவார்கள்தம்பூலத்தை, திறந்துபார்தாம்பூலமில்லாத்தற்மம்செகத்தினிலேஅளிப்பதுண்டோசிறப்புமுண்டோ, திறந்துபார்தாம்பூலமகிமைசொல்ல சிவசிவாசிவசத்திசித்தியாமே. (எகக)

சித்தியார்தாம்பூலமளித்தபேர்க்கு சிவபதமுந்தவயோகந்தினமுமெய்தும், பத்தியாமறிபஞ்சபூசமெல்லாம் பரமாகித்தாம்பூலமளித்தபேர்க்கு,முத்தியாம்அவிஷதங்கள்சித்தியாகும் முன்னளித்ததாம்பூலத்தாலேயப்பா, நித்தியமுமன்னமுண்டுதாம்பூலமீந்தால் நீங்காத கற்மமெல்லாம்நீங்கிப்போமே. (அ௱)

{ சரக்குசுத்திசூதசித்திகுளிகைகட்டமஞ்சள் (ஓட்டடைநாகவல்லிச்சாறுதாலமூநீர்.) }

நீங்கிடவேசரக்குவகைசுத்திகேளு நிகரில்லைஒருசுத்தியிதுக்குமொவ்வா, தாங்கிடாரோகமெல்லாந்தீரும் தயங்காதவாதபித்தம்கபமுந்தீரும் ஆங்கிடவேபழமலங்கள்குற்றந்தீரும் அல்லாமல்கிறிச்சினங்கள்வாந்திதீரும், வாங்கியிடும்ரெத்தசலம்கடுப்புந்தீரும வாகானமருந்தினுடசுத்திதானே. (அ௱க)

தானப்பாசூதத்தின்சுத்திசொல்வேன் தாக்கானகல்வத்தில்சூதம்பாரு, தோணப்பாமஞ்சத்தூள் ஒட்டடையின்தூளும் சொல்லரிபநாகவல்லிச்சாறுவிட்டு, ஊணப்பாவெவ்வேறேமத்திச்சக்கால் உத்த

மனேதிறிக்குகைஊதிப்போடு, பூணப்பாதாழைநீர்வாழைநீரும் புக ழுயர்ந்தசெம்பருத்திபூவின்சாரே. (அ௱உ)

சாருகும்வெற்றிலையும்பழுபாகற்கிழங்கும்தனிச்சாறும்ஐங்கோலச்சாறுங்கூட்டி, வாருகும்அம்மான்பச்சரிசிச்சாறும் வாயுவரும்சாரணைச்சார்அரசப்பட்டை, கூருகும்கொண்ணையுடப்பட்டைசாறும் கொத்தோடேழும்மூன்று கடிகைமாற்றி, வாருகயிப்படியேமத்திச் ச க்கால்வாலைப்பிரகாசமாய்வருகும்பாரே. (அ௱௩)

பாரப்பாயிருபத்துஅஞ்சுசுத்தி பாடுகிறேன்திரிபலையும்திரிகடுகுழமம், சீரப்பாமரமஞ்சள்கற்கண்டுசர்க்கரையும் சீரான சம்பழமுமுந்திரிகையுடனே, பேரப்பாகொம்மட்டிபொன்முசுட்டை நன்னாரிபுளியாரைகொடுவேலிமணத்தக்காளி, சிறப்பாகத்தாழைவாய்விளங்கங்கெந்தகம் சீர்கருஞ்சீரகமும்கோஷ்டமாமே. (அ௱௪)

கோஷ்டமுடனுயுருவியிருபத்தஞ்சுங் கூருன்னீர்கொண்டுகிஷாயஞ்செய்து, ஆட்டமுடன்மூன்றுகடிகைமாற்றி அப்பனேவெவ்வேறேசெய்தாயானல், ஊட்டலாங்குளிகைக்கும் அவிழ்தத்துக்கும்உத்தமனேவேதையாம்நோயுந்தீரும், பாடடெல்லாஞ்சூதத்தாலல்லோ சித்தர்பாடினூர்நூல்தோறும்பாடினரே. (அ௱௫)

பாடினதோர்பெரியகாரஞ்சுத்திகேளு பண்பானமேதியுடசாணந்தன்னில், மூடியேசலத்தைவிட்டுஅலம்பிப்போடுமூண்டுவருங்கதிர்தனிலேஉலர்த்திக்கொண்டு, நாடிநின்றமனேசிலையின் சுத்திகேளு நறுக்கடாபணம்போலேநன்றாய்நீயும், மூட்டினதோர்கிழிகட்டிஆட்டுநீரில் மூதிரவேடோளேந்திர மெரித்துவாங்கே. (அ௱௬)

எரித்திடுவாய்ரசம்வைத்ததண்ணீர்விட்டு எரித்திடவேமனேசிலையின்சுத்தியாச்சு, மரித்திடுவாரில்லையப்பாதுரைகட்கெல்லா மகத்தானதாளகத்தின்சுத்திகேளு, பரித்திடுவாய் தாளகத்தைப்பணம்போல்வெட்டி பருஞ்சீலைதனைமுடிந்துகிழிதான்கட்டி, அரிந்திடுவாய் டோளேந்திரங்கோமியத்தில் அப்பனேகடியாலவித்திடாயே. ()

தந்திவிரைசுத்திவாளசுத்தி.

அவித்திடுவாய்சுரையினிற்கூழ்பாண்டர்தில் ஆவின்பால் ரசம்பட்டைக்கியாழந்தன்னில், அவித்திடுவாய் மூன்றுதினம்ஊறப்போட்டு அரகராதாளகமேசுத்தியாச்சு, அவித்திடவேதந்திவிரைசுத்திகேளு அடவானஉவற்கரைந்துநனையப்போடு, அவித்திடுவாய்மூன்றுதினம்நனையச்சுற்றி அவலாமல்குமரியுடமடலைவாங்கே. (அ௱அ)

வாங்கியேவாளமிட்டுசாணிபூசி வாகானமேதியுடசாணியாகும், தாங்கியேசீலைசுற்றிபுடத்தைப்போடு தாரணியில்தசதீட்சைபத்துஞ் செய்து, நீங்கிவிடும்குற்றமெல்லாம்போகும்பாரு நெறியாகசுத்திதனை மறைத்தாரையா, பாங்குசெய்தவாளமதையெடுத்துநன்ருய்ப் பதம் பெறவேசலத்தைவிட்டு அலம்பிப்போடே. (அளசுகூ)

போட்டுநீரவிமுகத்திலுலர்ந்தபின்பு புகழானமேதியுடசாணி தன்னை, மூட்டுநீசலமதிலேகரைத்துநன்ருய் மூடிவிட்டுவாளமதை யெரித்துவாங்கி கூட்டுநீயோரண்டமிடித்துப்போட்டு குருவானவா ழையுடசலத்திற்போட்டு, கோட்டுநீஅக்கினியில்பிரளவற்ற கெடிதச னகுற்றமெல்லாங்குடிதான்போச்சே, (அளய)

போச்சென்றகுற்றமெல்லாமெங்கேபோச்சுபுகழானசித்தரையா ஒளித்தமார்க்கம், நீச்சென்றகுற்றமெல்லா மென்போலார்தீர்ப்பார் நெறியாகநூல்வழியேசொல்லாரையா,பாச்சென்றவாளமதைவறுத்து வாங்கி பாங்கானதொருமுனைநஞ்சுபோக்கி, ஆச்சென்றகமலையுடபா லுதன்னில் அட வாககடிகைஅஞ்சுஉலர்த்திச்சேரே. (அளயக)

சேர்த்திட்டகும்பமுனிநவசித்தாதி திரைகொண்டகுளம்பதனை சொல்லக்கேளு, யோர்த்திட்டஅரசருக்கும்குழந்தைக்காகும் யெதி ரில்லாவேதியற்கும்பூசுரர்க்கும், கூர்த்திட்டமனிதருக்குஅனுபானங் தன்னில் கொண்டவேபிணிதீரும்குற்றமில்லை, பார்த்திட்டவேதாந்த குளம்புதன்னைப் பரிவாகக்கொண்டுநீபிணியைத்தீரே. (அளயஉ)

தீர்ப்பதற்குரசமெடுத்துபதங்கம்வாங்கிப் திசைகண்டங்காரியு டமூலமாகும், ஏற்பதற்குசுத்திசெய்யமருந்தையெல்லாம இயல்பான யிடைபாகமறிந்துபோடு,கூற்பதற்குபதங்கமொன்றுசிலையிமொன்று கூறறியதாரமொன்றுகாரமொன்று, வீற்பதற்குயிங்குவுடன்கடுகுகா யம் விறவானகருஞ்சீரகம்திப்பிலியுமாமே. (அளயங)

ஆமென்றநவமருந்துகழஞ்சிஒன்று அடவாகவகைவகைநிறுத் துக்கொண்டு, வேமென்றகல்வத்திலரைத்துசாமம் வெண்மையென்ற சரக்கெல்லாமரட்டிப்பின்பு, ஓமென்றசுத்திசெய்தவாளந்தன்னை ஒவ் வொன்ருய்க்கொடுத்துவாமெழுகுமட்டுஞ், சேமென்றபதந்தனிலே பாட்டிவாங்கிச் சேர்ந்தோடும்ரோகமெல்லாமகன்றுபோமே. ()

போமென்றசித்தாந்தக்குழம்புதன்னில் பூட்டவில்லைசுத்திகளை மறைத்துச்சொன்னேன், ஆமெனவேதாந்தசுத்திசெய்து ஆச்சரியங் குழம்புதன்னை அறியமாட்டார், நாமெனவேபேருமிட்டு லோகந்தன்

யென

னில் நன்ருகவிஷங்களைத்தான்கழற்றிப்போட்டேன், வேமெனவே மூன்றுவகைநாடிதோஷம் வேரோடேமுடிந்துதடா அறிந்துபாரோ()

அறிந்துபார்சன்னிபேய்விஷத்துக்காகும் அடங்காதவாதபித்தம்கபத்துக்காகும், அறிந்துபாரத்தசலம்கடுப்புமேகம் அடரானவலிசத்திநீரடைப்புக்காகும், செறிந்துபார்மலடிக்கும்பிள்ளைக்காகும்செயபரங்கிபுத்துமுதல்மூலந்திரும்செறிந்துபாரடங்காதுயின்னமுண்டு செய்யடாவனுபானம்வெவ்வேருமே. (௮௱௰௬)

வேறு.

ஆமேவாதமிஞ்சிச்சார் அடுத்தபித்தங்கடுக்காயாம்
போமேசகலவாயுவதுவும் பொருந்துசுக்குநீர்வாதம்
ஆமேபித்தவாய்வதற்கு ஆவின்பால்கடுக்காயாம்
போமேகுளிருஞ்சுரந்தனக்கும் பொருந்துமிளகுதன்னிலிட்டே. ()

வேறு.

ஒன்ருனகுருமுடித்தமார்க்கமெல்லாம் ஓலையிலேயெழுதிவைத்தேன்குருவைப்பார்த்தேன், அன்ருடகுருமுடிந்த வார்த்தையெல்லாம் அடியோலைக்கட்டியதுசொச்சம்பாரு, வண்டானதும்பியதுரசனையுண்டு வசங்குமப்பாஓலையிலேயீயேயாகும், சென்ருனஓலையிடுதாளெழுத்துவாசி சிறப்பானயீயெழுத்து அஞ்சுமுத்தே (௮௱௰௮)

காரம்.

காரமென்ருல்கல்லினிடகல்லோகாரங் காரத்திற்குங்காரமேறவென்ருல், காரமதுபூநாகமெடுத்துவந்து சாதகமாநீராலேயேமுசுத்தி, மாரகத்தின்நீராலேயேமுசுத்தி மகத்தானவஸ்துவிளுலேமுசுத்திசீராகத்தேசியுடவமுரிதன்னில் சிறப்பாகயேமுசுத்திபாருபாரே. ()

பாரார்களாயிசொன்னபடியேபார்த்தேன் பாங்காகயின்னுலுசலத்திற்கொஞ்சம், சீராகயெழுத்துடனேயோர்பீங்கானில் சிறப்பாகவிட்டொருநாள்ரவியில்வைத்து, காராகுங்காரநீர் தன்னில்நன்ருய்கல்லைநீதுவைத்துதான்வாட்டுவாட்டு, ஆராலுமுடியாதுயிந்தகாரமப்பனேஅறிந்துநீயடக்குவாயே. (௮௨௰)

வாய்ப்பாகக்கல்லைநன்ருயெடுத்துக்கொண்டு மறுபடியுமுன்னுப்பையரைத்துப்பூசி, தாய்ப்பாகப்பூநீறுகீழ்மேலிட்டுச் சாதகமாய்முழப்புடத்தில்போட்டுபின்னும் காய்ப்பாகச்சாரத்தை யிப்படியேசெய்து கைமுறையாய்ப்புடம்போட்டுயெடுத்துக்கொண்டு, செய்யப்பாரெண்டையுந்தானரைத்துவைக்கச் செயநீர்தாளுகுமப்பாசிவந்தாளுச்சே. (௮௨௧)

ஆச்சப்பாமுன்னீரில்முன்னுப்பைத்தான் அனைத்தங்கேவில்லை கட்டிபுடத்தில்போட்டு, பாச்சப்பாயுப்பதனைப்பின்னும்நீரில் பருவமதாயனைத்து வொருபுடமேசெய்து, நீச்சப்பாயிதினுடையநீச்சேயல்லால் நிலையாதுமற்றதெல்லாம்நிசமேசொன்னேம், பேச்சேதுயிடைவிட்டால்காரவித்தை பிலக்காதுவாதமெல்லாம்பிழையதாமே.()

தானென்றஉப்பதனைசெயநீராலாட்டி சாரத்திற்கவசமதுபோடுபோடு, வானென்றகல்லுப்புக்கிப்படியேபோடு மறுச்சதையெடுத்துநன்றாய்ப்புடமேபோடு, தேனென்றயிருசரக்கும்கூட்டியாட்டச்செயநீரால்சுத்தசலமதுவுன்னமாகும், ஊனென்றசரக்கெல்லாமிதினுல்சாகுமுத்தமனேதுருசிட்டுசாபம்வையே. (அ௨௩)

வையப்பாசமாதிதனில்நாற்பதுநாள் வைத்திருந்துமறுபடிதானெடுக்கும்போது, செய்யப்பாபராபரைக்குவடுகனுக்கும் திரவிவஸ்துசுத்தியுன்பூசைசெய்து, கையப்பாயெடுத்துநன்றாய் தொழுதுநின்றுகனகந்தாவென்றுசொல்லிக்கேட்டுக்கொண்டு மெய்யப்பாசமாதிதனைத்திறந்துவாங்கிமெய்க்கவேதுருசுநன்றாய்ரவியில்போடே. ()

போட்டிடவேதுருசுசொன்ன வெளுப்பேபாரம் பூலோகமுடியாதுபூரணமாம்வித்தை, காட்டிடவேயெண்ணுதுகாராசாரங் காட்டினுல்கண்டுதெரிக்குங்கருவைச்சொன்னல், நீட்டிடவேயிதின்மேலேகாரமெத்த நிசமாகச்சொல்லுகிறேனினிவாய்க்கேளு, மூட்டிடவேமுன்னுப்பும்புழுகினேடு புரமுரமும்வண்டுவெடிசூடன்தானே. (அ௨௫)

சூடனெடுமுன்துருசுஞ்சரக்கெல்லாங்கூட்டி சுருக்கானமுந்நீராலனைத்துநன்றாய், பாடனமாம்வில்லைகட்டிரவியில்வைத்து பாங்காகஅஞ்சுன்னகுகையிலிட்டு, தேடரியசிந்தூரத்தாலூதியூதித் திறமாககுகைபழுக்கச்சுன்னமாகும், நாடரியசுன்னமதையெடுத்துக்கொண்டு நாட்டுவாய்சூதமொன்றிலோடும்போமே. (அ௨௬)

போட்டவுடன்சூதமங்கேவிளைந்துபோகும் புகழானநாகந்தான்விளைந்துபோகும், காட்டினுல்பாஷாணங்கட்டிப்போகும் கலந்துகொண்டால்தானகமேயியமாகும், மீட்டவேமனேசிலைதான் வெந்துசாகும்மூதண்டவீரமங்கேமடங்கிப்போங்கும்மாட்டவேயிதைக்கொண்டுசரக்கையெல்லா மைந்தனேவேதைக்குவழிசொல்வேனே. ()

சொல்வேனென்சூதமொடு தங்கங்கூட்டி சுகமாகவுருக்கையிலேகளங்கமாகும், வெல்வேனென்நாகமதுகொடுக்கையிலேவாங்கும் விள

யாமல்கெந்திதனைக்கொடுக்கவாங்கும், மல்லுறவேலோகமங்கே லுரு மாப்போடு வடிவானகளங்கத்தைவாங்கிக்கொண்டு, நல்லுறவேசெம் புவெள்ளிக்கொருமாவீய நாட்டினேம்மாத்திட்டுநவின்றிடாதே. ( )

நவின்றிடாநாகத்தைச்செந்தூரிக்க நாதாக்கள் வழலையைத்தா னெடுத்துக்கொண்டு, பவின்றிடாமுருக்கம்பூகீழ்மேலிட்டு பாங்கான பின்புரசம்பிப்படியேபோட்டு, கவின்றிடாபூநீற்றைக் கீழ்மேலிட்டுக் கனக்கவொருசெங்கல்லால்மூடிப்போட்டு, மவின்றிடாச்சீலைமண்தா ன்செய்துக்கொண்டு வாகாகப்புடமிடவே செந்தூரமாமே. (௮௨௯)

செந்தூரங்கொடுப்பதற்குவகையைக்கேளு செயபபடுத்தும்வீர மொடுபூரங்கூட்டி, அந்தூரச்சரக்குரெண்டும்பொடித்துக்கூட அப பனேகூடவிட்டுக்கலந்துகொண்டு, தந்தூரவெள்ளிகொண்டொருமா வீய தாரணியில்வயதுபதினாறுபிள்ளாய், தந்தூறுமாத்தாளைப்பூசித் தாக்கால் நாட்டுவாள்வேதையிட்டு நடத்திப்பாரே. ௮௩௰)

வேறு.

இடுவாய்சன்னிக்கிஞ்சியதா . இடுவாய்கண்ணில்சூசனஞ்செய், இடுவாய்பேய்க்குவெத்திலையில்வியனுய்க்கொடுத்து அஞ்சனஞ்செய், கெடுவாய்பித்தசுரங்கடுக்காய்க்கேளேதிப்பிலிதாபசுரம், அடுவாய்மு லைப்பால்நசியமிடு அழண்டவொருத்தலைவலிபோமே. (௮௩௧)

நீரும்வியாதிகள்பேர் அனுபானம்.

போமேகண்ணேய்மிகத்தீரப்பொருந்து முலைப்பால்கண்ணீலிடு ஆமேயிடித்துக்கஞ்சனஞ்செய் அடர்த்தேவெற்றிலைக்கிம்மருந்து, தா மேயிடியும்பேய்தனக்குதலையுஞ்சீலைதிரியெடுத்து, நாமேயெலியின் கடிதனக்கு நன்றாய்நீலிச்சாற்றிலிடே. (௮௩௨)

வேறு.

சர்ருகுங்காடியுடயிளரீராகும் சாதகமாய்வெள்ளரிக்காய் நீர டைப்புதீரும், வேருகும்கடுக்காயின்கியாழந்தன்னில் வெறுண்டிடு மேயிருமலுடன்காசந்தீரும், கூற்குஞ்சத்திக்குகாடியாகும் கொள்ள டாசலக்குப்புபாலேதீர்க்கும், பேருகுமூலத்தில்வாயுவென்றால் பெ ருங்குமரிரசமதிலேகொடுக்காநன்றே. (௮௩௩)

கொடுத்திடவேரத்தமொடுகடுப்புநெய்யாம் கொள்ளடாமலடிக ட்குப்பாலேயாகும், அடுத்திடவேவெள்ளாட்டுப்பாலிலிட்டா லள வில்லாகெற்பவிப்புருதிக்கெல்லாம், தெளித்திடவேஅரசனுட கொ ழுந்தரைத்து சேர்வானதண்டுகட்டுபாலிற்றீரும், எடுத்திடவேவிளக் கெண்ணை ஆட்டின்பாலும் யேகுமடாவாயுவுடதிரட்சிபோமே. ( )

திரண்டமகோதரமுடன்வெப்புப்பார்வை செயநீராமாமையொ டுகூகைவீக்கம், வறண்டசன்னியுள்விச்சுப்பிறவிச்சுந்தான் வலுவா னதனுர்வாதமிடுப்புவாதம், நெருண்டதொருவெள்ளுள்ளி அரைத் துத்தானும் நேராகக்கொடுத்திடவேதீருமின்னம, அருண்டதொரு களச்சியிலேச்சாறுமாகும் அல்லாமல்வயிறுவலியொக்கப்போச்சே. ()

போச்சென்றசூசிகாவாயுச்சூலை பொல்லாதவலிகுன்மம்நொச்சி ச்சாறு, யேச்சென்றகழல்வாதம் அண்டவாதம் யெடுத்திடுவாய்பே ரண்டம்வெல்லம்இஞ்சி, ஆச்சென்றதேங்காயின்பாலுமாகும் அதுகளி லேவெவ்வேறுயெடுத்துசெவ்வாய், காச்சென்றமண்டையுறுவியாதிக் கெல்லாம் கடுமிஞ்சிச்சாற்றிலிட்டுப்புகையுமேத்தே. (அ௩சு)

ஏத்தியதோர்படுபெருவன்பு ுவையனையாப்பு யிணங்காதமூலைக் குத்துசிரங்குதானும், சாத்தியதோர்உமிநீரும்வெள்ளையுள்ளி சாதக மாயரைத்தங்கேகொதிக்கவைத்து, சேர்த்திட்டுமெருந்திலே கூடப் போட்டு திடனுகப்பூசியிடபிளவைமுதல்தீரும், கோர்த்திட்டமகோ தரத்துக்கின்னஞ்சொல்வேன் கொடியதொரு அகத்திநிலச்சாறுமா மே. (அ௩எ)

நிலத்துள்ளோர்க்கெத்தனைதான் சொன்னுலுமைந்தா நேராது பொய்யென்பார்உலகமாண்பர், நிலத்துள்ளோராலுதலங்காணமாட் டார் நிசமானசமாதியிலேயுரைக்கமாட்டார், நிலத்துள்ளோர்மாய்கை யிலேஅழுந்திமாதர் நினைவுக்குள்கலந்துநிற்பார்சையோகித்து, நிலத் துள்ளோர் அமுர்தத்தைப்பானம்பண்ணுர் நிலையார்கள்குருபதத்தை நேராய்க்காணே. (அ௩அ)

நேரார்கள்காயத்தைசுத்திபண்ணுர் நெடியதொரு அஞ்சுவகை திட்சைகேளார், பாரார்கள்வாதத்தைஊடுபாய்ந்து பாலகனேகுளி கையிட்டுகெவுனம்போகார், சேரார்கள்ஆயியுடவோமத்தில்தானும் செகத்திலேபூசைசெய்வார்தீட்சைவேண்டி வாரார்கள்அறுவரையும் தன்னைவிட்டு மைந்தனேகொல்லாதேமகிழ்ந்துபாரே. (அ௩கூ)

பாரப்பாயிந்தவிதஞ்சொன்னரில்லை பரிவானநாதாக்கள்சொல் லார்சொல்லார், நேரப்பாயெனக்குரைத்தாளாயிதானும் நிலையான மூன்னூலில்சொன்னரில்லை, காரப்பாவிஷங்கடிக்கு சொன்னேன்பா ரு கண்டுசொன்னேனூறுகவிமார்க்கமாக, பாரப்பாயிந்தமுறையொ ளித்தார்சித்தர் மைந்தனேசபித்திட்டேன் சபித்திட்டேனே.(அசம)

சபித்திட்டவிதங்கண்டு ஆதிசித்தர் சார்ந்தேவல்செய்வார்கள் அனேகங்காலம், பவித்திட்டகுளிகைமுதல்யாதென்றாலும் பாலக னேகேட்டதெல்லாமீவாரீவார், குவித்தநூல்வைத்திருந்தேன்மனது நொந்தால் கூடாதுசித்தியொன்றும்புண்ணியமேயன்நீதம், பவித்த

வர்க்குக்கிடைப்பதல்லால்மற்றோர்க்கிட்டார் பார்ப்பதற்குயெளிதா னபாதைபாரே. (அசக)

எளிதாகயிந்தநூல்வாராதப்பா யிந்தகலியுகந்தனிலேநூற்றுலொன்று, தளிவாகவெளிவாருச்சாபம்போட்டேன் சர்க்குணர்க்குகிடைப்பதல்லால்பாவிகட்கிட்டா, சுளுவாகயிந்தநூல் பெருகாவண்ணம் சுந்தரமேவெகுபதனம் சொன்னேன்சொன்னேன், வளிவானநாதாக்கள்கருவைச்சொன்னேன் மைந்தனேசொல்லாதேமகிழ்ந்துதானே.

தானென்றஆதிமுதல்சரக்கைக்கேளு தரணிதனில்பிறக்குகின்ற உப்பினோடு, ஊனென்றகல்லுப்புரெண்டுபங்கு உத்தமனேபழச்சாறும்தயிரும்வாரு, கோனென்றபாண்டத்தில்விட்டுமூடி குறிப்பாக புறந்தன்னில்சாணியப்பு, ஆனென்றஆவினுடபதியில்தாக்கி அப்பனேமண்டலத்தில்சினமாச்சே. (அசஙு)

ஆச்சப்பாசினத்தால்சூடணுச்சு அதிர்ந்துநின்ற வெண்காரப்பலகையாச்சு, நீச்சப்பா தூரிசோடுபாஷாணமாச்சு நேரானசரக்கெல்லா மிதிலேகோடி, பாச்சப்பாவாதத்துக்காதிபீடம் பண்பானவழலைக்குமாதிபீடம, போச்சப்பாவாதமென்ற வேதைதாண்டி புண்ணியனே கைமுறையாய்ப்புகழ்ந்துசெய்யே. (அசச)

செய்திடுவாய்வெங்காரப்பலகைதானுஞ் சிறந்துநின்றபூரத்தின் வைப்பைக்கேளு, கைதிடுங்கஞ்சனிடணுதத்தில்நாதங் களாயானசினமதுகாலுங்கூட்டி, அய்திடுவாய்ஆதித்தன்மூலமோடு அரிதானசிதம்பரத்தைபானம்பூட்டி, ஓய்திடுவாயெரித்திடுவாய்சாமந்தன்னில் உத்தமனேசூடனதுஉகந்துபாரே. (அசரு)

சூடன்ரவிபீசம்.

பாரப்பாரவியினுடபீசமென்பார் பராபரமாம்வித்தையிதுசூடன்வித்தை, நேரப்பாபூரம்விட்டால்வாதம்போச்சு நிலையானசுன்னத்தில்கோடாகோடி, சேரப்பாகுளிகைக்கும்ஆதிமூலம் சேர்ந்துநின்ற காயசித்துக்காதிபீடம், காரப்பாபூரத்துக்காதிபீடம் களைகாணுவெங்காரவைப்பைக்கேளே. (அசசு)

வைப்பானல்வணத்திலாண்டுகூட்டி மைந்தனேபடிக்கமதுபேரண்டந்தானும், நைப்பானகுன்றிமணியுளுந்தின் தூளுமநலமானகள்ளிப்பாலலைாத்துக்கிண்டி, நெப்பானபாண்டத்தில்சரக்குகோடி நேரானமால்தேவிக்கிளையாள்க்கியந்து, ஒப்பானமண்டலத்தில் வாங்கிணுக்கால் லுற்றமதுபலகையதுஉடைத்துவாறே. (அசஎ)

வெங்காரம்சுக்குவெங்காரவெள்ளை.

வாரானகாரத்தில்சரக்குகோடி மைந்தனேஉருக்கினமேகோடாகோடி, தேரானதூம்புரமுதல்வேதைகோடி சேர்ந்துநின்றசத்துவ

கைகிணத்தில்கோடாகோடி, கூரானசுன்னத்தில்கோடாகோடி கொடியதொருசெயநீறுமெழுகுகோடி, தாரானயின்னமொருவகையைச் சொல்வேன் சாத்தரியவெங்காரச்சவுடிதானே. (௮௪௮)

தானுனஉளுந்தினுடமாவில்தானும் தனித்தெழுந்தயிணங்கனுக்குசினமரெண்டு, ஈனுனகள்ளிப்பால்விட்டுநன்று யிடமாகப்பாண்டத்திலிட்டுமூடி, கோனுனசாரத்திலணித்திமைந்தா குறிப்பானமண்டலந்தான்கடந்துவாங்கு, கானுனதுய்யநிறம்வெங்காரமாச்சு கருதிப்பாரிதையரியார்கலந்துசேரே. (௮௪௯)

